# இஸ்லாமும் அதன் அடிப்படையும் .

மொழி பெயர்ப்பு
அப்துல் கபூர் முஹம்மது ஜெலீல்

இஸ்லாமிய அறிவியல் ஆய்வு மைய வெளியீடு .

**أركان الإسلام باللغة التاميلية**

# இஸ்லாமும் அதன் அடிப்படையும்

## முன்னுரை

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமான அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கின்றேன் ..

புகழனைத்தும் ஒரே இறைவனான அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும் . ஸலவாத்தும் ஸலாமும் இறுதி நபியாகிய முஹம்மது நபி ( ஸல்) அவர்களுக்கு உண்டாவதாக .

இஸ்லாமியக் கல்வியைப் பொறுத்த வரை அதனை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதன் மூலமே மக்கள் இஸ்லாத்தை அதன் உண்மை வடிவில் அறிய முடியும் . ஏனெனில் மக்கள் இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொள்வதிலும் அதன் போதனைகளுக்கேற்ப வாழ்வதிலும் , மக்கள் மத்தியில் மிகப் பெரிய இஸ்லாமிய எழுச்சி ஏற்பட்டிருப்பதிலும் இஸ்லாமிய த.:.வாப் பணி மிகப் பெரிய பங்களிப்பைச் செய்துள்ளது.

இந்த இலட்சியத்தை செவ்வனே நிறைவேற்றும் நோக்கிலேயே மதீனாஇஸ்லாமியப் பல்கலைக்கழகம் இலவச இஸ்லாமியக் கல்வி , இஸ்லாமிய அழைப்புப் பணி போன்றனவற்றை பல ஆண்டுகாலமாக தொடர்ந்து வருகின்றது . இதற்காக பல்கலைக் கழகத்தின் “ இஸ்லாமிய கல்வி ஆய்வு மையம் “ பல்வேறு வெற்றிகரமான அறிவியல் திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்தி வருகின்றது . அந்த வகையில் இஸ்லாத்தின் கொள்கை , அதன் அழகிய முற்போக்கு சிந்தனைகள் , சட்ட வரையறைகள் போன்றவற்றை முஸ்லிம் சமூகம் சரிவர அறிந்து பயன்பெற

வேண்டுமென்பதற்காக அவற்றை ஆதாரப் பூர்வமான முறையில் தொகுத்து வெளியிட்டு பிரச்சாரம் செய்து வருகின்றது .

இதோ உங்கள் கரங்களில் தவழும் " இஸ்லாமும் அதன் அடிப்படையும் " எனும் இந்த ஆக்கமும் எங்கள் இஸ்லாமிய கல்வி ஆய்வு மையத்தின் திட்டங்களின் பிரதிபலிப்போயாகும் . மேற்படி தலைப்பில் ஒரு ஆக்கத்தை எழுத வேண்டுமென்ற கருத்தைப் பல்கலைக் கழகத்தின் போதனாசிரியர் குழு முன்வைத்த போது அது ஏற்றுக் கொள்ளப்பட்டு இஸ்லாமிய அறிவு ஆராய்ச்சி மையத்திற்கு அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதுடன் தெளிவான முறையிலும் , அல்குர்ஆன் அஸ் ஸுன்னா ஆதாரங்களுடன் , இலகு நடையிலும் இப்பணி செய்யப்பட வேண்டுமென ஆலோசனையும் கூறப்பட்டது . அதற்கேட்ப உலக முஸ்லிம் சமூகம் அனைவருக்கும் இக்கல்வி சென்றடைய வேண்டுமென்ற நோக்கில் இப்புத்தகத்தை பல்வேறு உலக மொழிகளிலும் பெயர்ப்புச் செய்து அதனை ( இன்டர் நெட் ) சர்வதேச வலைப்பின்னலிலும் இடம்பெறச் செய்வதென இஸ்லாமிய கல்வி ஆய்வு மையத்தால் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

எனவே இப்பணி நிறைவேறுவதற்கு சகல வழிகளிலும் ஏற்பாடுகளைச் செய்து தந்த சவுதி அரேபிய அரசுக்கு அல்லாஹ் அருள்பாலித்து அது மேற்கொண்டு வரும் இஸ்லாமிய அறப்பணிகள் அனைத்தினையும் செவ்வனே நிறைவேற்றுவதற்கும் , மென்மேலும் விஸ்தரிப்புச் செய்வதற்கும் இஸ்லாத்தின் கண்ணியத்தைக் காப்பதற்கும் அல்லாஹ் அருள் பாலிப்பானாக . அவ்வாறே இதற்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் நல்கிய பல்கலைக்கழக

# இஸ்லாமும் அதன் அடிப்படையும்

நிர்வாகத்திற்கும் அல்லாஹ் நல்லருள் புரிவானாக .

மேலும் இப்புத்தகத்தின் மூலம் முஸ்லிம் சமூகம் பூரண பயன் பெறுவதற்கும் இஸ்லாமிய அறிவாராய்ச்சி மையத்தின் ஏனைய செயற்திட்டங்கள் செவ்வனே நிறைவு செய்யப் படுவதற்கும் அல்லாஹ் அருள் புரிவானாக .
அல்லாஹ் எம் அனைவரையும் நேர்வழியின் அழைப்பாளர்களாகவும் , சமூகத்தின் காவலர்களாகவும் ஆக்குவானாக .

வஸல்லல்லாஹூ அலா நபிய்யினா முஹம்மதின் வஆலிஹீ அஸஹ்பிஹீ அஜ்மஈன் .

.வஸ்ஸலாம்.

இஸ்லாமிய கல்வி ஆய்வு மையம்
இஸ்லாமிய பல்கலைக்கழகம்
. மதீனா .

# இஸ்லாமும் அதன் அடிப்படையும்

## இஸ்லாத்தின் முதலாவது கடமை.

**வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அவனுடைய திருத் தூதராயிருக்கின்றார்கள் என்றும் சாட்சி சொல்லுதல் .**

இவ்விரண்டு வாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே ஒருவன் இஸ்லாம் எனும் கோட்டைக்குள் உட்பிரவேசிக்கின்றான். இஸ்லாத்தின் கடமைகளில் இதுவே மிகவும்

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

முக்கியமானதும் அடிப்படைக் கடமையுமாகும் .எனவே ஒரு மனிதன் இவ்விருவிடயங்களையும் நம்பி ,வாய் மொழிந்து பின்னர்அதற்கேற்ப செயற்படும் போதே அவனுக்கு முஸ்லிம் எனும் பெயர் வழங்கப்படுகின்றது . இதன் மூலம் முஸ்லிமல்லாத ஒருவன் முஸ்லிமாக மாறி விடுகின்றான் .

## லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதன் அர்த்தம் . என்ன? .

இதன் பொருளாவது ... உண்மையில் வணங்கப்படத் தகுதி படைத்தவன் அல்லாஹ் மாத்திரம் தான் .அவனல்லாத கடவுள் என அழைக்கப்படும் அனைத்துமே போலிக் கடவுள்களே .( மனிதர்களாகக் கற்பனை செய்து தமக்குத்தாமே ஆக்கிக் கொண்டவைகளே ) என்பதாகும் . இவ்வாறு ஒருவர் சாட்சியம் பகரும் போது அவர் அதன் அர்த்தத்தை நன்கு அறிந்து பின் வாயினால் மொழிந்து அதன் அடிப்படையில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தனது இபாதத்களை ஆக்கிக் கொள்ள வேண்டும் .இதன் அர்த்தத்தை சரிவர அறியாமல் வெறுமனே வாயினால் உச்சரிப்பதாலோ , அல்லது அறிந்தும் அதன் படி நடக்காமல் இருப்பதாலோ எவ்வித நன்மையும் கிட்டாது என்பது மார்க்க அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும் .

இதில் “லாயிலாஹ” எனும் முதல் வார்த்தை உலகில் உண்மையான கடவுள் எதுவுமே இல்லை என்று மறுத்துரைப்பதுடன் “இல்லல்லாஹ்” எனும் இரண்டாம் வார்த்தை அல்லாஹ்வைத்தவிர – அவன் மாத்திரமே ஒரே கடவுள் எனும் கருத்தை நிறுவி நிற்கின்றது . அல்லாஹ்வைத்தவிர வேறு கடவுள்கள் எதுவுமே இல்லை என்று கூறும் போது உலகில் இன்று சில மக்களால்

வணங்கப்பட்டுவரும் கற்சிலைகள் , மரங்கள் , பிரபுக்கள் இவை போன்ற எதுவுமே கடவுள் நிலைக்கு ஆக்கப்பட வில்லை எனும் பேருண்மையை இக்கருத்து பொதிந்து நிற்கின்றது .

அல்லாஹ் கூறுகின்றான் ...

قال تعالى: ﴿وَإِلَهُكُمْ إِلَهٌ وَاحِدٌ لا إِلَهَ إِلَّا هُوَ الرَّحْمَنُ الرَّحِيمُ﴾

[سورة البقرة، الآية:163]

“உங்களது கடவுள் ஒரே கடவுள் . அவனன்றி வேறு கடவுள் யாருமே இல்லை . அவன் அளவற்ற அருளாளன் .”

( பகரா 163 ம் வசனம் )

மேலும் இந்த மார்க்கத்தைத் தழுவித்தான் ஆக வேண்டுமென இஸ்லாம் யாரையும் நிர்ப்பந்திக்க வில்லை. ஏனெனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் .

..

لا إِكْرَاهَ فِي الدِّينِ قَدْ تَبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَيِّ[سورة البقرة، الآية:256]﴿ :

இந்த மார்க்கத்தில் நிர்ப்பந்தமே கிடையாது.

( பகரா252 ம் வசனம் .)

கடவுள் எனும் சொல்லே உண்மையாக வணங்கப்படத் தகுதி மிக்கவன் எனும் அர்த்தத்தைத் தருகின்றது. எனவே யார் அல்லாஹ்வே அனைத்தையும் படைத்தவன் , போசிப்பவன்

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

எதையும் செய்யும் வல்லமை மிக்கவன் என்று நம்பி விட்டால் போதும் என்று எண்ணிக் கொண்டு எவ்வித வணக்க வழிபாடுகளிலும் ஈடுபடாமல் இருந்தால் மேற்படி அவனது நம்பிக்கையால் அவனுக்கு எவ்வித நன்மையும் கிட்டப் போவதில்லை . அதன் மூலம்அவனை முஸ்லிம் எனக் கூறவும் முடியாது . மறுமையில் தனக்கேற்படவிருக்கும் வேதனையிலிருந்து தப்பிக்கவும் முடியாது .ஏனெனில் மேற்படி நம்பிக்கை முற்கால குறைஷிக் காபிர்களிடம் கூடக் காணப்பட்டது. எனினும் அவர்களுக்கு அதனால் எப்பயனும் ஏற்பட வில்லை .

இது பற்றி அல்குர்ஆன் கூறுவதாவது ...

﴿قُلْ مَنْ يَرْزُقُكُمْ مِنَ السَّمَاءِ وَالْأَرْضِ أَمَّنْ يَمْلِكُ السَّمْعَ وَالْأَبْصَارَ وَمَنْ يُخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَيُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَيِّ وَمَنْ يُدَبِّرُ الْأَمْرَ فَسَيَقُولُونَ اللَّهُ فَقُلْ أَفَلَا تَتَّقُونَ﴾ [سورة يونس، الآية:31].

" வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார் ? அல்லது ( உங்கள் ) பார்வையையும் செவிப்புலனையும் சொந்தமாக்கிக் கொண்டிருப்பவன் யார்? ,இறந்ததிலிருந்து உயிருள்ளதையும் உயிருள்ளதிலிருந்து இறந்ததையும் வெளிப்படுத்துபவனும் சகல காரியங்களையும் திட்டமிட்டு நடத்துபவனும் யார் ? என நபியே அவர்களிடம் கேளுங்கள் . அதற்கவர்கள் அல்லாஹ் தான் என்று கூறுவார்கள் .

( யூனுஸ் 31 ம் வசனம் .)

மேலும் கூறுகின்றான் ....

﴿وَلَئِنْ سَأَلْتَهُمْ مَنْ خَلَقَهُمْ لَيَقُولُنَّ اللَّهُ فَأَنَّى يُؤْفَكُونَ﴾ [سورة الزخرف، الآية:87].

" மேலும் அவர்களைப் படைத்தவன் யார் என்று (நபியே ) நீர்அவர்களைக் கேட்பீராயின் அல்லாஹ்தான் என்று அவர்கள்

கூறுவார்கள் , அப்படியாயின் அவர்கள் எங்கு திருப்பப்படுகின்றார்கள் .

( ஸூக்ருப் – 87ம் வசனம் .)

எனவே லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் சாட்சியம் கூறல் உண்மையானதாகக் கணிக்கப்படுவதற்குப் பின்வரும் விடயங்கள் நிறைவு செய்யப்படுவது அவசியமாகும் .

## ஓரிறைக் கொள்கையின் நிபந்தனைகள் .

1 – லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் வார்த்தையின் அர்த்தத்தைத் தெளிவாக அறிந்திருத்தல் .அதாவது கடவுள் ஏதுமே இல்லையென்றும் அல்லாஹ் மாத்திரம்தான் கடவுளென்றும் அவனல்லாத அனைத்துக் கடவுள்களும் தெய்வீகத் தன்மை பெறத் தகுதியற்றவர்கள் என உறுதியாக நம்ப வேண்டும் .

உ – அதில் எவ்வித சந்தேகமுமின்றி இருத்தல் . அதாவது இக்கலிமாவினை இதய சுத்தியுடனும் முழு நம்பிக்கையுடனும் எவ்வித வற்புறுத்தலுமின்றி இதயத்தால் ஏற்று வாயால் மொழிதல்.

3 – அதனை ஏற்று அங்கீகரித்தல் .

அதாவது இக்கலிமாமை ஏற்பதால் அவனுக்கு எதுவெல்லாம் கடமையாகின்றதோ அவை அனைத்தையும் ஏற்று நடத்தல் எனவே நபிமார்களுக்கு அல்லாஹ்வால் அறிவிக்கப்படும் வஹீ எனும் இறை செய்திகளையும் உண்மைப்படுத்திஅவற்றின் போதனைகளுக்கு ஏற்ப நடத்தல் .

4 – அல்குர்ஆன், நபிவழி இரண்டுக்கும் ஏற்ப தனது வணக்க வழிபாடுகளை அமைத்துக் கொள்ளல் .

5 – அதனை இடையில் பொய்யாக்கி விடாமல் இறுதி வரை நிலைத்திருத்தல் . அதாவது வாயால் கூறியதுபோல் அவனது நடவடிக்கை அமையாவிட்டால் அல்லது வாயால் கூறியதற்கு முறணான எண்ணத்தை மனதில் வைத்திருந்தால் அதனால் அவருக்கு எவ்வித பிரயோசனமும் ஏற்பட மாட்டாது .

6 – இக்லாஸ் .. அதாவது மேற்படி கலிமா கூறிய ஒரு மனிதன் எவ்விதத்திலும் அல்லாஹ்வுக்கு இணை வைக்கும் காரியங்களில் ஈடுபட்டு விடாமல் தான் ஏற்ற கொள்கையினை இறுதி வரை தூயதாக வைத்திருத்தல் .
அல்லாஹ் கூறுகின்றான் ...

:﴿وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللَّهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ حُنَفَاءَ﴾ [سورة البينة، الآية:5]

“ அவர்கள் அல்லாஹ்வை மனத்தூய்மையுடனும் மார்க்கத்தை அவனுக்கே கலப்பற்றதாக ஆக்கியவர்களாகவும் வணங்க வேண்டுமென்றே அன்றி கட்டளையிடப்பட வில்லை .

( பய்யினா:. 5 ம்வசனம் .)

7 – இந்த ஓரிறைக் கொள்கையின் அடிநாதமான லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் கலிமாவை மனப்பூர்வமாக நேசித்தல். அதாவது இக்கலிமாவின் மூலம் தனக்குக் கடமையாகிய விடயங்களை சுய விருப்பத்துடன் செய்து வருவதுடன் இதன்மூலம் தனக்குத் தடுக்கப்பட்ட விடயங்களையும் உள்ளத்தால் வெறுத்தொதுக்க வேண்டும் . அல்லாஹ்வின் விருப்பத்திற்கு மாற்றமான ஒரு விடயத்தைச் செய்ய மனம் விரும்பும் போது தனது விருப்பத்தைப் புறந்தள்ளி அல்லாஹ்வின் விருப்பத்தை முன்னிலைப்படுத்தி அச்செயலைச் செய்யாது விட வேண்டும் . அத்துடன் அல்லாஹ்வின் நேசர்களைத் தானும்

நேசிப்பதுடன் அவனை எதிர்த்து வாழ்வோரைத் தானும் புறந்தள்ளி நடக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான் ....

: ﴿قَدْ كَانَتْ لَكُمْ أُسْوَةٌ حَسَنَةٌ فِي إِبْرَاهِيمَ وَالَّذِينَ مَعَهُ إِذْ قَالُوا لِقَوْمِهِمْ إِنَّا بُرَآءُ مِنْكُمْ وَمِمَّا تَعْبُدُونَ مِنْ دُونِ اللَّهِ كَفَرْنَا بِكُمْ وَبَدَا بَيْنَنَا وَبَيْنَكُمُ الْعَدَاوَةُ وَالْبَغْضَاءُ أَبَداً حَتَّى تُؤْمِنُوا بِاللَّهِ وَحْدَهُ﴾ [سورة الممتحنة، الآية:4].

உங்களுக்கு நபி இப்றாஹீமிடத்திலும் அவரைப் பின்பற்றியோரிடத்திலும் மிகச்சிறந்த முன்மாதிரி இருக்கின்றது.

( அல் மும்தஹினா 4ம் வசனம் .)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்...

وَمِنَ النَّاسِ مَنْ يَتَّخِذُ مِنْ دُونِ اللَّهِ أَنْدَاداً يُحِبُّونَهُمْ كَحُبِّ اللَّهِ وَالَّذِينَ آمَنُوا أَشَدُّ حُبّاً لِلَّهِ﴾ [سورة البقرة، الآية:165]

" மனிதர்களில் சிலர் அல்லாஹ்வையன்றி அவனுக்கு வேறு இணையாளர்களை ஆக்கிக் கொண்டு அல்லாஹ்வை நேசிப்பது போன்று அவர்களை நேசிப்பவர்களும் இருக்கின்றனர் .( ஆனால் ) விசுவாசிகளோ அல்லாஹ்வை நேசிப்பதில் மிகக் கடினமானவர்கள் .

( பகரா 165 ம் வசனம் .)

எனவே எவர் லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் கலிமாவை மனத்தூய்மையுடனும் உறுதியான எண்ணத்துடனும் சிறிய ,பெரிய இணை வைப்புக்கள் மௌட்டீக விடயங்கள் , பாவ காரியங்கள் அனைத்தை விட்டும் நீங்கிய நிலையில் கூறினால் அவருக்கு இவ்வுலகில் நேர்வழியும் அபயமும் கிடைக்கின்றது . மறுமையில் நரகம் செல்லல் அவருக்கு ஹராமாக்கப்படுகின்றது .

எனவே ஒரு முஸ்லிம் மேற்படி நிபந்தனைகள் அனைத்தும் நிறைவு பெற்ற நிலையில் இக்கலிமாவைக் கூறியிருக்க வேண்டும் . அந்த நிபந்தனைகளுக்கேற்ப தனது வாழ்க்கையை அமைத்திருக்க வேண்டும் . இவற்றை மனனம்

செய்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை .

லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் கலிமாதான் தவ்ஹீதுல் உலூஹிய்யா எனும் ஓரிறை வணக்கக் கோட்பாட்டை நிறுவி நிற்கின்றது .இது தவ்ஹீத் கொள்கையின் மூன்று வகைகளில் மிகப் பிரதானமானதாகும் .
ஏனெனில் இவ்விடயத்திலேயே முன்னைய நபிமார்களுக்கும் அவர்களது சமூகத்தினருக்கும் மத்தியில் வேற்றுமைகள் ஏற்பட்டிருக்கின்றன . இந்த வகைத் தவ்ஹீதை அறிமுகப்படுத்திடவே நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள் .
அல்லாஹ் கூறுகின்றான்....

﴿وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَسُولاً أَنِ اعْبُدُوا اللَّهَ وَاجْتَنِبُوا الطَّاغُوتَ﴾

[سورة النحل، الآية:36]

ஒவ்வொரு சமூகத்திலும் நிச்சயமாக நாம் ஒரு தூதரை அனுப்பி வைத்திருக்கின்றோம் . அத்தூதர் (அச்சமூகத்தவர்களிடம் ) அல்லாஹ்வையே வணங்குங்கள் . அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் ஷைத்தான்களாகிய அனைத்து தாகூத்திலிருந்தும் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் . ( என்று கூறினார்கள் .)

( நஹ்ல் 36 ம் வசனம் )

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் .

﴿وَمَا أَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَسُولٍ إِلَّا نُوحِي إِلَيْهِ أَنَّهُ لا إِلَهَ إِلَّا أَنَا فَاعْبُدُونِ﴾

[سورة الأنبياء، الآية:25]

நாங்கள் எந்தத் தூதரையும் அனுப்பும் போது என்னைத்தவிர வேறு கடவுளில்லை . என்னையே வணங்குங்கள் என்று நாம் வஹீ அறிவித்தேயன்றி அனுப்ப வில்லை . ( அன்பியா:. 25 ம் வசனம் .)

# தவ்ஹீதின் மூன்று வகைகள் .

1– தவ்ஹீத் அல் உலூாஹிய்யா.:. , ஒரேகடவுள் வணக்கக் கோட்பாடு .

அதாவது வணக்கங்கள் ,கிரியைகள் அனைத்தும் ஒரே இறைவனான அல்லாஹ்வுக்கே முன்வைக்கப்பட வேண்டும் . அவனே மக்கள் அனைவருக்கும் கடவுள் . நாம் அனைவரும் அவனது அடிமைகளே . என்று உறுதி கொண்டு அவனுக்கு இணையாக எதையும் ஆக்காமல் அவனையே வணங்கி வழிபட வேண்டும் .இதற்கு தவ்ஹீதுல் உலூாஹிய்யா , அல் இலாஹீய்யா , என்றும் சொல்லப்படும் . ஏனெனில் இதன் அடிப்படை கடவுளைத் தூய்மைப்படுத்தல் , விரும்புதல் போன்ற அர்த்தத்தில் நிறுவப்பட்டுள்ளது . இதற்கு மேலும் சில பெயர்களும் இருக்கின்றன.

1 – தவ்ஹீத் அல் இபாதா – அல்லது தவ்ஹீத் அல் உபூதிய்யா .:.

2 – தவ்ஹீதுல் இராதா .

3 – தவ்ஹீதுல் கஸ்த் .

4 – தவ்ஹீத் அத்தலப் .

5 – தவ்ஹீத் அல் அமல் .

போன்ற பெயர்கள் கொண்டும் அழைக்கப்படும் .

## இந்த வகைத் தவ்ஹீதின் அவசியம் .

இந்த வகைத் தவ்ஹீது ஒவ்வொரு முஸ்லிம்களிடத்திலும்

இருப்பது பர்மு– கட்டாயக் கடமையாகும் . இவ்வகைத் தவ்ஹீத் இல்லாத ஒருவர் முஸ்லிமாக இருக்க முடியாது . இக்கொள்கையில் குறைபாடு உள்ளவர் மறுமையில் நரக நெருப்பிலிருந்து தப்பிக்கவும் முடியாது . இவ்வகைத் தவ்ஹீத் தான் புத்தி சுவாதீனமுள்ள பருவமடைந்த ஒவ்வொருவர் மீதும் கடமையாகும் முதல் நம்பிக்கையாகும் . இதன் படியே அவர் தமது வணக்க வழிபாடுகளை ஆரம்பிக்க வேண்டும் . மேலும் இதுவே ஒவ்வொரு இஸ்லாமியனுக்கும் முதன்முதல் போதிக்கப்பட வேண்டிய கொள்கையாகும் .இதன் அவசியம் பற்றி அல்குர்ஆனிலும் ஹதீதிலும் கூறப்பட்டுள்ளதே இதற்கு ஆதாரமாகும் . இக்கொள்கையினை அனைவரும் ஏற்றாக வேண்டுமென்பதற்காகவே அல்லாஹ் நபி மார்களை அனுப்பி அவர்களுக்கு வேதக்கட்டளைகளையும் அருளி அவற்றை மனிதனுக்குப் போதிக்கச் செய்தான் .

அல்லாஹ் கூறுகின்றான் ....

﴿قُلْ إِنَّمَا أُمِرْتُ أَنْ أَعْبُدَ اللَّهَ وَلا أُشْرِكَ بِهِ إِلَيْهِ أَدْعُو وَإِلَيْهِ مَآبِ﴾:

[سورة الرعد، الآية:36]

“நபியே கூறுங்கள் . நிச்சயமாக நான் அல்லாஹ்வையே வணங்குமாறும் அவனுக்கு எதையும் இணையாக ஆக்கக்கூடாது என்றுமே கட்டளையிடப்பட்டுள்ளேன் . அவன் பக்கமே நான் ( உங்களை ) அழைக்கின்றேன் .அவனிடமே நான் மீளுமிடமிருக்கின்றது .

( ற:.த் 36 ம் வசனம் .)

மேலும் கூறுகின்றான் ....

﴿وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ﴾ [سورة الذريات، الآية:56]

நான் மனிதர்களையும் ஜின் வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்காகவேயன்றிப் படைக்கவில்லை .

( தாரியாத் 56 ம் வசனம் .)

ஒரு முறை முஆத் எனும் நபித்தோழருக்கு நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள் . முஆதே! நிச்சயாக நீர்

வேதக்காரர்களான ஒரு கூட்டத்தினரிடம் செல்கின்றீர்கள் . எனவே நீங்கள் அவர்களின் பால் அழைப்பு விடுக்கும் முதல் விடயம் "லாயிலாஹஇல்லல்லாஹ்" எனும் கலிமாவாக இருக்கட்டும் . அதை ஏற்று அதற்கவர்கள் உமக்குக் கட்டுப்பட்டால் அவர்களுக்கு அல்லாஹ் இரவிலும் பகலிலுமாக ஐவேளைத் தொழுகைகளைக் கடமையாக்கிருப்பதாக அறிவியுங்கள் .அதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால் அவர்களுக்கு ஸதகா ( ஸகாத் ) எனும் ஏழைவரியினையும் அல்லாஹ் விதித்திருப்பதாக அறிவியுங்கள் .இவ்வரி அவர்களிலுள்ள செல்வந்தர்களிடமிருந்து வசூலிக்கபட்டு அவர்களிலுள்ள ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் .

( புகாரி – முஸ்லிம் .)

எனவே மேற்படி ஹதீதின் கருத்தின் படி லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் தவ்ஹீத் ஓரிறைக் கொள்கையே அனைத்து இபாதத்களிலும் மிகச் சிறந்தது . ஒரு மனிதன் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன் புரிந்த அனைத்துத் தீமைகளுக்கும் இக்கலிமா ஒன்றே பிராயச்சித்தமாகி விடுகின்றது .

நபியவர்கள் கூறியுள்ளார்கள் ...

எந்த மனிதன் "லாயிலாஹ இல்லல்லாஹ் "எனும் கலிமாவினை அல்லாஹ்வின் திருமுகத்தை மாத்திரம் நாடியவனாகக் கூறினால் அவனுக்கு அல்லாஹ் நரகத்தை ஹராமாக்கி விடுகின்றான் .

இஸ்லாமிய வரலாற்றை நோக்கும் போது அல்லாஹ்வின் நபிமார்கள் அனைவருமே அவர்களது கூட்டத்தினரை இந்த லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் தவ்ஹீத் கொள்கையின் பக்கமே அழைத்துள்ளதுடன் அதனை ஏற்காது புறக்கணித்து நடப்போருக்கு ஏற்படவிருக்கும் துர்க் கதியையும் எடுத்துக் கூறி அவர்களுக்கு அச்சமூட்டியிருப்பதை அவதானிக்க முடியும் . இது பற்றி அல்குர்ஆன் விலாவாரியாகப் பல்வேறு இடங்களில்

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

**பிரஸ்தாபித்துக் கூறுகின்றது .**
**அல்லாஹ் கூறுகின்றான் ...**
﴿وَمَا أَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَسُولٍ إِلَّا نُوحِي إِلَيْهِ أَنَّهُ لا إِلَهَ إِلَّا أَنَا فَاعْبُدُونِ﴾
[سورة الأنبياء، الآية:25]

**“ நாம் உமக்கு முன் அனுப்பிய எந்தத் தூதருக்கும் என்னைத்தவிர வேறு கடவுளில்லை எனவே என்னையே வணங்குங்கள் என்று வஹீ அறிவிக்காமல் அனுப்பியதில்லை .**
**( அன்பியா 25 ம் வசனம் .)**

**மேற்படி உண்மையினை நபி ( ஸல்) அவர்களும் ஒரு எழிய உதாரணம் மூலம் விளக்கிக் கூறியுள்ளார்கள் .**
**“ நபி மார்கள் அனைவரும் ஒரே குடும்பத்தில் பிறந்த சகோதரர்கள் போன்றவர்களே .. அவர்களது சமுகத்தினர் வேறாக இருப்பினும் அவர்கள் போதித்த மார்க்கம் ( இஸ்லாம் ) ஒன்றே ..**

**எனவே ஒரே தந்தைக்குப் பல மனைவியர் மூலம் பிறந்த குழந்தைகள் போன்று ஒவ்வொரு நபிமார்களும் போதித்த சட்டதிட்டங்கள் ஒன்றுக்கொன்று வேறு பட்டாலும் அவர்கள் போதித்த விடயங்களின் அடிப்படை ஒன்றாகவே இருந்துள்ளது .**

## முஹம்மதுர்ரஸூலுல்லாஹ் என்பதன் அர்த்தம் என்ன ?.

**நபி முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராகும் என்பது இதனுடைய அர்த்தமாகும் . அதாவது நபியவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடந்து அவர்களது ஏவல்களுக்கு**

அடிபணிந்து அவர்கள் தடுத்தவற்றை விட்டு விலகி அவர்கள் கூறிய அனைத்துச் செய்திகளையும் உண்மைப்படுத்தி அவர்களது வழிகாட்டலின் கீழ் அல்லாஹ்வை வணங்கி வழிபட வேண்டுமென்பதே இதன் முழு அர்த்தமாகும் .

நபியவர்களுடைய தூதுத்துவத்தை உண்மைப்படுத்தல் என்பது உண்மையாக ஒருவரிடத்தல் உண்டாகுவதாயின் அவர் நபியவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று நம்புவதுடன் அவர்களும் அல்லாஹ்வின் அடியாரே .அல்லாஹ் அவர்களை மனு ,ஜின்இருகூட்டத்திற்கும் நபியாக ஆக்கியுள்ளான் என்றும், அவர்களே இறுதி நபியும் றஸூலுமாவார்கள், அவர்கள் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானவர்கள், எனினும் அல்லாஹ்வின் தெய்வீகத் தன்மைகளில் அவர்களுக்கு எவ்விதப் பங்குமில்லை என்றும் நம்புவதுடன், அவர்களை உரிய முறையில் கண்ணியப்படுத்தி அவர்களது ஏவல் விலக்கல்களுக்குக் கட்டுப்பட்டு அவர்களது போதனைகளைச் சொல்லாலும் செயலாலும் எண்ணத்தாலும் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் .

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿قُلْ يَا أَيُّهَا النَّاسُ إِنِّي رَسُولُ اللَّهِ إِلَيْكُمْ جَمِيعاً﴾ [سورة الأعراف، الآية:158]

“ ( நபியே கூறுங்கள் ) மனிதர்களே .. நான் உங்கள் அனைவருக்கும் நபியாக அனுப்பப் பட்டுள்ளேன் .

( அ:ராப் 157 ம் வசனம் .)

“ நபியே கூறுங்கள் .. எனது இரட்சகன் பரிசுத்தமானவன் . நான் ஒரு மனிதனாகவும் தூதராகவுமேயன்றி இல்லை .

(இஸ்ரா:. 99 ம் வசனம்)

﴿مَا كَانَ مُحَمَّدٌ أَبَا أَحَدٍ مِنْ رِجَالِكُمْ وَلَكِنْ رَسُولَ اللَّهِ وَخَاتَمَ النَّبِيِّينَ﴾:

[سورة الأحزاب، الآية:40]

“ முஹம்மது நபியவர்கள் உங்களின் ஆண் மக்கள் எவருக்கும் தந்தையாக இல்லை . எனினும் அவர்கள் அல்லாஹ்வின்

**தூதரும் நபிமார்களில் இறுதியுமானவர்கள் ."**
**( அஹ்ஸாப் 4ம் வசனம் .)**

[سورة سبأ، الآية:28]،﴿وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا كَافَّةً لِلنَّاسِ بَشِيراً وَنَذِيراً﴾

**"( நபியே ) உங்களை முழு மனித சமுதாயத்திற்கும் நன்மாராயம் கூறுபவராகவும் , அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி நாம் அனுப்ப வில்லை . ( ஸப: 28 ம் வசனம் )**

**எனவே சுருங்கக் கூறுவதாயின் நபியவர்களின் தூதுத்துவத்தை நாம் உண்மைப்படுத்துவதாயின் பின்வரும் விடயங்கள் நிறைவு பெற்றிருத்தல் அவசியம் .**

**1– அவர்களது நபித்துவத்தை ஏற்று அதனை இதயத்தாலும் உறுதிப்படுத்தல் .**
**2– அதை வாய் மொழிந்து பகிரங்கப் படுத்தல் .**
**3– அதற்கேற்ப நபிகளாரின் போதனைகளைக் கடைப்பிடித்து அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் .**

**அல்லாஹ் கூறுகின்றான் ...**
[سورة الأعراف: ﴿فَآمِنُوا بِاللَّهِ وَرَسُولِهِ النَّبِيِّ الْأُمِّيِّ الَّذِي يُؤْمِنُ بِاللَّهِ وَكَلِمَاتِهِ وَاتَّبِعُوهُ لَعَلَّكُمْ تَهْتَدُونَ﴾ من الآية158]

**" நீங்கள் அல்லாஹ்வையும், அவனையும்அவனது வசனங்களையும் நம்பும் அவனது றஸூலும் எழுதப்படிக்கத் தெரியாவருமான நபியையும் நம்பிக்கை கொள்ளுங்கள் . அதனால் நீங்கள் நேர்வழியடைய முடியும் " ( அ:ராப் 158 ம் வசனம் )**

**4–அவர்கள் கூறிய செய்திகள் அனைத்தையும் உண்மைப்படுத்தல் .**

5 – தன்னையும் ,தன் பொருள் பெற்றோர் பிள்ளைகளை விடவும் நபியவர்களை அதிகம் நேசித்தல் . ஏனெனில் அவர்களை நேசிப்பதனாலேயே அல்லாஹ்வின் நேசத்தைப் பெற முடியும் . அவர்களை நேசித்தல் என்பதன் அர்த்தம் அவர்களது கட்டளைகளுக்கு முழுமையாகக் கட்டுப்படுவதும் அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தைப் பரப்புவதில் உதவியாயிருப்பதையும் குறிக்கும் .

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللَّهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ﴾

[سورة آل عمران: من الآية31]

" நபியே கூறுங்கள் நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருப்பின் என்னைப் பின் பற்றுங்கள் (அப்போது அல்லாஹ் உங்களை நேசிப்பான் உங்களது பாவங்களையும் மன்னிப்பான் ."

(ஆல இம்ரான் 31 ம் வசனம் )

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் ...

உங்களில் ஒருவர் தனது உயிர் , பெற்றோர் பிள்ளை ஏனைய அனைத்தையும் விட என்னை அதிகமாக நேசிக்கும் வரை அவர் (முழுமையான ) விசுவாசியாக மாட்டார் . ( புகாரி – முஸ்லிம் )

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿فَالَّذِينَ آمَنُوا بِهِ وَعَزَّرُوهُ وَنَصَرُوهُ وَاتَّبَعُوا النُّورَ الَّذِي أُنْزِلَ مَعَهُ أُولَئِكَ هُمُ الْمُفْلِحُونَ﴾ [سورة الأعراف: من الآية157]

" ஆகவே யார் அவரை ( உண்மையாகவே ) விசுவாசித்து கண்ணியம் செய்து அவருக்கு உதவி புரிந்து அவருடன்

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

இறக்கப்பட்ட நூர் எனும் குர்ஆனையும் பின்பற்றுகின்றார்களோ அவர்கள் தான் (உண்மையில் ) வெற்றியாளர்கள் ஆவார்கள் .

( அ:ராப் 157 ம் வசனம் .)

6 – அவர்களது வழிமுறைகளும் இஸ்லாமிய சட்ட அடிப்படையாகும் என்றும், அதுவும் அல்குர்ஆனைப்போன்று இஸ்லாமிய மார்க்க மூலாதாரம் எனவும் அதிலே தூய பகுத்தறிவுக்கு முறணான எவ்விடயமும் இல்லை எனவும் நம்பிக்கை கொள்ள வேண்டும் .

7 – அவர்களது வழிகாட்டல்களுக்கேற்ப இபாதத் – வணக்கம் புரிந்து அவர்களது வார்த்தைகளை மார்க்கத்தீர்ப்பாக ஏற்றுப் பொருந்தி வாழ வேண்டும் .

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ فَلا وَرَبِّكَ لا يُؤْمِنُونَ حَتَّى يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لا يَجِدُوا فِي أَنْفُسِهِمْ حَرَجاً مِمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا تَسْلِيماً﴾ [سورة النساء، الآية:65]

“ஆனால் உமதிரட்சகன் மீது சத்தியமாக அவர்கள் தமக்குள் ஏற்பட்ட சச்சரவில் உம்மை நீதிபதியாக ஆக்கி நீர் செய்யும் தீர்ப்பைத் தங்கள் மனங்களில் எத்தகைய அதிருப்தியையும் பெறாமல் முழுமையாக ஏற்றுக் கொள்ளாத வரை அவர்கள் விசுவாசிகளாக ஆக மாட்டார்கள் .”

( அந்நிஸா:. 65 ம் வசனம் .)

## தவ்ஹீத் கலிமாவின் அகமியங்கள் .

“லாயிலாஹ இல்லல்லாஹ்” எனும் இச்சிறிய வார்த்தை தன்னகத்தே மிகப் பெரிய அகமியங்களைக் கொண்டிருக்கின்றது. இதன் அகமியம் பற்றி அல்குர்ஆனிலும் நபி மொழிகளிலும்

விபரமாகக் கூறப்பட்டுள்ளன .அவற்றில் சிலவற்றை இங்கே நோக்குவோம் .

1 – இக்கலிமாதான் இஸ்லாத்தின் தூண்களில் முதலாவதும் அதன் அடிப்படை மூல மந்திரமுமாகும் . இதன் மூலமே ஒருவன் இஸ்லாத்தில் நுழைகின்றான் . இதனை நிலை நாட்டுவதற்காகவே வானம் பூமி அனைத்தும் படைக்கப்பட்டன .

2 – இதனை முழுமையாக ஏற்றுக் கொள்வதனாலேயே அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதலும் நபியவர்களின் மார்க்கத்தை நிலைநாட்டுவதும் முழுமைப்படுத்தப் படுகின்றது .

3 – ஒரு மனிதனின் உயிருக்கும் பொருளுக்கும் இதுவே உத்தரவாதம் அளிக்கின்றது . இதை ஏற்பதனாலேயே ஒரு மனிதன் பாதுகாப்புப் பெறுகின்றான் . இதனை மறுப்பவருக்கெதிராகப் போர்புரியுமாறு இஸ்லாம் கூறுகின்றது .

4 – "லாயிலாஹ இல்லல்லாஹ் "என்று சொல்வதே அனைத்து இபாதத்களிலும் மேலானதாகும் . அதுவே ஒருவன் முன் செய்த பாவங்கள் அனைத்தையும் அழித்து விடுகின்றது .மறுமையில் அவனது நன்மைத்தட்டைக் கனக்கச் செய்கின்றது . அவன் சொர்க்கத்தில் நுழைவதற்கும் நரகத்தை வீட்டும் பாதுகாப்புப் பெறுவதற்கும் அதுவே காரணமாக அமைகின்றது .
லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் இக்கலிமா ஒரு தட்டிலும் வானம் பூமி அவற்றிலுள்ள அனைத்தும் ஒரு தட்டிலும் வைக்கப்பட்டாலும் இக்கலிமா வைக்கப்பட்ட தட்டுத்தான் கனக்கும்.

நபியவர்கள் கூறியுள்ளார்கள் ....
" எவர் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்மாத்திரம் தான் என்றும்

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

நபி (ஸல்) அவர்கள் அவனது தூதரும் அடியாருமாவார்கள் என்று சாட்சி கூறுகின்றாரோ அவருக்கு அல்லாஹ் நரகம் செல்வதை ஹராமாக்கி வைக்கின்றான் . ( ஆதாரம் முஸ்லிம் .)

5 – இக்கலிமாவானது அல்லாஹ்வைப் பிரார்த்தித்தல் , திக்ர் நினைவு கூறல் , அவனைப்புகழ்தல் போன்ற மூன்றையும் ஒரே நேரத்தில் தன்னகத்தே கொண்டுள்ளது . இதுவே திக்ர்களில் இலகுவானதும் மிகச் சிறந்ததுமாகும் . மேலும் இது ஒரு நல்ல கலிமாவாகவும் இஸ்லாத்தின் பலமான கயிறாகவும் , ஓரிறைக் கொள்கையின் அடி நாதமாகவும் உள்ளது . இதற்காகவே உலகம் படைக்கப்பட்டு நபிமார்களும் அனுப்பப்பட்டு அவர்களுக்கு வேதங்களும் அருளப்பட்டன . இதனை நிலை நாட்டுவதற்காகவே இஸ்லாத்தில் வாழேந்திப் போர் புரியப்பட்டது . யார் இக்கலிமாவினை உண்மையான இதய சுத்தியுடனும், இறையன்புடனும் மனத்தூய்மையுடனும் கூறினால் அல்லாஹ் அவனை சுவர்க்கத்தில் நுழைவித்து விடுகின்றான் .

இஸ்லாத்தின் இரண்டாவது கடமை

# தொழுகை .

தொழுகை இஸ்லாத்தின் இலட்சினையாகவும் வணக்க வழிபாடுகளில் மிகச் சிறந்ததும் பிரதானமானதுமாக விளங்குகின்றது .இஸ்லாம் அதற்கு மிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது . அதன் அகமியங்களையும் வணக்க வழிபாடுகளுக்கு மத்தியில் அதற்கு இருக்கும் முக்கியத்துவத்தையும் இனிதே விளக்கிக் கூறியுள்ளது . தொழுகைதான் அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் மத்தியில் தொடர்பை ஏற்படுத்தும் காரணியாகும் . இதனை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு மனிதன் தான் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பவன் என்பதைச் செயல்மூலம் நிரூபிக்கின்றான் .

## தொழுகை என்றால் என்ன ?.

தொழுகை என்றால் அகராதிக் கருத்துப்படி பிரார்த்தனை புரிவதைக் குறிக்கும் .

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿وَصَلِّ عَلَيْهِمْ إِنَّ صَلاتَكَ سَكَنٌ لَهُمْ﴾: [سورة التوبة: من الآية103]

“ நபியே அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வீராக . நிச்சயமாக உமது பிரார்த்தனை அவர்களுக்கு நிம்மதியளிப்பதாக இருக்கின்றது . ( தவ்பா:. 103 ம் வசனம் .)

இஸ்லாமியக் கண்ணோட்டத்திலே தொழுகை

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

எனப் படுவது குறிப்பிட்ட செயல்களையும் வார்த்தைகளையும் கொண்டுள்ள – அல்லாஹு அக்பர் எனும் தக்பீர் மூலம் ஆரம்பிக்கப்பட்டு அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் எனும் ஸலாம் மூலம் நிறைவுசெய்யப்படும் ஓர் வணக்கமாகும் . செயல்கள் எனும் போது அது தொழுகைக்காக நிற்றல் , ருகூஉ – ஸுஜூது செய்தல் நடு இருப்பு போன்றவற்றையும் , வார்த்தைகள் எனும் போது தக்பீர் கூறல் , குர்ஆன் ஓதல் , தஸ்பீஹ் துஆச் செய்தல் போன்றவற்றையும் குறிக்கின்றது.

## <u>தொழுகையின் அவசியம் .</u>

தொழுகையானது இஸ்லாத்திற்கு முன்னிருந்த வேதங்களிலேயே கடமையாக்கப்பட்டிருந்ததை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது . இதோ நபி இப்றாஹீம் ( அலை ) அவர்கள் தன்னைத் தொழுகையை நிலை நிறுத்துபவராக ஆக்குமாறு அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றார்கள் .

﴿رَبِّ اجْعَلْنِي مُقِيمَ الصَّلَاةِ وَمِنْ ذُرِّيَّتِي﴾ [سورة إبراهيم: من الآية40]

“ எனது இரட்சகனே ! என்னையும் என் சந்ததியிலுள்ளோரையும் தொழுகையை நிறைவேற்றுபவர்களாக ஆக்கி வைப்பாயாக ”.

( இப்ராஹீம் 40 ம் வசனம் )

இவ்வாறே நபி இஸ்மாயீல் ( அலை) பற்றி அல்லாஹ் கூறுகையில் .

﴿وَكَانَ يَأْمُرُ أَهْلَهُ بِالصَّلَاةِ وَالزَّكَاةِ﴾ [سورة مريم: من الآية55]

“அவர் தனது குடும்பத்தவர்களைத் தொழுகையை நிறைவேற்றுமாறும் ஸக்காத்தைக் கொடுத்து வருமாறும் ஏவுபவராக இருந்தார் .

( மர்யம் 55 ம்வசனம் .)

நபிமூஸா ( அலை) அவர்களுக்கு அல்லாஹ் கூறுகின்றான் ..

“ ﴿إِنَّنِي أَنَا اللَّهُ لا إِلَهَ إِلَّا أَنَا فَاعْبُدْنِي وَأَقِمِ الصَّلاةَ لِذِكْرِي﴾ [سورة طه، الآية:14]

நிச்சயமாக நானே அல்லாஹ். என்னைத் தவிர வேறு கடவுள் இல்லை எனவே என்னையே நீர் வணங்கி வருவீராக என்னை நினைவு கூர்வதற்காகத் தொழுகையை நிறைவேற்றுவீராக” ..

( தாஹா 14 ம் வசனம் .)

நபி ஈஸா ( அலை ) அவர்கள் தொழுகை பற்றிக் கூறியதாக அல்குர்ஆனில் வருவதாவது ...

﴿وَجَعَلَنِي مُبَارَكاً أَيْنَ مَا كُنْتُ وَأَوْصَانِي بِالصَّلاةِ وَالزَّكَاةِ مَا دُمْتُ حَيّاً﴾

[سورة مريم، الآية:31]

“ அல்லாஹ் எனக்கு நான் உயிரோடிருக்கும் காலமெல்லாம் தொழுமாறும் ஸகாத் கொடுக்குமாறும் போதனை செய்துள்ளான்” .

( மர்யம் 31 ம் வசனம் )

அல்லாஹுத்தஆலா நபி (ஸல்) அவர்களுக்கு இத்தொழுகையை மிஃராஜ் இரவின் போது கடமையாக்கினான் . ஆரம்ப கட்டத்தில் ஐம்பது நேரங்கள் விதிக்கப்பட்டிருந்த இத் தொழுகை பின்னர் மக்களின் சிரமத்தைக் கருத்திற் கொண்டு நபியவர்கள் செய்த சிபாரிசுக்கேட்ப ஐந்து நேரங்களாகக் குறைக்கப்பட்டது . எனினும் ஐந்து நேரத் தொழுகைகளுக்கும் ஐம்பது நேரத் தொழுகைகளின் நன்மைகள் வழங்கப்படுகின்றன .

ஐந்து நேரத் தொழுகைகளின் பெயர்கள் வருமாறு ...

# இஸ்லாமும் அதன் அடிப்படையும்

1 – ஸுபஹ் .  2 – லுஹர் .  3 – அஸர் .
4 – மஃரிப் .  5 – இஷாஃ .

இதன் படி இஸ்லாமிய அறிஞர்கள் அனைவரும் ஏகோபித்து முடிவெடுத்துள்ளனர் .
தொழுகை ஒவ்வொரு முஸ்லிமான ஆண் , பெண் மீதும் கட்டாயக் கடமை என்பதற்குப் பல்வேறு ஆதாரங்கள் உள்ளன . அவற்றில் சிலவற்றை இங்கே பார்ப்போம் .

அல்லாஹுத்தஆலா கூறுகின்றான் ....

﴿وَأَقِيمُوا الصَّلاةَ وَآتُوا الزَّكَاةَ﴾ [سورة البقرة: من الآية43].

" தொழுகையை நிறைவேற்றி வாருங்கள் , ஸக்காத்தையும் கொடுத்து வாருங்கள் ."  ( பகரா 43 ம் வசனம் .

﴿إِنَّ الصَّلاةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِينَ كِتَاباً مَوْقُوتاً﴾

[سورة النساء: من الآية103].

" நிச்சயாக தொழுகையானது முஃமின்கள் மீது நேரம் குறிப்பிடப் பட்ட கடமையாக ஆகி விட்டது ."  ( அந்நிஸாஃ 103 ம்வசனம் .)

﴿وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللَّهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ حُنَفَاءَ وَيُقِيمُوا الصَّلاةَ وَيُؤْتُوا الزَّكَاةَ﴾:

[سورة البينة: من الآية5]

" அவர்கள் அவனுக்காகவே வணக்கத்தைக் கலப்பற்றதாக ஆக்கியவர்களாக( அனைத்து தீய வழிகளைவிட்டும்) இஸ்லாத்தின் பால் சாய்ந்தவர்களாக அல்லாஹ்வை வணங்க வேண்டுமென்றும் தொழுகையை நிலை நிறுத்த வேண்டுமென்றும் ஸக்காத்தைக் கொடுக்க வேண்டுமென்றுமேயன்றி ஏவப்பட வில்லை ."

( பய்யினா 5ம் வசனம் .)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் ....

“ இஸ்லாம் ஐந்து தூண்களின் மீது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது . வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லையென்று சாட்சி சொல்லுதல் , தொழுகையை நிறைவேற்றல் , ஸக்காத் கொடுத்தல் , ஹஜ் செய்தல் , நோன்பு நோற்றல் ஆகியவையாகும்” .

( அறிவிப்பவர் இப்னு உமர் புகாரி முஸ்லிம்.)

“ இஸ்லாம் என்பது வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர யாருமில்லை என சாட்சியளிப்பதும் , தொழுகையை நிறைவேற்றுவதும் ஸக்காத் கொடுப்பதும் , ரமழானில் நோன்பு நோற்பதும் , உனக்கு சக்தியிருந்தால் ஹஜ் செய்வதுமாகும் என்று நபியவர்கள் கூறினார்கள் .

( அறிவிப்பவர் உமர் (றழி) — முஸ்லிம் )

நபியவர்கள் முஆத் எனும் நபித்தோழரை யமன் பிரதேசத்திற்கு ஆளுனராக அனுப்பும் போது பின்வருமாறு கூறினார்கள் ...

“ முஆதே நீர் அங்குள்ளவர்களை முதலில் லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் கொள்கையின் பக்கம் அழைப்பீராக . அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அல்லாஹ் அவர்களுக்கு இரவிலும் பகலிலுமாக ஐந்து நேரத் தொழுகைகளை விதியாக்கியுள்ளான் என்று அறிவிப்பீராக” ..

( அறிவிப்பவர் அப்பாஸ் ( றழி) — புகாரி முஸ்லிம் .)

அனைத்து முஸ்லிம் அறிஞர்களும் ஐவேளைத் தொழுகைகள் இஸ்லாத்தில் விதியாக்கப் பட்டுள்ளன என்றும் அவை இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்றாகும் எனவும் ஏகோபித்த முடிவில் உள்ளனர் .

## தொழுகை கடமையாக்கப்பட்டதன் நோக்கம் .

முஸ்லிம்களின் மீது தொழுகை கடமையாக்கப்பட்டதில் பல்வேறு விதமான ஆத்மீக , லௌகீக நன்மைகள் நிறைந்துள்ளன . அவற்றில் சிலவற்றை இங்கு நோக்குவோம் .

O – தொழுவதால் மனிதன் அல்லாஹ்வின் அடிமை என்பதை செயல் மூலம் நிரூபிக்கின்றான் . எனவே தனது அனைத்துக் காரியங்களையும் அல்லாஹ்வுடன் தொடர்பு பட்டதாக ஆக்கிக் கொள்ள முனைகின்றான் .

O – ஒரு மனிதன் தொழுது வருவதன் மூலம் தினமும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து அவனுக்கு நன்றி செலுத்தியவனாக வாழ்கின்றான் .

O – தொழுகையானது ஒரு மனிதனை தீய காரியங்கள் ,மானக் கேடான செயல்களில் அவன் ஈடுபடுவதை விட்டும் தடுக்கின்றது. அவன் புரிந்த சிறிய பாவங்களுக்கும் தொழுகை மூலம் அவனுக்கு மன்னிப்பு வழங்கப்படுகின்றது .

நபி (ஸல் ) அவர்கள் கூறினார்கள் ....

“ ஒருவர் ஐந்து வேளை தொழுது வருவதானது அவர் தினமும் தனது வீட்டிக்கு முன் ஓடிக்கொண்டிக்கும் சுத்தமான நீரில் ஐந்து வேளை குளிப்பதைப் போலாகும் . ( ஐவேளை குளிப்பதால்

அவரது உடலில் அழுக்குகள் நீங்கி விடுவது போல ஐவேளைத் தொழுகையால் அவரது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன).
(ஆதாரம் முஸ்லிம்)

o – தொழுகை மூலம் மனிதனுக்கு மனதில் நிம்மதியும் உள்ளத்தில் அமைதியும் ஏற்பட்டு அவனது துன்பங்களுக்கும் தீர்வு கிடைக்கின்றது. எனவேதான் " தொழுகையில் எனக்குக் கண்குளிர்ச்சி இருக்கின்றது" என்று நபியவர்கள் கூறினார்கள். மேலும் நபியவர்களுக்கு ஏதேனும் சிக்கலான வீடயம் ஏற்பட்டால் உடனே தொழுகையின் பக்கம் விரைந்து விடுவார்கள். மேலும் " பிலாலே தொழுகை(க்கு அதான் சொல்வதன் ) மூலம் எங்களை நிம்மதியடைய வையுங்கள் ." என்றும் கூறுவர்கள்.
( ஆதாரம் அஹ்மத் )

# தொழுகை யார் மீது கடமையாகின்றது ?.

தொழுகையானது முஸ்லிமான பருவ வயதையடைந்த புத்தி சுவாதீனமுள்ள ஆண் பெண் அனைவர் மீதும் கடமையாகின்றது. ஆகவே முஸ்லிமல்லாத காபிர்களுக்குத் தொழுகை அவசியமல்ல .ஏனெனில் அவர் அல்லாஹ்வை மறுப்பதுடன் அவனை வழிபடுவதில் எந்த அர்த்தமுமில்லை .எனினும் அவர் மறுமையில் தொழாதமைக்காக விசாரிக்கப்படுவார் .ஏனெனில் உலகில் அவர் இஸ்லாத்தைத் தழுவி அதன் மூலம் தொழுகையை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது . அதனை அவர் பயன்படுத்திக்

**கொள்ளாதது அவரது தவறே ..**

**இது பற்றி அல்லாஹ் அல் குர்ஆனிலே கூறுகின்றான் ....**

﴿مَا سَلَكَكُمْ فِي سَقَرَ. قَالُوا لَمْ نَكُ مِنَ الْمُصَلِّينَ. وَلَمْ نَكُ نُطْعِمُ الْمِسْكِينَ. وَكُنَّا نَخُوضُ مَعَ الْخَائِضِينَ. وَكُنَّا نُكَذِّبُ بِيَوْمِ الدِّينِ. حَتَّى أَتَانَا الْيَقِينُ﴾ :

**“ (அவர்கள் பாவிகளிடத்தில் கேட்பார்கள் ) உங்களை ஸகர் எனும் நரகத்தில் புகுத்தியது எது ?. அதற்கு அவர்கள் தொழக்கூடியவர்களில் உள்ளவர்களாக நாங்கள் இரு க்க வில்லை என்று கூறுவார்கள் . இன்னும் ஏழைக்கு உணவளிப்பவர்களாக இருக்கவில்லை , வீணானவற்றில் மூழ்கியிருந்தோருடன் நாங்களும் மூழ்கியிருந்தோம் . மேலும் கூலி கொடுக்கும் இந்நாளையும் நாங்கள் பொய்யாக்குபவர்களாக இருந்தோம் . எங்களுக்கு மரணம் எனும் உறுதி வரும் வரை இவ்வாறே இருந்தோம் என்றும் கூறுவார்கள்.”**

**அவ்வாறே பருவ வயதையடையாத சிறுவர்கள் மீதும் தொழுகை கடமையில்லை . அவ்வாறே மாத விலக்கு , பிரசவத்தீட்டு ஏற்பட்ட பெண்களும் தொழ வேண்டியதில்லை . காரணம் இவர்களுக்கு ஏற்பட்ட உபாதைகள் காரணமாக இஸ்லாம் இவர்களுக்கு தொழுகை விடயத்தில் விலக்கு அளித்துள்ளது .**

**சிறுவர்களைப் பொறுத்த வரை அவர்கள் ஏழு வயதை எட்டியதும் அவர்களைத் தொழுமாறு ஏவுவது பெற்றோர் பாதுகாவலர் மீது கடமையாகும் . பத்து வயதாகியும் அவர்கள் தொழா விட்டால் அவர்களை அடித்து – தண்டித்தாவது தொழ வைக்க வேண்டும் . ஏனெனில் இப்பயிற்சி மூலமே அவர்கள் பருவ வயதடைந்ததும் செவ்வனே தொழுகையை நிறைவேற்றிவருதல் இலகுவாகும் .**

## தொழுகையை விட்டவனின் நிலை .

யார் தொழுகையை வேண்டுமென்றே எக்காரணமுமின்றி விட்டு விடுகின்றாரோ அவர் இஸ்லாத்தை விட்டு வெளியேறி காபிராக முர்த்தத் – மதம் மாறியவராக ஆகி விடுகின்றார் . ஏனெனில் அவருக்கு அல்லாஹ் விதித்த ஒரு பெரும் கடமையை உதாசீனம் செய்து விட்டார் .எனவே அவர் புரிந்த குற்றத்திற்காக அல்லாஹ்விடம் தவ்பா – பாவ மீட்சி கோருமாறு அவருக்கு அறிவுறுத்தப்படும் . அவ்வாறு செய்து அவர் மீண்டும் தொழ ஆரம்பித்தால் சரியாகி விடும் . இல்லாத பட்சத்தில் அவர் முர்த்தத்தாகவே கணிக்கப்படுவார் . அவர் அதே நிலையில் மரணித்தால் அவரைக் குளிப்பாட்டவோ , கபனிடவோ , அவருக்கு மய்யித்துத் தொழுகை நடத்தவோ , அவரை முஸ்லிம்களின் அடக்கஸ்த்தலத்தில் அடக்கம் செய்யவோ கூடாது . ஏனெனில் அவர் முஸ்லிம்களில் ஒருவராக இல்லை .

## தொழுகையின் நிபந்தனைகள் .

தொழுகை ஒரு மனிதனிடமிருந்து ஏற்றுக் கொள்ளப் படுவதாயின் பின் வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படுவது அவசியமாகும் .

1 – முஸ்லிமாயிருத்தல் .
2 – புத்தி சுவாதீனமுடையவராய் இருத்தல் .
3 – தம்யீஸ் – விபரமறிந்தவராயிருத்தல் .

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

4 – தொழுகையின் குறிப்பீட்ட நேரம் ஆரம்பித்திருத்தல் .

5 – நிய்யத் – தொழுவதாக மனதால் நினைத்துக் கொள்ளல் .

6 – கிப்லா – க:.பாவின் திசையினை முன்னோக்கியிருத்தல்.

7 – உடலில் கட்டாயம் மறைக்கப்பட வேண்டிய பகுதியை – அவ்ரத்தை மறைத்திருத்தல் .ஆண்கள் தொப்புள் தொடக்கம் முழங்காலுக்கு இடைப்பட்ட பகுதியை மறைக்க வேண்டும் . பெண்கள் தமது முகம் , கைகளின் மணிக்கட்டு தவிர்ந்த உடலின் ஏனைய பகுதிகள் அனைத்தையும் மறைக்க வேண்டும் .

8 – தொழுபவரின் உடை , உடல் , தொழுமிடம் ஆகியன நஜீஸ் –அசுத்தங்களை விட்டும் தூய்மையாயிருத்தல்,

9 – சிறு –பெரும் தொடக்குகளை விட்டும் சுத்தமாயி –ருத்தல் வேண்டும் . சிறு தொடக்கு என்பது உளூ இல்லாமல் இருப்பதைக் குறிக்கும் . உளூச் செய்வதன் மூலம் இது நீங்கி விடும் . பெருந் தொடக்கென்பது குளிப்புக் கடமையான நிலையில் ஒருவர் இருப்பதைக் குறிக்கும் . குளிப்பதன் மூலம் இது நீங்கி விடுகின்றது .

## தொழுகையின் நேரங்கள்.

ஐந்து வேளைத் தொழுகைகளின் நேரங்களை ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருப்பது அவசியமாகும் . அவையாவன...

1 – ளுஹர் .. இதன் நேரம் சூரியன் நடு உச்சியிலிருந்து சாய்ந்ததிலிருந்து ஒரு பொருளின் நிழல் அதன் உண்மையான அளவுக்குத் தென்படும் வரையான நேரமாகும் .

2 – அஸ்ர் .. ளுஹருடைய நேரம் முடிவடைந்ததிலிருந்து ஒரு பொருளின் நிழல் அதன் இரு மடங்கு அளவுக்கு ஆகும் வரையிலான நேரம் அஸர் தொழுகைக்குரிய நேரமாகும் .

3 – ம.:.ரிப் .. சூரியன் மறைந்ததிலிருந்து செம்மேகம் மறையும் வரையுள்ள நேரம் ம.:.ரிப் தொழுகைக்குரிய நேரமாகும் . செம்மேகம் என்பது சூரியன் மறைந்ததன் பின் வானில் தென்படும் சிவப்பு நிறப் படலத்தைக்குறிக்கும் .

4 – இஷா.. ம.:.ரிபுடைய நேரம் முடிவடைந்ததிலிருந்து நள்ளிரவு வரையுள்ள நேரம் இஷாத் தொழுகைக்குரிய நேரமாகும் .

5 – ஸூபஹ் .. பஜ்ர் எனப்படும் கிழக்கு இரண்டாம் தடவையாக வெளிக்க ஆரம்பிக்கும் நேரத்திலிருந்து சூரியன் உதயமாகும் வரையுள்ள நேரம் ஸூபஹூடைய நேரமாகும் .

இவற்றிக்கு ஆதாரமாகப் பின்வரும் நீண்ட ஹதீது காணப்படுகின்றது .

நபியவர்கள் கூறினார்கள் ...

“சூரியன் சாய்ந்ததிலிருந்து ஒரு மனிதனின் நிழல் அவன் அளவுக்கு ஆகும் வரையுள்ள நேரம் ளுஹருடைய நேரமாகும் . இதிலிருந்து சூரியன் செம்மஞ்சலாகும் வரைக்குமுள்ள நேரம் அஸருடைய நேரமாகும் . இதிலிருந்து செம்மேகம் மறையும் வரைக்குமுள்ள நேரம் ம.:.ரிபுடைய நேரமாகும் . இதிலிருந்து நள்ளிரவு வரைக்குமுள்ள நேரம் இஷாவுடைய நேரமாகும் . பஜ்ர்

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

உதயமானதிலிருந்து  சூரியன் உதயமாகும் வரைக்குமுள்ள நேரம் ஸுபஹுடைய நேரமாகும்.

( அறிவிப்பவர் இப்னு அம்ர் ஆதாரம் முஸ்லிம் . )

## ஐவேளைத் தொழுகைகளின் ரக்ஆத்துக்கள் .

ஐவேளைத் தொழுகைகளின் ரக்அத்துக்கள் மொத்தம் பதினேழு ஆகும் . அவை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

ளுஹர் ... நான்கு ரக்ஆத்துக்கள் .
அஸர் ... நான்கு ரகஆத்துக்கள் .
ம.:ரிப் ... மூன்று ரக்ஆத்துக்கள் .
இஷா ...  நான்கு றக்ஆத்துக்கள் .
ஸுபஹ் ... இரண்டு ரக்ஆத்துக்கள் .

எனவே எவராயினும் இந்த ரக்ஆத்துக்களின் எண்ணிக்கைகளில் கூட்டல் –குறைத்தல் போன்றவற்றில் வேண்டுமென்று ஈடுபட்டால் அவரது தொழுகை பாதில் – வீணானதாக ஆகி விடும் .தவறுதலாக இவ்வாறு நிகழ்ந்தால் அதனை சரி செய்து வீட்டு இறுதியில் ஸலாம் கொடுப்பதற்கு முன்பாக ஸஜ்தா ஸஹ்வு – மறதிக்கான ஸுஜூது செய்ய வேண்டும் .
மேற்படி றக்ஆத்துக்களின் எண்ணிக்கை பிரயாண நேரம் தவிர்ந்த ஏனைய காலப் பகுதியிலேயே .. பிரயாண வேளையின் போது நான்கு ரக்ஆத்துத் தொழுகைகளை இரண்டாகச் சுருக்கித் தொழுவதற்குப் பிரயாணிக்கு அனுமதியுண்டு .

ஆகவே ஒவ்வொரு முஸ்லிம்களும் இந்த ஐவேளைத் தொழுகைகளையும் தவறாது கடைப்பிடித்து வருவது கடமையாகும் . இஸ்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய தூக்கம் ,மறதி இடையூறுகள் மூலம் தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதில் சற்று தாமதம் ஏற்படின் அவை நீங்கியவுடனேயே தொழுகையை நிறைவேற்ற வேண்டும் . தொழுகை நேரம் வந்து வீட்டதை மறந்து வீட்டிருந்தால் நினைவு வந்தவுடனும் , தூக்கத்தில் ஆழ்ந்திருந்தால் விழிப்பு வந்தவுடனும் தொழ வேண்டியது கடமையாகும் .

## தொழுகையின் பர்ழுகள்

( கட்டாய கடமைகள் )

தொழுகையின் பர்ழுகளைச் சுருக்கமாக பனிரெண்டு

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

விடயங்களுக்குள் உள்ளடக்கலாம் . அவையாவன....

1 – சக்தியுள்ளவர்கள் நின்று தொழுதல் .
2 – தக்பீரத்துல் இஹ்ராம் – ஆரம்ப தக்பீர் கட்டுதல் .
3 – ஸூரத்துல் பாத்திஹா ஓதுதல் .
4 – றுகூஉ செய்தல் .
5 – றுகூஉவில் இருந்து எழுந்து நிலைக்கு வருதல் .
6 – ஸூஜூது செய்தல் .
7 – இரு ஸூஜூதுகளுக்கிடையில் நடு இருப்பு இருத்தல் .
8 – இரண்டாவது அத்தஹிய்யாத் ஓதுதல் .
9 – அதற்காக இருத்தல் .
10 – ஒவ்வொரு பர்ழுகளிலும் தும.:னீனத் – எனும் அமைதி பெறல் .( உடல் உறுப்புகளின் அசைவுகள் ஓயும் வரை ஒவ்வொரு பர்ழுகளிலும் கொஞ்சம் காத்திருத்தல் அவசியம் . )
11 – ஒவ்வொரு பர்ழுகளையும் ஒழுங்கு முறைப்படி செய்தல் .
12 – இறுதியில் ஸலாம் கொடுத்தல் .

## தொழுகையின் வாஜிப்கள் .

( முக்கியமானவைகள் )

தொழுகையின் வாஜிப்கள் மொத்தம் எட்டாகும் . இவற்றில் சில வாஜிபா ,ஸூன்னத்தா? என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில்

கருத்து வேறுபாடுகள் இருப்பினும் பேணுதல் கருதி இவை வாஜிப்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன .

1 – தக்பீரதுல்இன்திகால் – தொழுகையின் ஒரு நிலையை விட்டு மற்றொரு நிலைக்குச் செல்லும் போது தக்பீர் சொல்லுதல் .

2 – றுகூஉவின் பின் நிலைக்கு வருகையில் "ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா" என்று சொல்லுதல் .

3 – நிலைக்கு வந்ததும் " றப்பனா லகல் ஹம்து என்று கூறுதல் இது இமாம் ,ம:.மூம் தவிர்ந்த தனித்துத் தொழுபவருக்கு அவசியமாகும் .

4 – றுகூஉவில் ஸுப்ஹான றப்பியல் அளீம் என்று கூறுதல் .

5 – ஸுஜூதில் " ஸுப்ஹான றப்பீ அல் அ:.லா " என்று கூறுதல் .

6 – இரு ஸஜ்தாக்களுக்கிடையில் " றப்பி:.பிர்லீ " என்று கூறுதல்

7 – முதலாவது அத்தஹிய்யாத் ஓதுதல் . அதாவது " அத்தஹிய்யாத்து அல் முபாரகாத்து அஸ்ஸலவாத்து அத் தய்யிபாத்து லில்லாஹி அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ்ஸாலிஹீன் அஷ்ஹது அன் லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதுர்ரஸூலுல்லாஹ் ." என்ற அத்தஹிய்யாத்தையோ அல்லது வேறு வார்த்தைப் பிரயோகத்தில் நபி மொழிகளில் இடம் பெற்ற அத்தஹிய்யாத்தையோ ஓத வேண்டும் .

8 – முதலாவது அத்தஹிய்யாத்திற்காக இருத்தல் .

தொழுகையின் பர்ழுகளில் ஒன்றை விட்டால் அவரது தொழுகை பாத்திலாகி விடும் . அவ்வாறே வாஜிப்களில் ஒன்றை வேண்டுமென்று விட்டாலும் தொழுகை பாத்திலாகி விடும் . மறதியாக அல்லது தெரியாத்தனமாக விட்டால்

அதற்காக ஸஜ்தா ஸஹ்வு –மறதிக்கான ஸூஜூது செய்ய வேண்டும் . அதாவது தொழுகையை முடித்து ஸலாம் கொடுப்பதற்கு முன்னதாக இரு ஸூஜூதுகள் செய்ய வேண்டும் .அதிலே” ஸூப்ஹான மன் லாஎனாமு வலா எஸ்ஹூ “ என்று ஓத வேண்டும் .

## ஸலாத்துல் ஜமாஅத்

( கூட்டுத் தொழுகை )

ஒவ்வொரு முஸ்லிமான ஆண்களும் ஐவேளைத் தொழுகைகளை பள்ளிவாயலில் ஜமாஅத்துடன் நிறைவேற்றுவது கடமையாகும் . இதன் மூலம் அல்லாஹ்வின் அருளையும் , அளப்பரிய நன்மைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் . ஜமாஅத்தாகத் தொழுதல் தனியாகத் தொழுவதை விட 27 மடங்கு நன்மைகளை அதிகப்படியாகக் கொண்டிருக்கின்றது .

நபியவர்கள் கூறியுள்ளார்கள் ...

“ கூட்டாகத் தொழுதல் தனித்துத் தொழுவதை விட 27 மடங்கு அதிக நன்மையுடையதாயிருக்கின்றது” .

( அறிவிப்பவர் இப்னு உமர் ஆதாரம் புகாரி முஸ்லிம் .)

பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் பள்ளிக்கு வருவதை விட வீட்டிலேயே தொழுது கொள்வதே மிகச்சிறந்தது .

## தொழுகையை முறிக்கக் கூடியவைகள் .

பின்வரும் விடயங்களில் ஒன்றில் ஒருவர் தொழுகையில் இருக்கும் நிலையில் ஈடுபட்டால் அவரது தொழுகைமுறிந்து விடும் . அவையாவன ….

1 – வேண்டுமென்றே உண்ணல் பருகல் போன்றவற்றில் ஈடுபடல் .அறிஞர்களின் ஏகோபித்த கருத்துப் படி தொழுகையில் உண்ணல் பருகல் போன்றவற்றில் ஈடுபடுபவரது தொழுகை முறிந்து விடும். அவர் அத்தொழுகையைத் திருப்பித் தொழு வேண்டும் .

2 – வேண்டுமென்றே பேசுதல் … தொழுகையோடு சம்பந்தமில்லாத எந்தவிதப் பேச்சையும் பேசுவதால் ஒருவரது தொழுகை வீணாகி விடும் .

ஸைத் பின் அர்க்கம் றழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் .. நாங்கள் தொழுகையில் கதைத்துக் கொண்டிருப்போம் .எங்களில் ஒருவர் தனது நண்பரிடம் தொழுகையின் போதே பேசுவார்.. . “ அல்லாஹ்வுக்கு அச்சமுடையவர்களாக நின்று வணங்குங்கள் “ எனும் வசனம் இறங்கும் வரை இவ்வாறு நிகழ்ந்தது . அதன் பின்பு தொழுகையில் பேசக்கூடாது என்றும் அமைதியாக இருக்க வேண்டுமென்றும் எங்களுக்குக் கட்டளை

யிடப்பட்டது . ( ஆதாரம் முஸ்லிம் .)

இது போன்றே அனைத்து மார்க்க அறிஞர்களும் தொழுகையில் பேசுவதால் தொழுகை முறிந்து விடுமென ஏகோபித்து முடிவெடுத்துள்ளார்கள் .

3 – தொழுகைக்கு அப்பாற்பட்ட அதிக செயல்களில் ஈடுபடல். ஆதிக செயல் என்பதன்வரையறையாவது வெளியிலிருந்து பார்க்கும் ஒருவர் இவர் தொழுகையில் இருக்கின்றாரா அல்லது வேறு வேலையில் ஈடுப்டிருக்கின்றாரா ? என்று சந்கேிக்கும் அளவுக்கு அதிகமாக இருத்தல் .

4 – தொழுகையின் சர்த்துக்களில் ஒன்றையோ , றுக்ன்களில் ஒன்றையோ எவ்வித காரணமுமின்றி வேண்டுமென்று விடுதல் . உதாரணமாக உளூ இல்லாமல் அல்லது கிப்லாவை முன்னோக் காமல்தொழுதல் . நபியவர்கள் தொழுகையை சரிவர நிறைவேற்றாத ஒரு கிராம வாசியைப் பார்த்து “மீண்டும் சென்று தொழுவீராக. ஏனெனில் நீங்கள் தொழவில்லை “ என்று கூறினார்கள்.

5 – தொழுகையில் சிரித்தல் .. உலமாக்களின் ஏகோபித்த கருத்தின் படி தொழுகையில் சிரிப்பதால் அத்தொழுகை முறிந்து விடுகின்றது .

## தொழக்கூடாத நேரங்கள் .

பின்வரும் நேரங்களில் தொழக்கூடாதென இஸ்லாத்தில் தடுக்கப்பட்டுள்ளது . அந்நேரங்களில் நாம் தொழுகையில் ஈடுபடாமலிருப்பது அவசியமாகும் .

○ – ஸுபஹ் தொழுததிலிருந்து சூரியன் உதயமாகி ஒரு ஈட்டியளவுக்கு உயர்வதற்கு இடைப்பட்ட நேரம் .

○ – சூரியன் நடு உச்சியில் இருக்கும் நேரம் .

○ – அஸர் தொழுததிலிருந்து சூரியன் மறையும் வரைக்கும் இடைப்பட்ட நேரம் .

இவற்றிக்கு ஆதாரமாகப் பின்வரும் நபிமொழி காணப்படுகின்றது .

. "சூரியன் உதித்ததிலிருந்து அது ( ஈட்டியளவு ) உயரும் வரை, சூரியன் நடு உச்சிக்கு வந்ததிலிருந்து அது சாயும் வரை , சூரியன் மறைய ஆரம்பித்ததிலிருந்து முழுமையாக மறையும் வரைக்குமுள்ள .மூன்று நேரங்களிலும் தொழுவதோ , மரணித்தவர்களை அடக்கம் செய்வதோ கூடாது என நபியவர்கள் எங்களைத் தடுத்தார்கள் "

( அறிவிப்பவர் உக்பா பின் ஆமிர் ஆதாரம் முஸ்லிம் .)

" அஸர் தொழுகையின் பின் சூரியன் மறையும் வரையும் , ஸுபஹ் தொழுததிலிருந்து சூரியன் உதயமாகும் வரைக்கும் எவ்வித தொழுகையும் கிடையாது என நபியவர்கள் கூறினார்கள் .

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

( அறிவிப்பவர் அபூ ஸயீத் ஆதாரம் புகாரி முஸ்லிம் )

# தொழும் முறை .

முஸ்லிம்கள் அனைவரும் தமது வணக்க வழிபாடுகளை நபி (ஸல்) அவர்களது வழிகாட்டலின் படியே அமைத்துக் கொள்வது கடமையாகும் . நபியவர்கள் தொழுகை பற்றி இயம்புகையில் "நான் எவ்வாறு தொழுவதை நீங்கள் பாத்தீர்களோ அவ்வாறே நீங்கள் தொழுங்கள்". என்று கூறியுள்ளார்கள் . எனவே நாம் தொழுகையை நபி (ஸல்) அவர்களது வழிகாட்டலின் படியே நிறைவேற்ற வேண்டும் .

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் முன்னிலையில் தன்னை முன்னிறுத்தித் தொழ ஆரம்பித்தார்களாயின் தமது மனதினால் தொழுவதாக நிய்யத் வைத்துக் கொள்வார்கள் . அவர்கள் நிய்யத்தை வாயால் மொழிந்ததற்கு எந்த வித ஆதாரமும் இல்லை . பின் "அல்லாஹு அக்பர்" என்று கூறியவர்களாக தம் இரு கைகளையும் தோள்ப்புயம் வரை உயர்த்தி தக்பீர் கட்டுவார்கள் . சில வேளைகளில் காதுச்சோனை வரைக்கும் கூடக் கைகளை உயர்த்துவார்கள் . தக்பீர் கட்டும் போது தமது இடது கை மீது வலது கரத்தை வைத்து நெஞ்சின் மீது தக்பீர் கட்டுவார்கள் . பின்னர் துஆஉல் இஸ்திப்தாஹ் எனும் வஜ்ஜஹ்து ஓதுவார்கள் .

இதில் பல்வேறு துஆக்களை நபியவர்கள் ஓதியுள்ளார்கள். பின்வரும் துஆ மிகச் சுருக்கமானது . "ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜித்துக வலா இலாஹ கைறுக்க "

பொருள் ... அல்லாஹ்வே உன் புகழ் கொண்டு உன்னைத் தூய்மைப் படுத்துகின்றேன் . உன் திரு நாமம் மிக உயர்ந்தது . உன் கருணை மிக்க ஓங்கியது . உன்னையன்றி வேறு கடவுளே கிடையாது .

இதன் பின் ஸூரத்துல் பாத்திஹாவையும் மற்றுமொரு சிறிய சூராவையும நபியவர்கள் ஓதுவார்கள் .பின்னர் தம் இரு கைகளையும் உயர்த்தி அல்லாஹு அக்பர் என்று கூறியவர்களாக றுகூஉ செய்வார்கள் . றுகூஉவில் தமது முதுகுப்பகுதியை நேராக நிமிர்த்தி வைப்பார்கள் . அதன் மீது ஒரு பாத்திரத்தை வைத்தால் அது கவிழ்ந்து விழாதிருக்குமளவுக்கு நேரானதாக அவர்களது முதுகு காணப்படும் . றுகூஉவில் " ஸுப்ஹான றப்பியல் அளீம் " உயர்வு மிகு எனது இரட்சகன் மிகப் பரிசுத்தமானவன் " என்று மூன்று முறை ஓதுவார்கள் . பின்னர் ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா: என்று கூறியவர்களாக றுகூஉவை விட்டு எழுந்து இ:திதால் எனும் நிலைக்கு வந்து நேராக நிமிர்ந்து நிற்பார்கள் .

பின்னர் " அல்லாஹு அக்பர் " என்று தக்பீர் கூறிக் கொண்டே ஸுஜூது செய்வார்கள் .ஸுஜூதில் தம் கைகளைக் கமக்கட்டு தெரியும் வரை விலாப்புறத்தை விட்டும் தூரமாக்கி தம் முகம் , முன் நெற்றி, மூக்கு , இரு உள்ளங்கைகள் , இரு முழங்கால்கள் , பாதத்தின் ஓரங்கள் ஆகியவைகள் பூமியில் நன்றாகப் படுமளவுக்கு நன்றாக ஸுஜூது செய்வார்கள் . ஸுஜூதிலே "ஸுப்ஹான றப்பீ அல் அ:லா " உயர்வு மிகு என் இறைவன் பரிசுத்தமானவன் என மூன்று முறை ஓதுவார்கள் . பின்னர் அல்லாஹு அக்பர் என்று கூறியவாரே ஸுஜூதை விட்டு

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

எழுந்து நடு இருப்புக்கு வருவார்கள் . அதில் “இப்திராஸ்”எனும் முறையில் உட்கார்வார்கள் . அதாவது இடது காலை படுக்கை நிலையில் வைத்து அதன் மீது அமர்ந்து வலது காலை நட்ட வைத்து அதன் விரல்கள் கிப்லாத் திசையில் ஆகுமளவுக்கு வளைத்து உட்காரும் இருப்பைக் குறிக்கும். அதிலே “ றப்பி:.பிர்லீ வர்ஹம்னீ வஜ்புர்னீ வஹ்தினீ வஆபினீ வ:.பு அன்னீ “ இறைவா … என் பாவங்களை மன்னிப்பாயாக , எனக்கு அருள் பாலிப்பாயாக , என் அந்தஸ்த்தை உயர்த்தி நேர்வழி காட்டுவாயாக , எனக்கு உடலாரோக்கியத்தையும் இரண விஸ்தீரணத்தையும் வழங்குவாயாக . என்று பிரார்த்திப்பார்கள் . பின்னர் தக்பீர் கூறிய படியே இரண்டாவது ஸுஜூதுக்குச் செல்வார்கள் .

இத்துடன் ஒரு ரக்அத் நிறைவு பெறுகின்றது. பின்னர் இரண்டாவது ரக்அத்துக்காக எழுந்து நிற்பார்கள் .

இவ்வாறே தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் செய்வார்கள் .இரண்டு ரக்அத்துக்கள் நிறைவு பெற்றதும் முதலாவது அத்தஹிய்யாத்துக்காக உட்கார்வார்கள் .

அத்தஹிய்யாத் ஓதும் முறை வருமாறு ….

“ அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வறஹ்மதுல்லாஹி வபரகாத்துஹூ , அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ்ஸாலிஹீன். அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹூ வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ , அல்லாஹூம்ம ஸல்லி அலா முஹம்மதின் “ என ஓதுவார்கள் .பின்னர் தக்பீர் சொல்லிக் கொண்டே எழுந்து மூன்றாம் றக்அத்துக்காக நிற்பார்கள் .

இரண்டாவது அத்தஹிய்யாத்திற்காக உட்காரும் போது (தவர்ருக் ) எனும் அமைப்பில் உட்கார்வார்கள் .( அதாவது தனது பித்தட்டு தரையில் படும் படி அமர்ந்து இடது காலை வலது முன்னங்காலினூடாக வெளியாக்கி வலது கால் நட்டப்பட்ட நிலையில் அதன் விரல்கள் கிப்லாவை நோக்கியிருக்கும் படி அமர்ந்து தனது கை விரல்களைப் பொத்திய படி ஆள் காட்டி விரலை மாத்திரம் விரித்து வைத்து அதன் மூலம் அசைத்து சமிக்கை செய்வார்கள் . பார்வையும் அந்த விரலை நோக்கியிருக்கும் படி வைப்பார்கள் .

அத்தஹிய்யாத் ஓதி முடிந்த பின்னர் முதலில் வலது புறமும் அப்பால் இடது புறமும் திரும்பியவர்களாக “ அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் “ என்று கூறியவர்களாக ஸலாம் கொடுப்பார்கள் . அதில் தம் கன்னங்கள் மறு பக்கம் தெரியும் வரை நன்றாகத் திரும்பி ஸலாம் கொடுப்பார்கள் .

நபி (ஸல் ) அவர்கள் மேற்கூறிய முறைப்பிரகாரம் தொழுததாகப் பல் வேறு ஹதீதுகளில் அறிவிக்கப்படுகின்றன.

தொழுகையின் முக்கியமான சட்டங்கள் இங்கே குறிப்பிடப் பட்டுள்ளன. இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலமே ஒருவரது தொழுகை ஒப்புக் கொள்ளப்பட்ட தொழுகையாக ஆகின்றது . தொழுகை சரியானால் அவரது ஏனைய இபாதத்களும் சீரடைகின்றன . தொழுகை இல்லையேல் ஏனைய இபாதத்களும் சீரழிந்து விடுகின்றன . தொழுகையைப் பற்றியே மறுமையில் ஒவ்வொரு மனிதனிடமும் முதன் முதலில் விசாரிக்கப்படும் . அதை அவன் சரிவர நிறைவேற்றியிருந்தால் அல்லாஹ்வின் அருள் கொண்டு வெற்றியடைந்து விடுகின்றான் . அதில் ஏதேனும் குறைபாடு செய்திருப்பின் அவனது நிலை பரிதாபத்திற்குரியதாக ஆகி விடும் .

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

மேலும் தொழுகையானது மனிதனை மானக் கேடான வெறுக்கத்தக்க தீய செயல்களை விட்டும் தடுக்கின்றது . அது மனிதனின் இதயத்தில் ஏற்படும் தீய எண்ணங்களுக்கு சிகிச்சையளித்து மோசமான சிந்தனைகளை விட்டும் அவன் மனதைப் பாதுகாக்கின்றது .

இஸ்லாத்தின் மூன்றாம் கடமை

# ஸக்காத் .

ஸக்காத் என்ற அறபுச் சொல் தூய்மை , வளர்ச்சி , அபிவிரித்தி போன்ற அர்த்தங்களில் உபயோகிக்கப்படுகின்றது . இஸ்லாத்தின் பார்வையில் ஸக்காத் எனப்படுவது குறிப்பிட்ட ஒருவரது சொத்திலிருந்து குறிப்பிடப்பட்ட சாராருக்கு உரிய நேரத்தில் வளங்கப்படும் வரையறுக்கப்பட்ட ஒரு கட்டாயக் கொடுப்பனவாகும் .

## ஸக்காத் விதியாக்கப்பட்டதன் நோக்கம் ...

ஸக்காத் என்பது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும் . இது அல்குர்ஆனில் பல்வேறு இடங்களில் தொழுகையுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது .

அல்லாஹ் கூறுகின்றான் ....

﴿وَأَقِيمُوا الصَّلاةَ وَآتُوا الزَّكَاةَ﴾ [سورة البقرة: من الآية43]

“ நீங்கள் தொழுகையை நிறைவேற்றுங்கள் .மேலும் ஸக்காத்தையும் கொடுத்து வாருங்கள்.

(பகரா 43 ம் வசனம் )

[سورة البينة: من الآية5]﴾وَيُقِيمُوا الصَّلاةَ وَيُؤْتُوا الزَّكَاةَ﴿

**“ அவர்கள் தொழுகையை நிலை நிறுத்துமாறும் ஸக்காத்தைக் கொடுக்குமாறுமே அன்றி ( ஏவப்பட வில்லை .) . ( பய்யினா 5 ம் வசனம் .)**

**மேலும் நபியவர்கள் கூறியுள்ளார்கள் … “ இஸ்லாம் ஐந்து தூண்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது .. இந்த ஹதீதின் தொடரில் நபியவர்கள் ஸக்காத்தையும் கூறிக்காட்டினார்கள் .”**

**அல்லாஹுத்தஆலா ஸக்காத்தை விதியாக்கியதன் நோக்கம் யாதெனில் மனித இதயங்களை உலோபித்தனம் , பேராசை , போன்றதுர்க்குணங்களைவிட்டும் தூய்மைப்படுத்துவதற்காக வும், ஏழை மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை செல்வந்தர்களும் உணர வேண்டும் என்பதற்காகவும் , பொருளாதாரம் சுத்தமடைந்து அதில் மெம்மேலும் பரக்கத்தும் அபிவிருத்தியும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் ஸக்காத்தை விதியாக்கியுள்ளான் . அது போன்று ஸக்காத் ஒரு மனிதனுக்கு ஏற்படவிருக்கும் தீங்குகள் , ஆபத்துகளை அவனை விட்டும் தடுக்கின்றது . அது போன்றே ஒரு சமூகம் பெற்றிருக்க வேண்டிய அடிப்படைத் தேவைகள் ஸக்காத் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதன் மூலமே நிறைவு செய்யப் படுகின்றது .**

**அல்லாஹ் கூறுகின்றான் …**

[سورة التوبة: من الآية103]﴾خُذْ مِنْ أَمْوَالِهِمْ صَدَقَةً تُطَهِّرُهُمْ وَتُزَكِّيهِمْ بِهَا﴿:

**“ நபியே நீர் அவர்களது செல்வத்திலிருந்து ஸக்காத்தை**

வஸூல் செய்வீராக . அதன் மூலம் அவர்களைப் பரிசுத்தப் படுத்தி ( அவர்களது அகங்களையும்) தூய்மைப்படுத்துவீராக .. ( தவ்பா 103ம் வசனம் )

## இஸ்லாத்தின் பார்வையில் ஸக்காத் .

ஸக்காத் இஸ்லாத்தின் தூண்களில் ஒன்றாகும் . குறிப்பிட்டளவு செல்வத்தை வைத்திருக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் ஸக்காத்தைக் கொடுப்பது கடமையாகும் . சிறுவர் , புத்தி சுவாதீனமற்றவர்களின் செல்வத்திலிருந்தும் கூட அவர்களுக்காக அவர்களது பாதுகாவலர்கள் ஸக்காத்தைக் கொடுத்தாக வேண்டும் . ஸக்காத் இஸ்லாமியக் கடமைகளில் ஒன்று என்பதை வேண்டுமென்றே ஒருவர் மறுத்தால் அவர் காபிராகி விடுகின்றார் . உலோபித்தனத்தின் காரணத்தினால் அல்லது பொடுபோக்கினால் ஸக்காதை மறுத்தால் அவர் பெரும் பாவம் புரிந்தோரின் பட்டியலில் சேர்க்கப்படுவார் . அதே நிலையில் அவர் மரணித்தால் மறுமையில் அவரது நிலை என்ன ? என்பது பற்றி அல்லாஹ்வே அறிந்தவன் .

அல்லாஹ் கூறுகின்றான் .....

: ﴿إِنَّ اللَّهَ لا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَنْ يَشَاءُ﴾ [سورة النساء: من الآية48]

" நிச்சயமாக அல்லாஹ் அவனுக்கு இணை வைக்கப்படுவதை ஒரு போதும் மன்னிக்க மாட்டான் . அதல்லாத இதரபாவங்களை தான் விரும்பியோருக்கு மன்னிப்பான் .

( அந்நிஸா:. 41 ம்வசனம் .)

எனவே அவனிடமிருந்து ஸக்காத் தொகை பலவந்தமாக அரசால் அறவிடப்படும் . அத்துடன் ஸக்காத் கொடுக்காதிருந்ததன் காரணத்தால் அவன் ஒரு குற்றவாளியாகக் கருதப்பட்டு த:.ஸீர் எனும் எச்சரிக்கை சார்ந்த தண்டனையும் வழங்கப்படும் .ஸக்காத்தைக் கொடுக்க மறுக்கும் கூட்டத்தினருக்கு அல்லாஹ் பின்வருமாறு எச்சரிக்கை வீடுக்கின்றான் .

﴿ وَالَّذِينَ يَكْنِزُونَ الذَّهَبَ وَالْفِضَّةَ وَلا يُنْفِقُونَهَا فِي سَبِيلِ اللَّهِ فَبَشِّرْهُمْ بِعَذَابٍ أَلِيمٍ. يَوْمَ يُحْمَى عَلَيْهَا فِي نَارِ جَهَنَّمَ فَتُكْوَى بِهَا جِبَاهُهُمْ وَجُنُوبُهُمْ وَظُهُورُهُمْ هَذَا مَا كَنَزْتُمْ لأَنْفُسِكُمْ فَذُوقُوا مَا كُنْتُمْ تَكْنِزُونَ﴾

[سورة التوبة، من الآية:34]

" தங்கத்தையும் வெள்ளியையும் சேமித்து வைத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாமல் இருப்போருக்கு கடுமையான வேதனை இருப்பதாக நபியே நீங்கள் எச்சரிக்கை வீடுங்கள் . அவற்றை நரக நெருப்பில் பழுக்கக் காய்ச்சப்பட்டு பின்னர் அவற்றைக் கொண்டு அவர்களுடைய நெற்றியிலும் விலாப் புறங்களிலும் முதுகுகளிலும் சூடு போடப்படும் நாளில் உங்களுக்காக நீங்கள் சேகரித்து வைத்தவை இவைதாம் எனவே நீங்கள் சேகரித்தவற்றைச் சுவைத்துப் பாருங்கள் ( என்று அவர்களுக்கு கூறப்படும்) . (தவ்பா :. 34 – 35 ம் வசனங்கள் .)

நபி (ஸல் ) அவர்கள் கூறியிருக்கின்றார்கள் ...

" செல்வத்தை வைத்துக் கொண்டு அதற்குரிய ஸக்காத்தை கொடுக்காமல் இருக்கும் ஒவ்வொரு செல்வந்தனுக்கும் மறுமையில் அவனது செல்வம் நரக நெருப்பில் கொதிக்கக்

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

காய்ச்சப்பட்டு பட்டைகளாக ஆக்கப்பட்டு அவனது நெற்றியிலும் இரு விலாக்களிலும் சூடு போடப்படும் . இவ்வேதனையானது அல்லாஹ் மக்கள் மத்தியில் தீர்ப்புச் செய்யும் வரை 50 வருட காலமாக தொடர்ந்து கொண்டிருக்கும் . அதன் பின்பே அவர்கள் சுவர்க்கத்திற்கோ , நரகத்திற்கோ செல்ல முடியும் . . ( ஆதாரம் புகாரி முஸ்லிம் )

## ஸக்காத்கடமையாவதற்கான . நிபந்தனைகள் .

ஸக்காத் கடமையாகுவதற்கு ஐந்து நிபந்தனைகள் உள்ளன .

1 – இஸ்லாம் .... காபிர்களுக்கு ஸக்காத் கடமையில்லை .

௨ – சுதந்திரப் பிரஜையாயிருத்தல் . அதிக அறிஞர்களின்கருத்துப்படி அடிமையோ உரிமைச்சீட்டுஎழுதப்பட்டவரோ ஸக்காத் கொடுக்க வேண்டியதில்லை .

3 – நிஸாப் எனும் குறிப்பிட்ட அளவுக்கு செல்வம் இருத்தல் .( இது பற்றி பின்னர் விபரிக்கப்படும் )

4 – அச்செல்வம் முழுமையாக அவரது சொந்தச் சொத்தாக இருத்தல் . எனவே கடன் பட்டு வைத்திருக்கும் பணத்திற்கோ, பங்கு வியாபாரத்தில் தனக்குரிய சிறிய தொகைக்கோ ஸக்காத் வேண்டியதில்லை . அவ்வாறே வறியோர் ,போராளிகள் அற நிறுவனங்கள் போன்றவற்றிக்கு வக்பு செய்யப்பபட்ட சொத்துக்களுக்கும் ஸக்காத் வேண்டி யதில்லை .

5 – ஒரு வருடம் பூர்த்தியாகியிருத்தல் . சொத்து தனது கைக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தியாகாத செல்வத்திற்கும் ஸக்காத் கடமையில்லை .

பூமியிலிருந்து விளையும் உணவுப்பொருட்களுக்கு அவற்றை அறுவடை செய்த உடனேயே ஸக்காத் கொடுத்து விட வேண்டும் . ஏனெனில் அல்லாஹ் கூறுகின்றான் ...

" ﴿وَآتُوا حَقَّهُ يَوْمَ حَصَادِهِ﴾ [سورة الأنعام: من الآية141]: அவற்றிக்குரிய பங்கை அறுவடை செய்த அன்றே கொடுத்துவிடுங்கள் ." ( அன்ஆம் 141 ம் வசனம் .)

அது போன்றே பூமியிலிருந்து கிடைக்கும் அரிய உலோகங்கள் புதையல் போன்றவற்றுக்கும் உடனடியாகவே ஸக்காத் கொடுக்க வேண்டும் . கால்நடைகளின் குட்டிகளைப் பொறுத்த வரை அவற்றின் தாய்க்கு ஒரு வருடம் பூர்த்தியாவதே இவற்றுக்கும் ஒரு வருடம் பூர்த்தியானதாகக் கருதப்படும் . அவ்வாறே வியாபாரத்தில் கிடைத்த இலாபப் பங்கையும் அதன் முதலீட்டுத் தொகையுடன்

சேர்த்து வியாபாரம் ஆரம்பித்த ஒரு வருட முடிவில் இரண்டுக்குமாக ஸக்காத் கொடுக்க வேண்டும் .

## ஸக்காத் கடமையாகும் பொருட்கள் .

ஸக்காத் கடமையாகும் பொருட்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம் .

1– தங்கம் , வெள்ளி , பணம் . இவற்றில் பத்தில் ஒருபங்கில் நான்கில் ஒன்றை அதாவது நாப்பதில் ஒரு பகுதியை ( நூற்றுக்கு இரண்டரை வீதம் ) ஸக்காத் கொடுக்க வேண்டும் . இவை நிஸாபை அடைந்ததிலிருந்து ஒரு வருடகாலம் தன் கைவசம் இருந்தாலே ஸக்காத் கடமையாகும் .

தங்கத்தின் நிஸாப் – அளவு 20 மித்கால் ஆகும் . ஒரு மித்காலின் இன்றைய அளவு 4,25 கிறாம் ஆகும் . எனவே இதன் மொத்த அளவு 85 கிராம் ஆகும் .

வெள்ளியின் ஆரம்ப அளவு 200 திர்ஹம்களாகும் . இதன் இன்றைய மொத்த நிறை 595 கிறாமாகும் .

இன்று நடைமுறையிலிருக்கும் நாணய நோட்டுக்களைப் பொறுத்த வரை விற்பனைச்சந்தையில் அதன் பெறுமதி நாளாந்தம் கூடிக்குறையும் நிலையில் இருப்பதால் நிலையான ஒரு நிஸாப் – ஆரம்ப அளவை அதற்கு நிர்ணயிப்பது சிரமமாகும் . எனவே ஒரு வருடம் பூர்த்தியாகும் போது அவனிடமிருக்கும் பணம் அன்றைய சந்தை மதிப்பின் படி 85 கிறாம் தங்கத்திற்கோ அல்லது 595 கிறாம் வெள்ளியின் பெறுமதிக்கோ சமமானதாக இருந்தால் அவற்றிக்கு இரண்டரை வீதம் ஸக்காத் கொடுப்பது

கடமையாகும் . அந்த நோட்டு டொலராகவோ , பிரேங்காகவோ , றியாலாகவோ வேறு எந்தப் பெயரில் இருப்பினும் சரி . நிஸாப் அளவை விடக் கூடுதலான பணம் வைத்திருப்பவர் மீதிப்பணத்தையும் கணக்கிட்டு இரண்டரை வீதப்படி ஸக்காத் கொடுக்க வேண்டும் .

இவற்றுக்கு ஆதாரமாகப் பின்வரும் ஹதீது காணப்படுகின்றது .

நபியவர்கள் கூறினார்கள் ....

“ உன்னிடம் 200 திர்ஹம்கள் ஒரு வருடம் முழுமையாக இருந்தால் அதில் 5 திர்ஹம்கள் ஸக்காத் கொடு . அதுதவிர வேறு எதுவும் உனக்குக் கடமையில்லை . உன் பணம் 20 தீனாராக ஆகி ஒரு வருடம் பூர்த்தியானால் அதில் அரை தீனாரை ஸக்காத் கொடுத்து விடு . அதைவிட அதிக அளவுள்ள பணத்திற்கு இரண்டரை வீதக்கணக்கின் படி கணக்கிட்டு ஸக்காத் கொடு . ஒரு வருடம் பூர்த்தியடையும் வரை பணத்திற்கு ஸக்காத் கொடுக்க வேண்டியதில்லை . ( அபூ தாவூத் )

தங்க , வெள்ளி நகைகளைப் பொறுத்தவரை அவற்றை விற்பனைக்காகவோ அல்லது சேமித்தோ வைத்திருந்தால் அவற்றுக்கு ஸக்காத் கொடுப்பது கடமையாகும் .( இதில் கருத்து வேறுபாடு கிடையாது . ) வழக்கமாக வைத்திருக்கும் நகைகளைப் பொறுத்த வரை அவற்றிக்கும் ஸக்காத் கடமையாகும் . பின் வரும் ஹதீதுகள் அதற்கு ஆதாரமாக இருக்கின்றன.

ο – நபியவர்களிடத்தில் ஒரு பெண் தனது மகளையும் அழைத்துக் கொண்டு வந்தாள் . மகளது கரங்களில் தங்கத்தினாலான கனமான இரு காப்புகள் இருந்தன .இதைக் கண்ணுற்ற நபியவர்கள் “ இதற்குரிய ஸக்காத்தைக்

கொடுத்து விட்டாயா ? எனக் கேட்ட போது அதற்கு அவள் இல்லையென பதிலளித்தாள் . உடனே நபியவர்கள் அதற்காக நெருப்பாலான இரு காப்புகள் உனக்கு அணிவிக்கப்பட்டால் நீ சந்தோசமாக ஏற்றுக் கொள்வாயா ? “ என்று கேட்டார்கள் . உடனே அப்பெண் இரு காப்புகளையும் கழட்டிக் கீழே போட்டு விட்டு இவை அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் உரியதாகும் .. எனக் கூறினாள் . (ஆதாரம் – அபூ தாவூத் ) .

o – அன்னை ஆயிஷா ( றழி) அறிவிக்கின்றார்கள் ... ஒருமுறை நபியவர்கள் என்னிடம் வந்தார்கள் . அப்போது என் கையில் வெள்ளி வளையல்கள் இருப்பதைப் பார்த்ததும் ஆயிஷாவே .. என்னஇது ? என்று வினவினார்கள் . உங்களுக்கு அழகு காட்டுவதற்காக நானே அவற்றைச் செய்தேன் என்று நான் கூறினேன் . இதற்குரிய ஸக்காத்தைக் கொடுத்து விட்டாயா ? என்று கேட்டதும் இல்லை என்று பதிலளித்தேன் . நீ நரகத்திற்குச் செல்ல இதுவே போதும் என்று பதிலளித்தார்கள் . . ( ஆதாரம் அபூதாவூத் .)

(பெண்கள் வழக்கமாக அன்றாடம் அணியும் நகைகளுக்கு ஸக்காத் வேண்டியதில்லை என்று கூறும் அறிஞர்கள் மேற்படி ஹதீஸ்களுக்கு பதிலளிக்கையில் அவை வழக்கத்திற்கு மாற்றமாக அதிக அளவில் இருந்ததால் நபியவர்கள் அவ்வாறு கூறினார்கள் என்று கூறுகின்றனர் .)

விலையுயர்ந்த உலோகங்கள் , இரத்தினக்கல் , வைரம் போன்றவற்றுக்கு அதிக அறிஞர்களின் கருத்துப்படி ஸக்காத் கடமையில்லை . அவற்றை விற்பனைக்காக வைத்திருந்தால் வியாபாரச் சரக்கு என்ற பெயரில் ஸக்காத் கொடுக்க வேண்டும் .

உ – கால்நடைகளுக்கான ஸக்காத் . கால்நடைகளில் ஆடு ,மாடு , ஒட்டகம் ஆகியவற்றில் மாத்திரம் அவை பெரும் பாலும் மேய்ச்சலுக்குச் சென்று உணவு தேடுபவையாக இருப்பின் அவற்றுக்கு ஸக்காத் கடமையாகும் .

நபியவர்கள் கூறினார்கள் ....

" மேய்ச்சலுக்குச் சென்று வரும் ஒவ்வொரு ஒட்டகத்திற்கும் ஸக்காத் கடமையாகும் . .
. (ஆதாரம் அபூதாவூத் )

மேய்ச்சலுக்குச் சென்றுவரும் ஆடுகளுக்கு அவை நிஸாபை அடைந்து ஒரு வருடம் பூர்த்தியானதும் ஸக்காத் கடமையாகும் .
. (ஆதாரம் புகாரி )

## கால் நடைகளுக்கான ஸக்காத் அளவு ..

| | நிஸாப் – அடிப்படை அளவு | ஸக்காத்தின் அளவு |
|---|---|---|
| | 5 – ல் இருந்து 9 வரை | ஒரு ஆடு |
| | 10 ல் இருந்து 14 வரை | இரண்டு ஆடுகள் |
| | 15 ல் இருந்து 19 வரை | மூன்று ஆடுகள் |

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

| | | |
|---|---|---|
| **ஒட்டகம்** | 20 ல் இருந்து 24 வரை | நான்கு ஆடுகள் |
| | 25 முதல் 35 வரை | ஒரு வயது ஒட்டகம் ஒன்று |
| | 36 ல் இருந்து 45 வரை | இரண்டு வயது ஒட்டகம் ஒன்று |
| | 46 ல் இருந்து 60 வரை | மூன்று வயது ஒட்டகம் ஒன்று |
| | 61 ல் இருந்து 75 வரை | நான்கு வயது ஒட்டகம் ஒன்று |
| | 76 ல் இருந்து 90 வரை | இரண்டு வயது ஒட்டகங்கள் இரண்டு |
| | 91 ல் இருந்து 120 வரை | மூன்று வயது ஒட்டகங்கள் இரண்டு . |

**இதை விட அதிகமாயிருக்கும் ஒவ்வொரு 40 ஒட்டகங்களுக்கும் இரண்டு வயது ஒட்டகமும் , ஒவ்வொரு 50 ஒட்டகங்களுக்கும் மூன்று வயது ஒட்டகம் ஒன்றும் என்ற அடிப்படையில் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும் .**

| | **நிஸாப் – அடிப்படை அளவு** | **ஸக்காத்தின் அளவு** |
|---|---|---|
| | 30 ல் இருந்து 39 வரை | ஒரு வயது மாடு ஒன்று |
| **மாடு** | 40 ல் இருந்து 59 வரை | இரண்டு வயது மாடு ஒன்று |

| | | |
|---|---|---|
| | 60 ல் இருந்து 69 வரை | ஒரு வயது மாடுகள் இரண்டு |
| | 70 ல் இருந்து 79 வரை | ஒரு வயது மாடு ஒன்றும் இரு வயது மாடு ஒன்றும் |

**இதை விட அதிகமாக இருக்கும் ஒவ்வொரு முப்பது மாடுகளுக்கும் ஒரு வயதுக் கன்று ஒன்றும் ஒவ்வொரு 40 மாடுகளுக்கும் இரண்டு வயதுக் கன்று ஒன்றும் என்ற விகிதத்தின் படி கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும் .**

| ا | **நிஸாப் அடிப்படை . அளவு** | **ஸக்காத்தின் அளவு** |
|---|---|---|
| **ஆடு** | 40 ல் இருந்து 120 வரை | ஒரு ஆடு |
| | 120 ல் இருந்து 200 வரை | இரண்டு ஆடுகள் |
| | 200 ல் இருந்து 300 வரை | மூன்று ஆடுகள் |

**300 ஆடுகளை விட அதிகமாயிருக்கும் ஒவ்வொரு நூறு ஆடுகளுக்கும் ஒரு ஆடு வீதம் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும் .**

**இதற்கு ஆதாரமாக அபூபக்ர் ( றழி) அவர்கள் கலீபாவாக இருந்த போது ஆளுனராக இருந்த அனஸ் ( றழி) அவர்களுக்கு எழுதிய கடிதம் காணப்படுகின்றது . அக்கடிதம் வருமாறு ........**

**“ பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் . இது நபியவர்கள் முஸ்லிம்கள் மீது விதித்த ஸக்காத் திரட்டல் விபரமாகும் . இதனை செயற்படுத்துமாறு அல்லாஹ்வே அவர்களுக்குக் கட்டளை**

யிட்டுள்ளான் . எனவே இதில் கூறப்பட்டுள்ள அளவின் படி ( ஸக்காத் அறவிடுபவரால் ) உங்களிடம் கேட்கப்பட்டால் அதன் படி கொடுக்கவும் .அதை விட அதிகமாகக் கேட்டால் கொடுக்க வேண்டியதில்லை .24 க்கும் அதைவிடக் குறைந்தளவு ஒட்டகங்களுக்கும் ஒவ்வொரு 5க்கும் ஒரு ஆடு வீதமும் , 25 முதல் 35 வரைஉள்ளவற்றுக்கு ஒரு வயதுப் பெண் ஒட்டகமும் , 36 முதல் 45 வரை இரு வயதுப் பெண் ஒட்டகம் ஒன்றும் , 46 முதல் 60 வரை மூன்று வயதுப் பெண் ஒட்டகம் ஒன்றும் , 61 முதல் 75 வரையான ஒட்டகங்களுக்கு நான்கு வயது ஒட்டகம் ஒன்றும் கொடுக்க வேண்டும் .

அவற்றின் எண்ணிக்கை 76 முதல் 90 வரை இருப்பின் இரண்டு வயது ஒட்டகங்கள் இரண்டும் , 91 முதல் 120 வரை மூன்று வயது ஒட்டகங்கள் மூன்றும் , இதை விட அதிகமாயிருக்கும் ஒவ்வொரு 50 க்கும் மூன்று வயது ஒட்டகம் ஒன்று படியும் ஒவ்வொரு 40 ஒட்டகங்களுக்கும் இரண்டு வயது ஒட்டகம் ஒன்று என்ற விகிதப் படியும் ஸக்காத் கொடுக்க வேண்டும் . நான்கு ஒட்டகங்கள் மாத்திரம் வைத்திருக்கும் ஒருவருக்கு அவர் விரும்பினாலேயன்றி அவற்றிக்கு ஸக்காத் கடமையில்லை . ஐந்து ஒட்டகங்களாயிருப்பின் ஒரு ஆடு கொடுக்க வேண்டும் .

ஆட்டைப் பொறுத்த வரை அவை மேய்ச்சலுக்குச் செல்பவையாயின் 40 ல் இருந்து 120 வரையான ஆடுகளுக்கு ஒரு ஆடும் , 120 – 200 வரையான ஆடுகளுக்கு இரு ஆடுகளும் 201 – 300 வரையான ஆடுகளுக்கு மூன்று ஆடுகளும் 300 ஐ விட அதிகமான ஒவ்வொரு நூறு ஆடுகளுக்கும் ஒரு ஆடு வீதமும் கொடுக்க வேண்டும் . ஒருவரிடம் நாற்பதுக்குக் குறைவான ஆடுகள் இருப்பின் அவர் விரும்பினாலேயன்றி அவற்றுக்கு ஸக்காத் கொடுக்க வேண்டியதில்லை .

( ஆதாரம் புகாரி)

முஆத்( றழி ) அவர்கள் அறிவிக்கின்றார்கள் .....

“ நபியவர்கள் அவரை யமன் நாட்டுக்கு கவர்னராக அனுப்பிய போது ஒவ்வெரு முப்பது மாடுகளுக்கும் ஒருவயது மாடும் ஒவ்வொரு 40 மாடுகளுக்கும் இரண்டு வயது மாடு ஒன்றும் கொடுக்க வேண்டும் எனக் கட்டளையிட்டார்கள் .

( ஆதாரம் அஹ்மத் )

கால்நடைகள் ஈன்ற குட்டிகளும் நிஸாப் அளவை எட்டியிருந்தால் அவற்றையும் எண்ணிக்கையில் சேர்க்கப்படும் . அவை குட்டிகளின்றி நிஸாபை எட்டாவிடில் குட்டிகளுடன் சேர்த்து நிஸாபை அடைந்த தினத்திலிருந்து ஒரு வருடம் பூர்த்தியானதும் அவற்றிக்கு ஸக்காத் கொடுக்க வேண்டும் .

கால்நடைகளை வர்த்தக நோக்கத்தில் வைத்து வியாபாரத்தில் ஈடுபடுவோர் அவற்றை வர்த்தகச் சரக்காகக் கருதி அவற்றின் மொத்தப் பெறுமதியைக் கணக்கிட்டு அதில் இரண்டரை வீதம் ஸக்காத் கொடுக்க வேண்டும் . போக்குவரத்து மற்றும் சொந்த உபயோகத்திற்காக வைத்திருக்கும் கால்நடைகளுக்கு ஸக்காத் வேண்டியதில்லை . ஏனெனில் நபியவர்கள் “ ஒரு மனிதன் தான் வைத்திருக்கும் அடிமைக்கோ , தனது வாகனமான குதிரைக்கோ ஸக்காத் கொடுக்க வேண்டியதில்லை.” என்று கூறியுள்ளார்கள் .

## விளை பொருட்கள் , பழங்களுக்கான ஸக்காத் விபரம் .

மேற்படி பொருட்களின் அளவு அறுவடையின் போது நிஸாப் எனும் ஆரம்ப அளவை அடைந்தாலேயே இவற்றுக்கு ஸக்காத் கடமையாகி விடும். ஒரு வருடம் பூர்த்தியாக வேண்டிய அவசியமில்லை .

இவற்றின் நிஸாப் ஐந்து அவ்ஸூக் ஆகும் . ( அவ்ஸூக் என்பது ஓர்

அரேபிய அளவு முறையாகும் ) . இது அறுபது ஸா:. ஆகும் . இதன் படி நிஸாபின் அளவு 300 ஸா:. கள் ஆகின்றன . இதன் இன்றைய அளவு 652 கிலோ 800 கிராம்களாகும் . எனவே இந்தளவு தானியமோ , பழமோ வைத்திருப்பவர் அறுவடை முடிந்தவுடனேயே ஸக்காத் கொடுப்பது அவசியமாகும் . ஏனெனில் அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿وَآتُوا حَقَّهُ يَوْمَ حَصَادِهِ﴾[سورة الأنعام: من الآية141]

"அதனுடைய பங்கை அறுவடை செய்த தினமே கொடுத்து விடுங்கள் ." என்று கூறுகின்றான் . ( அன்ஆம் 141 ம் வசனம் .)

## இவற்றுக்கான ஸக்காத் வீகிதம் .

மேற்படி விளைபொருட்களுக்கான பயிர்ச்செய்கை பணச்செலவுடனான நீர்ப்பாசனம் மூலம் உற்பத்தியாகியிருப்பின் இருபதில் ஒரு பகுதியும் ( அதாவது ஐந்து வீதமும் ) இலவச நீர்ப்பாசனத்தின் மூலம் விளைந்தவையாயின் பத்தில் ஒரு பகுதியும் ( பத்து வீதம் ) ஸக்காத் கொடுக்க வேண்டும் .

## வியாபாரப் பொருட்களுக்கான ஸக்காத் விபரம் .

வர்த்தக நோக்கில் ஒருவர் சேமித்து வைத்திருக்கும் அனைத்துப் பொருட்களையும் இது உள்ளடக்கும் . பெரும் பாலான பொருட்களில் இதன் காரணத்தினாலேயே ஸக்காத் கடமையாகின்றது . இவற்றுக்கும் இவை நிஸாப் எனும் ஆரம்ப அளவை அடைந்ததிலிருந்து ஒரு வருடம் பூர்த்தியாகும் போதே ஸக்காத் கடமையாகின்றது .

**இவற்றின் நிஸாப் ..** எண்பது கிராம் தங்கம் அல்லது 595 கிராம் வெள்ளியின் பெறுமதிக்குச் சமமான பெறுமதி அவற்றுக்கு மதிப்பீடப்படும் பட்சம் அவ்வளவினையே அவற்றின் ஸக்காத் நிஸாப் அளவாகக் கொள்ளப்படும் . வியாபாரப் பொருட்களுக்கு விலை போடும் போது அவற்றைக் கொள்வனவு செய்த விலையை விடுத்து அன்றைய சந்தையில் அதற்கான ( மொத்த) விலையினையே கருத்தில் கொள்ள வேண்டும் .

**இவற்றின் ஸக்காத் வீதம் ...** வியாபாரச் சரக்குகளைப் பொறுத்தவரை அவற்றின் மொத்த பெறுமதியின் இரண்டரை வீதத்தை ( நாற்பதில் ஒரு பகுதி ) ஸக்காத்தாகக் கொடுக்க வேண்டும் . வியாபாரத்தில் பெற்ற இலாபப் பங்கையும் அது நிஸாபை அடைந்திருப்பின் மேற்படி தொகையுடன் சேர்க்க வேண்டும் . அதற்குத் தனியாக ஒரு வருடம் பூர்த்தியாக வேண்டுமென்பது அவசியமில்லை .

வர்த்தகச் சரக்கின் இலாபம் தவிர்ந்த மொத்தப் பெறுமதி நிஸாபை எட்டவில்லையாயின் இலாபத்தையும் சேர்த்துப் பார்க்கும் போது நிஸாபை எட்டியிருந்தால் அது நிஸாபை அடைந்த நாளிலிருந்து ஒரு வருடம் கழித்து அவற்றுக்கு ஸக்காத் கொடுக்க வேண்டும் .

## புதையல் மற்றும் அரிய உலோகங்களுக்கான . ஸக்காத் விபரம் .

பூமியிலிருந்து கிடைக்கும் பெறுமதிமிக்க உலோகங்களான தங்கம் , வெள்ளி , இரும்பு , பித்தளை, வைரம் , மற்றும் பெற்றோலியம் , நில வாயுக்கள் அனைத்துக்கும் ஸக்காத் கடமையாகும் .ஏனெனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் ...

﴿ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَنْفِقُوا مِنْ طَيِّبَاتِ مَا كَسَبْتُمْ وَمِمَّا أَخْرَجْنَا لَكُمْ مِنَ الْأَرْضِ﴾

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

[سورة البقرة: من الآية267]

" விசுவாசிகளே .. நீங்கள் சம்பாதித்ததில் நல்லவற்றிலிருந்தும் நாங்கள் உங்களுக்குப் பூமியிலிருந்து வெளிப்படுத்திய வற்றிலிருந்தும் நீங்கள் ( நல் வழியில் ) செலவு செய்யுங்கள் . . ( பகரா உ68 ம் வசனம் .)

எனவே உலோகப் பொருட்களும் பூமியிலிருந்து வெளிப்பட்டவை –களின் பட்டியலில் அடங்குவதால் அவற்றுக்கும் ஸக்காத் கடமையாகும் . அதிக அறிஞர்களின் கருத்துப் படி இதன் அளவும் நிஸாபை அடைந்திருப்பது அவசியமாகும் . அத்துடன் இவற்றுக்கும் இரண்டரை வீதமே ஸக்காத் கொடுக்க வேண்டும் . ஆனால் இவற்றுக்கு ஒரு வருடம் பூர்த்தியாகிருப்பது நிபந்தனையில்லை . எனவே இவை கிடைத்த உடனேயே இரண்டரை வீதத்தை ஸக்காத் கொடுத்து விட வேண்டும் .

## புதையலுக்கான ஸக்காத்.

புதையல் எனப்படுவது முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் பூமியில் புதைத்து விட்டுச் சென்ற தங்கம் , வெள்ளி இவை போன்ற பெறுமதி மிகு பொருட்களைக் குறிக்கும் . அத்துடன் அவற்றின் உரிமையாளர்கள் இப்போது இல்லையென்பதும் , அல்லது அவர்களது வாரிசுகள் யாரும் இப்போது இல்லை என்பதும் உறுதியாகத் தெரிந்திருத்தல் வேண்டும் . இது போன்றே அவை முஸ்லிம்களுக்குச் சொந்தமானவை அல்ல என்பதை அறிவிக்குமுகமாக கல்வெட்டு , ஓவியம் , சித்திரம் இப்படி ஏதேனும் ஒன்று இருத்தல் வேண்டும் .

அவை முஸ்லிம்களுக்குரியவையே என்பதற்கு ஆதாரமாக நபிகளாரின் பெயர், அல்குர்ஆன் வசனம் ,பழைய முஸ்லிம் மன்னர்களின் பெயர்கள் இப்படி ஏதேனும் காணப்பட்டால் அவற்றுக்கு ( லுக்தா: ) “ கண்டெடுத்த பொருள் “ எனப்படும் . அவை புதையலல்ல . இவ்வாறே யாருக்குரியது என்பது பற்றி எத்தகைய அத்தாட்சியும் இல்லாதிருப்பினும் அவற்றுக்கு கண்டெடுக்கப்பட்ட பொருள் என்றே சொல்லப்படும் . எனவே இது யாருடையது என வினவப்பட்டு அறிவித்தல் விடுக்கப்பட்டு உரிமை கோர எவருமே முன்வராத பட்சத்திலேயே அதைக் கண்டெடுத்தவர் சொந்தமாக்கிக் கொள்ள முடியும் .
புதையல் மூலம் கிடைத்த பொருட்களுக்கு ஐந்தில் ஒரு பகுதி அதாவது இருபது வீதம் ஸக்காத் கொடுக்க வேண்டும் . ஏனெனில் நபியவர்கள் “ புதையலுக்கு ஐந்திலொன்று ஸக்காத் கொடுக்க வேண்டும் “ என்று கூறியுள்ளார்கள் .” எனவே அதிக அறிஞர்களின் கருத்துப்படி புதையலின் பெறுமதி கூடுதலாகவோ குறைவாகவோ எப்படியிருப்பினும் அதில் ஐந்திலொன்றை ஸக்காத் கொடுத்து விட வேண்டும் . இந்த ஸக்காத் தொகை பைஉ: எனும் கொடுப்பனவைப் பெறத் தகுதியானவர்களுக்குப் பங்கிடப் படும் . மீதி நான்கிலொரு பகுதி புதையலைக் கண்டெடுத்தவருக்கே உரித்தானதாகும் . ஏனெனில் உமர் (றழி) அவர்கள் மீதிப் புதையலை அதனைக் கண்டெடுத்தவருக்கே கொடுத்துள்ளார்கள் .

## ஸக்காத் பெறத் தகுதியுடையோர் .

ஸக்காத் வினியோகப் பங்கீட்டினைப் பெறத் தகுதியானோர்களை எட்டுப் பிரிவினராகப் பிரிக்கலாம் .

1– பக்கீர் – பரம ஏழை . அதாவது வாழ்க்கைச்

செலவினங்களைச் சமாளிப்பதற்கு எவ்வித வசதியுமற்றோரும் , மிகக் குறைந்தளவு வசதியைப் பெற்றிருப்போரும் இப்பிரிவில் அடங்குவர் . இவர்களுக்கு ஒரு வருடச் செலவினங்களுக்குப் போதுமானளவு தொகைப் பணமோ , பொருளோ ஸக்காத் நிதியிலிருந்து வழங்கப்படும் .

உ – மிஸ்கீன் . ஏழை எழியவர்கள் . இவர்கள் முதல் பிரிவினரை விடக் கொஞ்சம் கூடுதல் வசதி பெற்றவர்கள் . தமது வாழ்க்கைத் தேவைகளில் அரைவாசியையோ , அதற்குக் கூடுதலாகவோ நிறைவுசெய்து கொள்ளும் அளவுக்கு வசதி படைத்தவர்கள் . இவர்களுக்கும் தமது வருமானம் தவிர்த்து ஒரு வருடத்திற்குத் தேவையானளவு தொகை வழங்கப்படும் .

3 – ஆமில்கள் – ஸக்காத் வஸூலிக்கும் பணியில் ஈடுபடுவோர் . இஸ்லாமிய அரச கட்டளைக்கேற்ப தனவந்தர்களிடம் சென்று அவர்களது பொருட்களைக் கணக்கிட்டு அவற்றுக்குரிய ஸக்காத் தொகையை வஸூலித்தல் , அவைகளை உரிய முறையில் பாதுகாத்தல் பராமரித்தல் , தகுதியுடையோருக்கு வினியோகித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டிருப்போர் . இவர்களுக்கு இவர்கள் செய்த சேவைக்குரிய சம்பளத்தின் அளவுக்குரிய தொகை ஸக்காத் நிதியத்தில் இருந்து வழங்கப்படும் .

4 – இஸ்லாத்தை விரும்புவோர் . இவர்களை புதிதாக இஸ்லாத்தை ஏற்றோர் , ஏற்கும் நிலையில் இருப்போர் என இரு பிரிவாகப் பிரிக்கலாம் . இதில் விரைவில் இஸ்லாத்தை ஏற்கக் கூடும் என எதிர்பார்க்கப் படுபவர்களுக்கும் , அல்லது அவர்களுக்குக் கொடுப்பதால் முஸ்லிம்களுக்கெதிரான செயலில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள் என்று எண்ணுமிடத்து அவர்களுக்கும் ஸக்காத் நிதியிலிருந்து வழங்கப்படும் . இஸ்லாத்தில் புதிதாக இணைந்தவர்களுக்கு அவர்கள்

இஸ்லாத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கும் வழங்கப்படும் .

5 – அடிமைகள் . தமது எஜமானர்களுக்குப் பணம் செலுத்தி வீட்டு அவர்களிடமிருந்து விடுதலையாகி விடலாம் எனும் நிபந்தனைக்கேற்ப உரிமைச்சீட்டு எழுதப்பட்டவர்கள் . மேற்படி தொகையை இவர்கள் செலுத்த வேண்டுமென்பதற்காக இவர்களுக்கும் ஸக்காத் நிதியிலிருந்து வழங்கப்படும் . வேறு சில அறிஞர்களின் கருத்துப்படி உரிமைச்சீட்டு எழுதப்படாத அடிமைகளைக் கூட அவர்களது எஜமானர்களிடம் பேசி அவர்களை விலைக்கு வாங்கி உரிமையிட முடியும் .

6 – கடன்பட்டோர் . இவர்கள் இரண்டு வகைப்படுவார்கள் .

1 – தனது சொந்தத் தேவைக்காகக் கடன் பட்டோர்.

2 – சமாதான நோக்கம் போன்ற பொதுத் . தேவைகளுக்காகக் கடன் பட்டோர் .

சொந்தத் தேவைகளுக்காகக் கடன் பெற்றோருக்கு அவர்கள் தமது கடனை அடைக்குமளவுக்குரிய தொகை ஸக்காத் நிதியிலிருந்து அவர்களுக்கு வழங்கப்படும் . பொது விடயங்களுக்காகக் கடன் பட்டோர் அவர்கள் செல்வந்தர்களாக இருப்பினும் அவர்களுக்கு கடன் பட்டளவுக்கு தொகை ஸக்காத் நிதியிலிருந்து வழங்கப்படும் .

7 – அல்லாஹ்வின் பாதையில் ஈடுபடுவோர் . அதாவது அரச நிதியிலிருந்து எவ்வித ஊதியமும் பெறாமல் அல்லாஹ்வுக்காகப் புனிதப் போரில் ஈடுபட்டிருக்கும் போர் வீரர்களுக்கும் ஸக்காத் நிதியிலிருந்து வழங்கப்படும் .

8 – பிரயாணிகள் . அதாவது பிரயாணத்தின் போது வழிப்பறி, கொள்ளை , களவு போன்றவற்றுக்கு இலக்காகி தமது

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

**உடமைகளை இழந்து தமது சொந்த இடங்களுக்கு மீண்டு செல்ல வழியில்லாமல் தவிப்போர் இப்பிரிவில் அடங்குவர். இவர்களுக்கும் தமது பிரயாணத்தை முடிக்குமளவுக்குத் தேவையான தொகை ஸக்காத் நிதியத்திலிருந்து வழங்கப்படும் . மேற்குறிப்பிடப்பட்ட எட்டுக்கூட்டத்திரையும் பற்றி அல்லாஹ் அல்குர்ஆனில்இவ்வாறு பிரஸ்தாபிக்கின்றான்...**

﴿إِنَّمَا الصَّدَقَاتُ لِلْفُقَرَاءِ وَالْمَسَاكِينِ وَالْعَامِلِينَ عَلَيْهَا وَالْمُؤَلَّفَةِ قُلُوبُهُمْ وَفِي الرِّقَابِ وَالْغَارِمِينَ وَفِي سَبِيلِ اللَّهِ وَابْنِ السَّبِيلِ فَرِيضَةً مِنَ اللَّهِ وَاللَّهُ عَلِيمٌ حَكِيمٌ﴾ [سورة التوبة: 60]

**“ (ஸக்காத் ) தர்மங்களெல்லாம் வறியவர்களுக்கும் , ஏழைகளுக்கும் , அதற்காக உழைப்பவர்களுக்கும், ( புதிதாக இஸ்லாத்தை ஏற்றோரில்) எவர்களது இதயங்கள் அன்பு செலுத்தப்பட வேண்டுமோ அத்தகையவர்களுக்கும் , (அடிமைகளின் ) பிடரிகளை விடுதலை செய்வதற்கும்.,கடனில் மூழ்கியவர்களுக்கும் , அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதற்கும் ,வழிப்போக்கர்களுக்கும் உரித்தானதாகும் . இது அல்லாஹ் ஏற்படுத்திய கடமையாகும் . மேலும் அல்லாஹ் நன்கறிபவன் . தீர்க்கமான ஞானமுடையவன் .**

**( தவ்பா 60 ம் வசனம் ,)**

## ஸக்காத்துல் பித்ர் .

ஸக்காத்துல் பித்ர் என்பது றமழான் நோன்பு நோற்ற முஸ்லிம்கள் தமக்கும் தமது பொறுப்பிலுள்ளவர்களுக்குமாக ஏழைகளுக்குக் கொடுக்கும் தானிய நன்கொடையைக் குறிக்கும் .

### இது கடமையாக்கப்பட்டதன் நோக்கம் .

ஸக்காத்துல் பித்ர் நோன்பாளிகளிடம் ஏற்பட்ட சிறு தவறுகள் மன்னிக்கப்பட வேண்டுமென்பதற்காகவும் பெருநாள்க் காலங்களில் ஏழைகளுக்குப் போதியளவு உணவு கிடைக்க வேண்டுமென்பதற்காகவும் , அன்றைய தினமாவது அவர்கள் பிறரிடம் கையேந்தாமல் இருக்க வேண்டுமென்பதற்காகவும் இது விதியாக்கப்பட்டிருக்கின்றது .

இது பற்றி நபிமொழியில் வருவதாவது.....

“ நபியவர்கள் ஏழைகளுக்கு உணவு கிடைக்க வேண்டுமென்பதற்காகவும் ,நோன்பாளியின் வீண் பேச்சுக்களை விட்டும் அவனது அமல்கள் தூய்மையடைய வேண்டுமென்பதற் –காகவும் ஸக்காத்துல் பித்ரைக் கடமையாக்கினார்கள் .”

ஸக்காத்துல் பித்ர் ஒவ்வொரு முஸ்லிமான ஆண் பெண், பெரிய சிறிய, சுதந்திரமானவர் அடிமை அனைவருக்கும் கடமையாகும் . இது பற்றி இப்னு உமர் (றழி) கூறியுள்ளார்கள் ....

“ நபியவர்கள் ஸக்காத்துல் பித்ராக ஒரு ஸா:.உ பேரீத்தம் பழத்தையோ , கோதுமையையோ ஒவ்வொரு ஆண் பெண் ,சிறிய

பெரிய , அடிமை சுதந்திரமான அனைவரும் கொடுக்கவேண்டுமென விதித்தார்கள் .

( புகாரி –முஸ்லிம் .)

இதை கற்பத்திலிருக்கும் சிசுக்காகவும் கொடுப்பது நல்லதாகும் .

எனவே ஒரு முஸ்லிம் தனக்காகவும் தன்பராமரிப்பின் கீழ் இருப்பவர்களான மனைவிமக்கள் உறவினர்களுக்காகவும் கொடுக்க வேண்டும் . பெருநாள் தினத்தன்று தன்னிடம் இருக்கும் உணவு தனக்கும் தன் பராமரிப்பில் இருப்போருக்கும் போதாவிட்டால் அவர் ஸக்காத்துல் பித்ர் கொடுக்க வேண்டியதில்லை .

## இதன் அளவு .

இதன் அளவு ஒரு ஸா∴உ ஆகும் . தனது ஊரில் பிரதான உணவாகக் கொள்ளப்படும் தானியமான மணிக்கோதுமை , தொலிக் கோதுமை , பேரீட்சை , திராட்சை , அரிசி, சோளம் போன்ற எந்த வகைத் தானியத்தையும் கொடுக்கலாம் . ஒரு ஸா∴உ என்பது தற்கால அளவையின் படி சுமார் 2 கிலோ 200 கிராம்களாகும் .

அதிக அறிஞர்களின் கருத்துப்படி இதற்குச் சமமான பணத்தை ஸக்காத்துல் பித்ராகக் கொடுக்க முடியாது . ஏனெனில் அது நபிகளாரின் கட்டளைக்கும் , ஸஹாபாக்களின் வழிமுறைக்கும் மாற்றமாக உள்ளது .

## இதை எப்போது கொடுக்க வேண்டும் ?

பெருநாள் தினத்திற்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னரும் இதைக் கொடுக்கலாம் . பெருநாள் தினத்தின் ஸுபஹ் நேரத்திலிருந்து பெருநாள் தொழுகையை நிறைவேற்றி முடிப்பதற்கு முன்னராகக் கொடுப்பது மிகச் சிறந்தது . ஏனெனில் இந்த வேளையில் கொடுக்குமாறே நபியவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள் . பெருநாள் தொழுகை முடிவுறும் வரைக்கும் இதைப்பிற்படுத்துவது கூடாது . அவ்வாறு செய்தால் அது ஸதகாக் கொடுத்ததாகவே அமையும் . இதற்காக அவர் குற்றவாளியாகவும் நேரிடும் .

**இதை யாருக்குக் கொடுக்க வேண்டும் ?.**

ஸக்காத்துல் பித்ரை மிஸ்க்கீன்களுக்கும், பரம ஏழைகளுக்குமே கொடுக்க வேண்டும் .

இஸ்லாத்தின் நான்காவது கடமை

# நோ ன் பு .

நோன்பு என்றால் என்ன ?

நோன்பு என்றால் அகராதியில் வாய் மூடியிருத்தல் என்று பொருள்ப்படும் .

இஸ்லாத்தின் பார்வையில் நோன்பு எனப்படுவது பஜ்ர் நேரத்திலிருந்து சூரியன் மறையும் வரை நோன்பை முறிக்கும் காரியங்கள் எதிலும் ஈடுபடாதிருத்தலைக்குறிக்கும் .

## இஸ்லாத்தின் நோன்பின் நிலை .

றமழான் மாதத்தில் நோன்பு நோற்பது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகவும் அதன் அஸ்த்திவாரமாகவும் திகழ்கின்றது . அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِينَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ﴾

[سورة البقرة، الآية:183]

" விசுவாசிகளே.. நீங்கள் பயபக்தியுள்ளவர்களாக ஆக வேண்டுமென்பதற்காக உங்களின் முன்னிருந்தவர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போன்றே உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது . ( பகரா 183 ம் வசனம் )

மேலும் நபியவர்கள் கூறியிருக்கின்றார்கள் .. இஸ்லாம் ஐந்து தூண்களின் மீது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது .அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லையென்று சாட்சி சொல்லுதல், தொழுகையினை நிலை நாட்டுதல், ஸக்காத் கொடுத்தல், நோன்பு நோற்றல் , அல்லாஹ்வின் வீடான க.:.பாவை ஹஜ் செய்தல் . ( அறிவிப்பவர் இப்னு உமர் புகாரிமுஸ்லிம் )

நோன்பு ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் விதியாக்கப்பட்டது .

## நோன்பின் சிறப்பும் அதன் குறிக்கோளும் .

றமழான் மாதம் அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதற்கும் அவனது அளப்பரிய அருட்கொடைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் ஒரு அரிய வாய்ப்பாகும் . அவ்வாறே அல்லாஹ் தான் விரும்பிய சில நல்லடியார்களுக்கே அவர்களது நன்மைகள் அதிகரிப்பதற்காகவும் , அந்தஸ்த்துகள் அதிகரிப்பதற்காகவும் , பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காகவும் , அவர்களுக்கும் அல்லாஹ்வுக்கும் மத்தியில் நெருங்கிய தொடர்பு ஏற்பட வேண்டுமென்பதற்காகவும் இந்த நோன்பை நேற்கக் கூடிய வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றான் .

அதன் மூலம் அவர்கள் அவனது அருளையும் திருப்பொருத்தத்தையும் பெற்று இறையச்சமும் பயபக்தியும் நிறைந்த இதயம் படைத்தவர்களாக ஆகிவிட முடியும் .

இந்த றமழான் நோன்பின் சிறப்புக்குப் பின்வரும் வசனங்களும் , நபிமொழிகளும் சான்று பகர்கின்றன .

அல்லாஹ் கூறுகின்றான் ....

﴿ شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنْزِلَ فِيهِ الْقُرْآنُ هُدىً لِلنَّاسِ وَبَيِّنَاتٍ مِنَ الْهُدَى وَالْفُرْقَانِ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ وَمَنْ كَانَ مَرِيضاً أَوْ عَلَى سَفَرٍ فَعِدَّةٌ مِنْ أَيَّامٍ أُخَرَ يُرِيدُ اللَّهُ بِكُمُ الْيُسْرَ وَلا يُرِيدُ بِكُمُ الْعُسْرَ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللَّهَ عَلَى مَا هَدَاكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ ﴾ [سورة البقرة، الآية:18]

றமழான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும் நேர்வழியின் தெளிவாகவுமான சத்தியத்திலிருந்து அசத்தியத்தைப் பிரித்துக் காட்டக் கூடியதுமான இந்த அல்குர்ஆன் அருளப்பட்டது . ஆகவே உங்களில் யார் அம்மாதத்தை அடைந்து கொள்கின்றாரோ அவர் அதிலே நோன்பு நோற்கட்டும் . எவரேனும் நோயாளியாகவோ பிரயாணியாகவோ இருந்தால் மற்ற நாட்களில் அவற்றைக் கணக்கிட்டு நோற்று விடவும் . அல்லாஹ் உங்களுக்கு

இலகுவையே நாடுகின்றான் . உங்களுக்கு சிரமத்தை நாட வில்லை . மேலும் நோன்பின் எண்ணிக்கையினை நீங்கள் பூர்த்தி செய்வதற்காகவும் அல்லாஹ்வை உங்களுக்கு அவன் நேர்வழி காட்டியதற்காக நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும், நீங்கள் நன்றி செலுத்த வேண்டுமென்பதற்காகவுமே இச்சலுகைகளை அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ளான் .

( பகரா 185 ம் வசனம் .)

நபியவர்கள் கூறினார்கள் ...

" யார் றமழான் மாதத்தில் முழுமையான ஈமானுடனும் , நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கின்றாரோ அவரது முன்னைய பாவங்கள் அனைத்தும் ( அதன் மூலம் ) மன்னிக்கப்பட்டு வீடுகின்றன .

( அறிவிப்பவர் அபூ ஹுரைரா ஆதாரம் புகாரி முஸ்லிம் .)

அல்லாஹ் கூறுகின்றான் ...

" ஒவ்வொரு நன்மையான காரியங்களுக்கும் அல்லாஹ்விடத்தில் பத்து மடங்கிலிருந்து எழுநூறு மடங்கு வரையான நன்மைகள் வழங்கப்படுகின்றன . நோன்பைத்தவிர ஏனெனில் அது எனக்காக நோற்கப்பட்டது .எனவே நானே அதற்குக் கூலி கொடுப்பேன் . அம்மனிதன் தனது உணவையும் தன் ஆசாபாசங்களையும் எனக்காகவே தவிர்ந்திருந்தான் . நோன்பாளிக்கு இரு மகிழ்ச்சிகள் இருக்கின்றன . ஒன்று அவன் நோன்பு துறக்கும் போது ஏற்படுகின்றது . மற்றையது அவன் அல்லாஹ்வை ( மறுமையில் ) சந்திக்கும் போதுஏற்படுகின்றது .

நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை இறைவனிடத்தில் கஸ்தூரியைவிட பெறுமதிமிக்கதாகும்

. ( புகாரி முஸ்லிம் .)

மேலும் நோன்பாளி அல்லாஹ்விடம் கேட்கும் துஆவும் இறைவனிடத்தில் தங்குதடையின்றி ஒப்புக்கொள்ளப்படும் .

நபியவர்கள் கூறியுள்ளார்கள் ...

“நோன்பு நோற்றவருக்கு அவர் நோன்பு துறக்கும் வேளையில் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய துஆ ஒன்று இருக்கின்றது .” ( ஆதாரம் இப்னு மாஜா.: )

எனவே நோன்பாளி தான் நோன்பு துறப்பதற்கு சற்றுமுன்னுள்ள நேரத்தை அல்லாஹ்விடத்தில் மனமுருகி தனது தேவைகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் . ஏனெனில் நமது துஆவானது அல்லாஹ் துஆக்களைக் கபூல்ச் செய்யும் நேரத்திற்கு நேர்பட்டு விட்டால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதுவே எமது இருவுலக வெற்றிக்கும் ஈடேற்றத்திற்கும் போதுமானதாக அமைந்து விடும் .

அல்லாஹுத்தஆலா நோன்பாளிகளைக் கண்ணியப்படுத் துவதற்காக அவர்கள் நுழைவதற்கென சுவனத்தில் தனியானதொரு கதவை குறிப்பிட்டு வைத்துள்ளான் . அவர்களைத்தவிர வேறு எவரும் அதனூடாக உட்பிரவேசிக்க முடியாது .

நபியவர்கள் கூறுகின்றார்கள் ...

“சுவர்க்கத்தில் ஒரு கதவு இருக்கின்றது . அதற்கு “றய்யான்” எனப்படும் . மறுமைநாளில் அல்லாஹ்வுக்காக நோன்பிருந்தவர்கள் எங்கே ? என்று அழைப்பு விடுக்கப்படும் . அவர்கள் அனைவரும் நுழைந்து உட்பிரவேசித்ததும் அக்கதவு அடைக்கப்பட்டு விடும் . பின்பு அக்கதவினால் எவரும் உட்பிரவேசிக்க முடியாது . ( புகாரி முஸ்லிம் .)

மறுமையில் நோன்பாளிக்காக அவரது நோன்பு அல்லாஹ்விடத்தில் சிபாரிசு செய்யும் .

நபியவர்கள் கூறினார்கள் ...

“ நோன்பும் அல்குர்ஆனும் மறுமையில் அல்லாஹ்விடத்தில் மனிதனுக்காக சிபாரிசு செய்யும் . நோன்பானது யா அல்லாஹ் ..! யாஅல்லாஹ்! நான் இம்மனிதரை அவரது உணவை விட்டும்

ஆசாபாசங்களை வீட்டும் தடுத்தேன் . எனவே அவருக்கான எனது சிபாரிசை ஏற்றுக் கொள்வாயாக என்று சொல்லும் . குர்ஆனானது யாஅல்லாஹ் .. நான் இவரை இரவில் தனது தூக்கத்தை வீட்டும் தடுத்தேன் . எனவே இவருக்கான எனது சிபாரிசை ஏற்றுக்கொள்வாயாக என்று வாதாடும் .உடனே அல்லாஹ் அவை இரண்டினதும் சிபாரிசை ஏற்றுக் கொள்வான் .

( அறிவிப்பவர் அம்ர் பின் ஆஸ் ஆதாரம் அஹ்மத் .)

நோன்பு ஒரு மனிதனுக்குப் பொறுமை , கஷ்டங்களை ச்சகித்துக் கொள்ளல் , சிரமங்களைத் துணிவுடன் எதிர்கொள்ளல் போன்ற பாடங்களைக்கற்றுக்கொடுக்கின்றது . அவனைத் தனது மனோஇச்சைப்படி செயற்பட வீடாமல் தடுக்கின்றது . தான் விரும்பியவைகளைக்கூட அனுபவிக்காமல் அவற்றைத் துறந்து தன்னால் இருக்க முடியும் என்ற மனக்கட்டுப்பாட்டை அவனுக்கு வழங்குகின்றது .

## நோன்பின் நிபந்தனைகள் .

நோன்பானது ஒவ்வொரு பருவமடைந்த புத்தி சுவாதீனமுடைய , சுகதேகியான , ஊரில் தங்கியிருக்கும் ஒவ்வொருவருக்கும் கட்டாயக் கடமையாகும் என மார்க்க அறிஞர்கள் ஏகோபித்து முடிவெடுத்துள்ளனர் . பெண்களும் அவர்கள் மாதவீலக்கு , பிரசவத் தீட்டு ஆகியவற்றை வீட்டும் சுத்தமாக இருந்தால் அவர்களுக்கும் நோன்பு கடமையாகும் .

## நோன்பின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் .

1 – நோன்பாளி புறம்பேசுதல் , கோள்சொல்லுதல் இன்ன பல ஹறாமான செயல்களை விட்டும் தவிர்ந்திருத்தல் அவசியம். எனவே நோன்பாளி குறிப்பாகத் தனது நாவினைக் கட்டுப்படுத்தி பிறரின் தேவையற்ற விடயங்கள் பற்றிப் பேசி விடாது அதைப் பாதுகாக்க வேண்டும் .

உ – ஸஹர் நேர உணவு தவறி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் . ஏனெனில் ஸஹர் உணவானது நோன்பாளிக்கு வலிமை சேர்த்து பகல் வேளையில் அவன் தனது காரியங்களை உட்சாகத்துடன் மேற்கொண்டு ஆரோக்கியமாக இருக்க உதவுகின்றது . ஸஹர் உணவைத் தவற விடாதிருக்குமாறு நபியவர்கள் பின்வருமாறு போதித்துள்ளார்கள் . " ஸஹர் உணவு பரக்கத் நிறைந்த உணவாகும் . அதை நீங்கள் தவற விட்டு விடாதீர்கள் . ஒரு மிடர் நீரைக் குடித்தாவது ஸஹர் செய்து கொள்ளுங்கள். ஏனெனில் அல்லாஹ்வும் அவன் மலக்குகளும் ஸஹர் செய்பவர்களுக்காக ஸலவாத்சொல்கின்றார்கள்

. (ஆதாரம் அஹ்மத் .)

3 – சூரியன் மறைந்து விட்டதென உறுதியானவுடனேயே விரைவாக – தாமதியாமல் நோன்பு துறக்க வேண்டும். நபியவர்கள் கூறியுள்ளார்கள் ... "நோன்பாளிகள் விரைவாக நோன்பு துறக்கும் காலமெல்லாம் அவர்களுக்கு நன்மையே ஏற்படுகின்றது" .

4 – "றுதப் " எனும் கனிந்த பேரீத்தம்பழம் மூலம் அல்லது சாதாரண பேரீத்தம் பழம் மூலம் நோன்புதுறக்க முயற்சித்தல் வேண்டும் . ஏனைனில் அதுவே நபி

வழியாகும் . அனஸ் ( றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் . “ நபியவர்கள் றுதப் எனும் பேரீத்தம்பழத்தினாலேயே நோன்பு துறப்பார்கள் . அது கிடைக்கா விட்டால் சாதாரண பேரீத்தம் பழத்தினாலும் அதுவும் இல்லா விட்டால் சில மிடர் தண்ணீரின் மூலமும் நோன்பு திறப்பார்கள் .

(ஆதாரம் அபூதாவூத் .)

5 – நோன்பு காலத்தில் அதிகமாக அல்குர்ஆன் ஓத வேண்டும் . மேலும் அல்லாஹ்வைப் புகழுதல் , தானதர்மம் செய்தல் , நல்லறம் , உபரியான வணக்க வழிபாடுகளில் அதிகம் ஈடுபட வேண்டும் . இப்னு அப்பாஸ் ( றழி) அவர்கள் கூறுகின்றார்கள் . “நபியவர்கள் நல்லறங்கள் புரிவதில் மிகவும் ஆர்வமுள்ளவர்கள் . அவர்கள் றமழான் காலத்தில் ஜிப்ரீல் அலை அவர்களைச் சந்தித்து அல்குர்ஆனைக் கற்றுக்கொடுக்கும் வேளை மிகமிக அதிகமாக நல்லறங்களில் ஈடுபடுவார்கள் . அவர்கள் நல்லறங்கள் புரியும் விடயத்தில் வீசும் காற்றை விடவும் அதிகமாக ஈடு படுவார்கள் “.

( புகாரி முஸ்லிம் )

# நோன்பை முறிப்பவைகள் .

நோன்பை முறிக்கும் காரணிகளை பொதுவாகப் பின்வரும் விடயங்களில் உள்ளடக்கலாம் . அவையாவன....

1 – பகற் காலங்களில் வேண்டுமென்று உண்ணல், பருகுதல் . இது போன்றே ஊசி மூலம் உணவூட்டல் , அல்லது வாயால் மருந்துப்

பொருட்களைப் பாவித்தலும் நோன்பை முறித்து விடும் . இரத்தப் பரிசோதனைக்காக சிறிதளவு இரத்தத்தை வெளியேற்றுவதன் மூலம் நோன்பு முறிந்து விடாது .

உ – றமழானின் பகற் காலத்தில் உடலுறவில் ஈடுபடுதல் . இதன் மூலம் நோன்பு முறிந்து விடுவதுடன் இவ்வாறு ஈடுபட்டவர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருவதுடன் “கப்பாரா” எனும் தண்ட குற்றமும் கொடுக்க வேண்டும் . ஏனெனில் இவர் றமழான் மாதத்தின் கண்ணியத்தை மதிக்காது சீர் குலைத்து அதனை உதாசீனம் செய்து விட்டார் . இவர் அந்த நோன்பை களாச் செய்வதுடன் , கப்பாராவாக ஒரு அடிமையை விடுதலை செய்தல் வேண்டும் . முடியாத பட்சத்தில் இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்க வேண்டும் . அதுவும் முடியாவிடில் அறுபது ஏழைகளுக்கு தலா இரண்டு கொத்து பிரதான உணவாகக் கொள்ளப்படும் தானியம் வீதம் உணவளிக்க வேண்டும் .
அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ...
“ஒரு முறை நாங்கள் நபிகளாரிடத்தில் உட்கார்ந்திருக்கும் போது ஒரு மனிதர் வந்து யாரஸூலல்லாஹ் நான் நாசமாகி விட்டேன் என்று கூறினார் . அதற்கு நபியவர்கள் என்ன நடந்தது ? என வினவினார்கள் . அதற்கவர் நான் நோன்பு வேளையில் மனைவியுடன் உறவு கொண்டு விட்டேன் எள்று கூறினார் . அதற்கு நபியவர்கள் உன்னிடம் உரிமையிட அடிமை இருக்கின்றதா ? என்றார்கள் . அதற்கவர் இல்லையென்றதும் இரு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்க முடியுமா? என்று கேட்டார்கள் . அதற்கும் சக்தியில்லை என்றதும் ,அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க முடியுமா ? என்று கேட்டார்கள். அதற்கும் வசதியில்லையென அவர் கூறினார் . பின் நபியவர்கள் கொஞ்ச நேரம் எதுவும் பேசாதிருந்தார்கள் . அப்பொழுது நபியவர்களுக்கு ஒரு கூடைப் பேரீத்தம் பழங்கள் அன்பளிப்பாகக் கொண்டு

வரப்பட்டன . உடனே அந்த மனிதரை அழைத்து " இதனை எடுத்துச் சென்று ஏழைகளுக்கு ஸதகாச் செய்வாயாக" என்று கூறினார்கள் . அதற்கவர் யாரஸூலல்லாஹ் என்னை விடவும் ஏழியவருக்கா ?? . அல்லாஹ்வின் மீது சத்தியமாக இந்த மதீனாவின் இரு எல்லைகளுக்கும் மத்தியில் எனது குடும்பத்தைவிட வறிய நிலையில் இருக்கும் எவரும் கிடையாது என்று கூறினார் . இதனைக் கேட்ட நபியவர்கள் தமது பற்கள் தெரியுமளவுக்கு சிரித்து விட்டு , சரி உனது குடும்பத்திற்கே அதனைக் கொடுப்பாயாக என்று கூறினார்கள் .

( ஆதாரம் புகாரி முஸ்லிம் .)

3 – கட்டியணைத்தல், முத்தமிடல், கரப்பழக்கம் செய்தல் போன்றவற்றால் இந்திரியத்தை வெளியேற்றல் .

எனவே நோன்பாளி மேற்கூறிய விடயங்கள் மூலமாக தனது இந்திரியத்தை வெளிப்படுத்தினால் அவரது நோன்பு பாழாகி விடும் . அவர் அந்த நோன்பைக் கழாச் செய்வதுடன் அந்த மிகுதி நாளை எதுவுமே உண்ணாமல் பருகாமல் கழிக்க வேண்டும். அதற்காகக் கப்பாரா – தண்ட குற்றம் கொடுக்க வேண்டியதில்லை . எனினும் அந்தச் செயலுக்காகக் கவலைப் பட்டு மனமுருகித் தவ்பாச் செய்ய வேண்டும் . இது போன்ற செயல்களின் பக்கம் மீண்டும் செல்லாதிருப்பதாக உறுதி கொள்ள வேண்டும் .

தூக்கத்தின் போது ஸ்கலிதமாகுதல் மூலம் இந்திரியம் வெளிப்பட்டால் அதனால் எந்தப் பாதிப்பும் இல்லை . எனினும் அதற்காகக் குளித்துக் கொள்ள வேண்டும் .

4 – வேண்டுமென்று வாந்தியெடுத்தல் . அதாவது தானாக முனைந்து வயிற்றிளுள்ளவற்றை வெளியேற்றல் . தானாக வாந்தி வந்தால் அதன் மூலமாக நோன்பு முறியாது .

நபியவர்கள் கூறியுள்ளார்கள் ...

“யாருக்கும் கட்டுப்படுத்த முடியாமல் வாந்தி வெளிப்பட்டால் அவரது நோன்பு முறியாது . யாரேனும் வேண்டுமென்று வாந்தியெடுத்தால் அவர் நோன்பைக் கழாச் செய்து கொள்ளட்டும் . ( ஆதாரம் அபூதாவூத் ).

5 – ஹைழ் அல்லது நிபாஸுடைய இரத்தம் வெளிப்படல் . அது பகற் பொழுதின் ஆரம்பத்திலோ இறுதியிலோநோன்பு துறப்பதற்குச் சற்று முன்னர் கூட ஏற்பட்டாலும் சரி .

நோன்பாளிகள் இரத்தம் குத்தி எடுப்பதையும் விட்டு விடுவதே சிறந்தது . ஏனெனில் அதன் மூலமாகக் கூட அவரது நோன்பு முறிந்து விடக் கூடும் . அத்தியாவசியான கட்டங்களிலன்றி வேறு காரணங்களுக்காக இரத்த தானமும் செய்யாதிருப்பதே நல்லது . மூக்கு உடைபட்டதினாலோ, இருமியதாலோ,காயப்பட்டதனாலோ, பல் பிடுங்கியதாலோ இரத்தம் வெளிப்படின் அதன் மூலமாக நோன்புக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது .

## நோன்பு பற்றிய பொதுவான சட்டங்கள் .

றமழான் பிறை கண்டவுடன் நோன்பு பிடிப்பது கடமையாகின்றது . ஏனெனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் ...

﴿فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ﴾[سورة البقرة: من الآية185]

“உங்களில் யார் அந்த மாதத்தை அடைந்து கொள்கின்றாரோ அவர் அதில் நோன்பு நோற்கட்டும்” .

( பகரா 185 ம் வசனம் .)

றமழான் பிறை கண்டதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு

# இஸ்லாமும் அதன் அடிப்படையும்

நேர்மையான ஒரு முஸ்லிமின் சாட்சியே போதுமையானதாகும். .இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ...

" ஒரு முறை மக்களெல்லாம் பிறை காண்பதற்காகக் கூடியிருந்தார்கள். அப்போது நான் நபியவர்களிடம் பிறையைக் கண்டதாகக் கூறினேன் . உடனே நபியவர்கள் தாமும் நோன்பு நோற்று மற்ற மக்களையும் நோன்பு பிடிக்குமாறு கட்டளையிட்டார்கள் . ( ஆதாரம் அபூ தாவூத், தாரமி )

நோன்பின் பிறை விடயத்தில் ஒவ்வொரு நாட்டினரும் அந்த நாட்டு தலைவர் கூறும் முடிவையே எடுத்து நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர் . அவர் நோன்பு நோற்குமாறோ, ((பிறைகண்டது உறுதியாகாததால் )நோற்கக் கூடாதென்றோ கூறினால் அவரது கட்டளைப்படியே நடக்க வேண்டும் . நாட்டின் தலைவர் முஸ்லிமல்லாத பட்சத்தில் முஸ்லிம்களின் ஒற்றுமை குலைந்து போகாதிருப்பதற்காக அந்த நாட்டின் முஸ்லிம்களுக்கான சங்கம் ,நிலையம் எடுக்கும் முடிவினையே ஏற்றுக் கொள்ள வேண்டும் .

செயற்கை வின்வெளி உபகரணங்களின் துணை கொண்டு பிறையினைக் கண்டு பிடிக்க முயற்சிப்பதும் ஆகுமான தாகும்.நட்சத்திரக் கணக்கின் மூலமோ , வான சாஸ்த்திரம் மூலமோ கண்டுபிடிக்கப்பட்ட பிறையினை மையமாக வைத்து நோன்பு நோக்கவோ , துறக்கவோ முடியாது .

பிறையினைக் கண்ணால் காண்பதன் மூலமே நோன்பு பிடிப்பதோ ,விடுவதோ அனைத்தும் செய்யப்படல் வேண்டும் . ஏனெனில் அல்லாஹ் கூறுகின்றான் ....

﴿فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ﴾ [سورة البقرة: من الآية185]

" உங்களில் யார் அந்த மாதத்தைக் காண்கின்றாரோ அவர் நோன்பு நோற்கட்டும் ." ( பகரா 185 ம் வசனம் )

என்றுதான் கூறுகின்றான் . ஆகவே பருமடைந்த புத்தி சுவாதீனமுள்ள எவரேனும் பிறையைப் பார்த்தால் அவர் அன்றைய தினம் நோன்பு நோற்பது கடமையாகும் . அன்றைய பகற்பொழுது அதிக நேரமாயிருப்பினும் , கொஞ்ச நேரமே இருப்பினும் சரியே ! .

மார்க்க அறிஞர்களின் உறுதி செய்யப்பட்ட கருத்தின் படி ஒவ்வொரு நாட்டினரும் அந்த நாட்டில் காணப்பட்ட பிறையினை மையமாக வைத்தே நோன்பை ஆரம்பிக்க வேண்டும் . ஏனெனில் பிறையின் தோன்று தலங்கள் பல்வேறு வகையாக வேறுபட்டு இருக்கின்றன . இது எல்லோரும் சாதாரணமாக அறிந்த உண்மையாகும் .

நபியவர்கள் கூறியிருக்கின்றார்கள் ...

“ நீங்கள் பிறையைக் கண்டு நோன்பு பிடியுங்கள் .பிறையைக் கண்டே நோன்பு திறவுங்கள் . மேக மூட்டம் உங்களுக்குப் பிறை தெரியாது மறைத்தால் ஷஃபான் மாதத்தை முப்பது நாட்களாகப் பூர்த்தி செய்யுங்கள் .

( புகாரி – முஸ்லிம் )

ஒவ்வொரு நோன்பாளிகளும் றமழான் இரவில் நோன்பு நோற்பதாக நிய்யத் வைப்பது அவசியமாகும் . ஏனெனில் நபியவர்கள் கூறியுள்ளார்கள் ....

“அமல்கள் அனைத்தும் எண்ணங்களுக்கு ஏற்பவே அமையும் .

(புகாரி –முஸ்லிம் .)

மேலும் நபியவர்கள் கூறியுள்ளார்கள் ...

“ யார் நோன்பு நோற்பதாக பஜ்ருக்கு முன்னர் நிய்யத் வைக்க வில்லையே அவருக்கு நோன்பு கிடையாது .

( அஹ்மத் – அபூதாவூத் .)

றமழான் காலத்தில் எவருக்கும் நோன்பு நோற்காமல் இருப்பதற்கு அனுமதியில்லை . நோயாளிகள்,பிரயாணிகள், மற்றும் மாதவிலக்கு பிரசவத் தீட்டு,பிள்ளைப் பேறு போன்றவற்றுக்கு ஆளான பெண்களுக்கு மாத்திரமே நோன்பை விட

அனுமதியுண்டு. பாலூட்டும் பெண்கள் தமது குழந்தைக்கு நோன்பினால் ஏதேனும் பாதிப்பு ஏற்படுமெனப் பயந்தால் நோன்பை விட முடியும் . அதனைக் கழாச் செய்ய வேண்டியதில்லை. தமக்கும் ஏதேனும் பாதிப்பு ஏற்படுமெனப் பயந்தால் நோன்பை விட்டு விட்டு பின்னர் கழாச் செய்ய வேண்டும். ஏனெனில் நபியவர்கள் கூறியுள்ளார்கள் ...

"நிச்சயமாக அல்லாஹ் பிரயாணி, கர்ப்பிணி, பாலூட்டும் தாய் ஆகியோருக்கு தொழுகையின் அரைவாசிப்பகுதியையும், நோன்பையும் தள்ளுபடி செய்து விட்டான் .

( ஆதாரம் நஸாயி, இப்னு குஸைமா )

நோன்பு நோற்க முடியாத நோயாளி தன்னால் சாப்பிடாமல் இருக்க முடியாது என்ற நிலையில் நோன்பை வீடுவதற்கு அனுமதியுன்டு . பின்னர் அந்த நாட்களைக் கணக்கிட்டு நோன்பினைக் களாச் செய்ய வேண்டும் .

வயது முதிர்ந்தவர்கள் நோன்பு நோற்பதால் தமக்குக் கடுமையான கஸ்டம் ஏற்படும் எனக் கருதுமிடத்து அவர்களுக்கும் நோன்பை விட அனுமதியுண்டு .அதற்குத் தண்டகுற்றமாக ஒவ்வொரு நோன்புக்காகவும் ஒரு ஏழைக்கு உணவளிக்க வேண்டும் . ஏனெனில் இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள்

﴿وَعَلَى الَّذِينَ يُطِيقُونَهُ فِدْيَةٌ طَعَامُ مِسْكِينٍ﴾ " அதற்கு சக்தி பெற்றவர்கள் ஒரு ஏழைக்கு உணவளிப்பது கடமையாகும் ."

( பகரா 184ம் வசனம் )

என்ற வசனத்துக்கு விளக்கமளிக்கும் போது " இது மாற்றப்பட்ட வசனம் இல்லை . மாறாக இது நோன்பு நோற்கச் சக்தியற்ற வயோதிபர்களான ஆண் பெண்களுக்காகும் . அவர்கள் நோன்பை விட்டு விட்டு நாளொன்றுக்கு ஒரு ஏழைக்கு வீதம் உணவளிக்க வேண்டும் . " என்று விளக்கமளித்துள்ளார்கள் .

இது போன்றே பிரயாணத்திலிருப்பதும் நோன்பை விடுவதற்கு ஆகுமாக்கப்பட்ட காரணங்களில் ஒன்றாகும் .
அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ...
“ நாங்கள் நபியவர்களுடன் பிரயாணத்திலிருந்தோம் . எங்களில் நோன்பு நோற்றவர்களும் இருந்தனர் , நோற்காதவர்களும் இருந்தனர் . நோன்பு நோற்றவர்கள் நோற்காதவர்களை ஏளனமாகப் பார்க்க மாட்டோம் .

( புகாரி –முஸ்லிம் )

இஸ்லாத்தின் ஐந்தாவது கடமை .

## அல் ஹஜ் .

ஹஜ் என்றால் அரபு அகராதிக் கருத்துப் படி நாடிச்செல்லல் என்று பொருள்படும் .
இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் ஹஜ் எனப்படுவது குறிப்பிடப்பட்ட ஒரு வணக்கத்தை நிறைவேற்றுவதற்காக புனித மக்கா நகரினை குறிப்பிட்ட காலப்பகுதியிலே வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய நாடிச் செல்வதைக் குறிக்கும் .

# இஸ்லாத்தின் பார்வையில் ஹஜ் .

இஸ்லாமிய அறிஞர்கள் அனைவரும் – வசதி வாய்ப்புள்ள ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்நாளில் ஒரு தடவை ஹஜ்ஜுச் செய்வது கடமை என்று ஏகோபித்து முடிவெடுத்துள்ளனர் .
அல்லாஹுத்தஆலா கூறுகின்றான் ...

﴿وَلِلَّهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلاً وَمَنْ كَفَرَ فَإِنَّ اللَّهَ غَنِيٌّ عَنِ الْعَالَمِينَ﴾ [آل عمران: من الآية97]

‘‘எவர்கள் அங்கு யாத்திரை செல்லத் தகுதியுடையவர்களாக இருக்கின்றார்களோ அவர் மீது அல்லாஹ்வுக்காக ( அங்கு சென்று ) அவ்வீட்டை ஹஜ்ஜுச் செய்வது கடமையாகும் .

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿وَأَذِّنْ فِي النَّاسِ بِالْحَجِّ يَأْتُوكَ رِجَالاً وَعَلَى كُلِّ ضَامِرٍ يَأْتِينَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيقٍ لِيَشْهَدُوا مَنَافِعَ لَهُمْ وَيَذْكُرُوا اسْمَ اللَّهِ فِي أَيَّامٍ مَعْلُومَاتٍ عَلَى مَا رَزَقَهُمْ مِنْ بَهِيمَةِ الْأَنْعَامِ﴾

[سورة الحج، الآيتان 27،28]

“ஹஜ்ஜுக்காக( அதனை நிறைவேற்ற வருமாறு ) நீர் மக்களுக்கு அழைப்பு விடுப்பீராக . ( அவ்வழைப்பை ஏற்று ) கால்நடையாகவும் , இளைப்புற்ற ஒட்டகங்களின் மீது சவாரி செய்தவர்களாகவும், அவர்கள் வருவார்கள் . அவை தூரமான இடங்களிலிருந்து ( அவர்களைக் கொண்டு ) வரும் .
தங்களின் இம்மை மறுமைக்குரிய பயன்களை அடைந்து கொள்வதற்காகவும் , அல்லாஹ் அவர்களுக்கு அருளிய கால்நடைச் செல்வங்களுக்காக அவனை நினைவு கூறுவதற்காகவும் ( வருவார்கள் ) . ஆகவே அந்த (அறுக்கப்பட்ட) கால்நடைகளிலிருந்து நீங்களும் புசியுங்கள் . கஷ்டப்படும் ஏழைகளுக்கும் உண்ணக் கொடுங்கள் .

( ஸூரத்துல் ஹஜ் 27.28 ம் வசனங்கள் )

ஹஜ் வணக்கமானது ஆத்மீக , உலக ரீதியான பல்வேறு விதமான பிரயோசனங்களைத் தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது.ஹஜ்ஜின் போது தவாப், ஸயீ, அறபா மினா முஸ்தலிபா ஆகிய இடங்களில் தரித்திருத்தல் , கல்லெறியுதல் , பின் மினாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், தலைமுடியினைச் சிரைத்தல் , அல்லாஹ்வுக்கு அடிபணிவதன் மூலம் அவனது நெருக்கத்தைப் பெறல் போன்ற பல்வேறு வணக்க வழிபாடுகளில் ஒரு முஸ்லிம் ஈடுபட முடிகின்றது . எனவேதான் ஹஜ்வணக்கமானது பாவங்கள் மன்னிக்கப்பட்டு சுவனம் செல்வதற்கு மிகப் பெரிய காரணிகளில் ஒன்றாகத் திகழ்கின்றது .

அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ...
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்... (இறையில்லமான ) இந்த வீட்டை யார் ஹஜ்ஜுச் செய்து எவ்வித தீமையிலோ குற்றச் செயலிலோ ஈடுபடாது விடுகின்றாரோ அவர் அன்று தாய் ஈன்றெடுத்த பாலகன் போல் ( எவ்வித பாவமுமற்றவராக ) ஆகி விடுகின்றார் . ( புகாரி முஸ்லிம் )

மேலும் நபியவர்கள் கூறினார்கள் ...
“ஒருவர் ஒரு உம்ராச் செய்வதானது அவர் மறுமுறை உம்ராச் செய்யும் வரைக்குமுள்ள பாவங்களுக்கு குற்றப்பரிகாரமாக ஆகி விடும் . மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவர்க்கத்தைத் தவிர வேறு கூலி கிடையாது .
( புகாரி முஸ்லிம் .)

மேலும் நபியவர்களிடம் அமல்களிலேயே மிகச் சிறந்தது எதுவென வினவப்பட்டது . அதற்கு அவர்கள் அல்லாஹ்வையும் அவனது றஸூலையும் ஈமான் கொள்ளுதல் என்று பதிலளித்தார்கள் .அதற்கடுத்தபடியாக எது என வினவப்பட்டது? அல்லாஹ்வின் பாதையில் போர் புரிதல் என்று பதிலளித்தார்கள் . அதற்கடுத்தது எது என்றதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜாகும் என பதிலளித்தார்கள் .

# இஸ்லாமும் அதன் அடிப்படையும்

( புகாரி முஸ்லிம் )

மேலும்நபியவர்கள் நவின்றுள்ளார்கள் ...

“ நீங்கள் ஹஜ்ஜையும் உம்ராவையும் அடிக்கடி தொடர்ந்து நிறைவேற்றி வாருங்கள் . ஏனெனில் அவை நெருப்புச் சூளையானது இரும்பு, தங்கம், வெள்ளியின் துருக்களை அகற்றி விருவது போல மனிதனிடமுள்ள வறுமை பாவம் ஆகியவற்றை அகற்றிவிடும் . ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவர்க்கத்தை த்தவிர வேறு கூலி கிடையாது .

( ஆதாரம் திர்மிதி )

ஹஜ்ஜின் போது பல்வேறு நாடுகளிலிருந்தும் திரண்டு வரும் இலட்சக்கணக்கான முஸ்லிம்களைச் சந்தித்து அளவளாவும் வாய்ப்புக் கிடைப்பதுடன், அவர்களுடன் பரஸ்பரம் உறவு கொள்ளும் வாய்ப்பும் ,ஒன்றாக அமல் இபாதத்களில் ஈடுபடும் வாய்ப்பும் கிட்டுகின்றது . இதன் மூலம் முஸ்லிம் சமுகத்தினரின் உலகளாவிய ஒன்றுகூடுதலும் , ஒரே கொடியின் கீழ் அணிதிரளும் சர்வதேச ஒற்றுமையும் ஏற்படுகின்றன .

அத்துடன் அவர்களுக்கு மத்தியில் ஒரு வித அன்பும் பிணைப்பும் ஏற்படுகின்றது . ஒரே மார்க்கம் ஒரே இறைவன், ஒரே கொள்கை , ஒரே குறிக்கோள் – இப்படியான அபூர்வ ஒன்று கூடலால் அளவிட முடியாத இன்னபல உலகளாவிய பயன்கள் ஏற்படுவதுடன் , சர்வதேச சமுகத்தின் மத்தியில் முஸ்லிம்களின் பலமும் ஒற்றுமையும் பறைசாட்டப்படுகின்றன. இக்கருத்தைத்தான் அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு பிரஸ்தாபிக்கின்றான் ..

يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُمْ مِنْ ذَكَرٍ وَأُنْثَى وَجَعَلْنَاكُمْ شُعُوباً وَقَبَائِلَ لِتَعَارَفُوا إِنَّ أَكْرَمَكُمْ عِنْدَ اللَّهِ ﴿:
أَتْقَاكُمْ إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ﴾[سورة الحجرات، الآية13]

“மனிதர்களே .. நாம் நிச்சயமாக உங்களை ஒரு ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்துமே படைத்தோம் .மேலும் நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ள வேண்டுமென்ப

தற்காகவே உங்களைப் பல்வேறு பிரிவினராகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம் . எனவே உங்களில் எவர் மிகத் தக்வா.:. உடையவராக இருக்கின்றாரோ அவரே அல்லாஹ் வீடத்தில் மிக்க கண்ணியத்திற்குரியவர் . நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் தெரிந்தவனும் உள்வீளங்கி அறிபவனுமாக இருக்கின்றான் . ( ஹுஜுராத் 13 ம் வசனம் .)

## ஹஜ் கடமையாகுவதற்கான நிபந்தனைகள் .

ஹஜ் கடமையாகுவதற்கான நிபந்தனைகள் ஐந்து என்பதாக அறிஞர்கள் ஏகோபித்து முடிவெடுத்துள்ளனர் . அவையாவன..

1 – முஸ்லிமாயிருத்தல் .
2 – புத்திசுவாதீனமுள்ளவராய் இருத்தல் .
3 – பருவமடைந்திருத்தல்.
4 – சுதந்திரம் பெற்றவராய் இருத்தல் .
5 – பொருள்,உடல் ரீதியாக சக்தி பெற்றிருத்தல் .

பெண்ணைப் பொறுத்த வரை அவர் ஹஜ் செய்வதற்கு மஹ்ரமிய்யத்தான ஒரு ஆண்துணை இருப்பதும் நிபந்தனையாகும். ஏனெனில் நபியவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள் ..

> “ அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்ட ஒரு பெண் மஹ்ரமான ஆண்துணையின்றி பிரயாணம் மேற்கொள்வது அவருக்கு ஹலாலாகாது .”

( அபூ ஹுரைரா – புகாரி முஸ்லிம் )

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

மேற்படி இந்த நிபந்தனைகளைப் பொறுத்த வரை மார்க்க அறிஞர்கள் இதனை மூன்று பிரிவுகளாக வகுக்கின்றனர் .

1 – இவற்றில் சில நிபந்தனைகள் ஹஜ் ஏற்றுக்கொள் ளப்படுவதற்கு அடிப்படையாக இருக்கின்றன . அவை இஸ்லாமும் , புத்தி சுவாதீனமுமாகும் . எனவே காபிரானவரோ, புத்திசுவாதீனமற்றவரோ ஹஜ்ஜுச் செய்தாலும் அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2 – பருவமடைந்திருத்தல் , சுதந்திரமாயிருத்தல் ஆகிய நிபந்தனைகள் ஹஜ் கடமை ஒருவர் பொறுப்பிலிருந்து நீங்குவதற்குரிய நிபந்தனைகளே .. எனவே அடிமையோ, சிறுபிள்ளையோ ஹஜ்ஜுச் செய்தால் அது ஏற்கப்பட்டு அதற்கு நன்மை கிடைத்த போதிலும் அவர் பருமடைந்ததும் அல்லது சுதந்திரமடைந்ததும் மீண்டும் அவருக்கு ஹஜ் கடமையாகி வீடும் .

3 – பண,உடல்பலம் பெற்றிருத்தலைப் பொறுத்தவரை அது ஹஜ் கட்டாயக் கடமையாகுவதற்குரிய நிபந்தனையே.. எனவே பணவசதியற்ற ஒருவர் அதிக சிரமங்களை மேற்கொண்டு எவ்வித முன் ஆயத்தமுமின்றி கால்நடையாகச் சென்று ஹஜ்ஜுச் செய்தாலும் அவரது ஹஜ்ஜு ஏற்றுக்கொள்ளப்படும் .

## ஒருவருக்காக வேறொருவர் ஹஜ் செய்யலாமா ? .

ஹஜ்ஜுச் செய்வதற்குரிய வசதி வாய்ப்புக்கள் ஏற்படுவதற்கு முன் மரணித்து வீட்டவர்களுக்கு ஹஜ் கடமையில்லை . எனவே அவர்களுக்காக ஹஜ் செய்யவேண்டியதும் கடமையில்லை .வசதி வாய்ப்புக்களைப் பெற்றிருந்தும் ஹஜ் செய்யாது மரணித்து வீட்டவர்களைப் பொறுத்த வரை ஆதாரப் பூர்வமான கருத்தின் படி அவர்களது ஹஜ் கடமை அவர்களை வீட்டு நீங்காது . எனவே அவரது சொத்திலிருந்து அவரின் அனந்தரக்கார உறவினர்கள் அவருக்குரிய ஹஜ்ஜை நிறைவேற்றி வைப்பது கடமையாகும் . அவர் தனக்காக ஹஜ் செய்யுமாறு வஸிய்யத் செய்யாது மரணித்திருப்பினும் சரி . இக்கடமை கடன் போன்று கட்டாயம் நிறைவேற்றியே ஆகவேண்டிய கடமையாகும் . ஏனெனில் இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் ...

“ஒரு பெண் ஹஜ்செய்வதாக நேர்ச்சை செய்து வீட்டு நிறைவேற்றாது மரணித்து வீட்டாள் . அவரது சகோதரர் நபிகளாரிடத்தில் வந்து இது பற்றி வினவினார் . அதற்கு நபியவர்கள் . உனது சகோதரிக்கு கடன் இருந்தால் அதை நீதானே நிறைவேற்ற வேண்டும் ? என வினவியதும் அவர் ஆம் என்றார் . அதற்கு நபியவர்கள் அதேபோன்றுதான் இது அல்லாஹ்வுக்குரிய கடனாகும் . இதுதான் நிறைவேற்றப்படுவதற்கு மிக அருகதை மிக்கது என்று கூறினார்கள் . ( ஆதாரம் நஸாயீ.: )

## ஹஜ் செய்யாத ஒருவர் பிறருக்காக ஹஜ் செய்யலாமா ?..

தனக்குரிய கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றாதவர் பிறருக்காக ஹஜ் செய்ய முடியாது .ஏனெனில் நபியவர்கள் ஒரு மனிதர் “ சுப்ருமாவுக்காக ஹஜ் செய்கின்றேன் என்று கூறக் கேட்டார்கள் . உடனே சுப்ருமா என்பவர் யார்? என அவரிடம் கேட்க எனது சகோதரர் (அல்லது நன்பர்) என்று

பதிலளித்தார் . உடனே நபியவர்கள் “நீ உனக்காக ஹஜ் செய்து விட்டாயா?” என வினவ இல்லையென பதிலளித்தார் . அதற்கு நபியவர்கள் “உனக்காக முதலில் ஹஜ்ஜை நிறைவேற்றுவாயாக பின்னர் சுப்ருமாவுக்காக ஹஜ் செய்வாயாக என பதிலளித்தார்கள் .

( அஹ்மத் – அபூதாவூத் )

அதே போன்றே சரியான கருத்தின்படி ஹஜ்ஜை நிறைவேற்ற முடியாதளவுக்கு பலவீனமுற்ற ( வயோதிபர்கள் ) போன்றவர்களுக் காகவும் வேறொருவர் ஹஜ்ஜூச் செய்ய முடியும் .
ஹைதம் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு பெண்மணி நபியவர்களிடத்தில் வந்து ஹஜ்ஜானது அல்லாஹ் அடியார்களுக்கு விதித்த கடமையாகும் . எனது தந்தையோ வயோதிபர் . அவரால் வாகனத்தில் அமர்ந்து பயணம் செய்ய முடியாது . அவருக்காக நான் ஹஜ்ஜூச் செய்ய முடியுமா? என வினவினார் . அதற்கு நபியவர்கள் “ஆம் முடியும் “ என்று கூறினார்கள் .இச்சம்பவம் நபிகளாரின் இறுதி ஹஜ்ஜின் போது நிகழ்ந்தது.. ( இப்னு அப்பாஸ் – புகாரி முஸ்லிம்)

ஒருவர் ஹஜ் செய்ய சக்தி பெற்ற உடனேயே ஹஜ் கடமையாகின்றதா ? அல்லது தாமதித்தும் நிறைவேற்ற முடியுமா?

..................அறிஞர்களின் மிகச்சரியான கருத்தின் பிரகாரம் ஒருவரிடம் ஹஜ் கடமையாகும் நிபந்தனைகள் நிறைவு பெற்ற உடனேயே அவருக்கு ஹஜ் கடமையாகின்றது . ஏனெனில் அல்லாஹ் கூறுகின்றான் .....

﴿وَلِلَّهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلاً﴾ [سورة آل عمران، الآية:97]

“ ஹஜ்ஜூக்குச் செல்ல சக்தி பெற்ற மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜை நிறைவேற்றுவது கடமையாகும் .” (ஆலஇம்ரான் 97ம் வசனம்)

﴿وَأَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلَّهِ﴾ [سورة البقرة، الآية:196]

" அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜையும் உம்ராவையும் நிறைவேற்றுங்கள்" ( பகரா 196ம் வசனம் )
என்றும் கூறுகின்றான் .
மேலும் நபியவர்கள் கூறியுள்ளதாவது ...
"ஹஜ் கடமையை (தாமதிக்காது ) விரைவாக நிறைவேற்றுங்கள் . ஏனெனில் ஒருவருக்கு தனக்கு என்ன இடையூறுகள் ஏற்படவிருக்கின்றன என்று அவருக்குத் தெரியாது " என்று கூறியுள்ளார்கள் . ( அபூதாவூத் – ஹாகிம் )

## ஹஜ்ஜின் கடமைகள்
### ( றுக்ன்கள் )

ஹஜ்ஜுக்குரிய றுக்ன்கள் மொத்தம் ஆறு அவையாவன ...

1 – இஹ்ராம் . ( ஹஜ்ஜின் நிய்யத்துடன் இஹ்ராம் அணிதல் ).
2 – அரபாவில் தரித்து நிற்றல் .
3 – தவாபுல் குதூம் ( மக்கா சென்றதும் முதல் முறையாக செய்யும் தவாபு )
4 – ஸபா – மர்வாவுக்கிடையில் தொங்கோட்டம் ஓடுதல் .

மேற்படி நான்கு கடமைகளில் ஒன்று விடுபட்டால் அந்த ஹஜ்ஜு ஏற்றுக் கொள்ளப்படட மாட்டாது . இந்த நான்கு கடமைகளையும் ஒவ்வொன்றாக சற்று விரிவாக நோக்குவோம் .

முதலாவது .. இஹ்ராம் .

இஹ்ராம் என்பது ஹஜ் வணக்கத்தை ஆரம்பிக்க நிய்யத் வைப்பதைக் குறிக்கும் . இந்த நிய்யத்தை குறிப்பிட்ட காலப்பகுதியில் குறிப்பிட்ட இடத்தில் வைத்தே வைக்க முடியும். இதற்கு மீக்காத் என்று சொல்லப்படும் .
எனவே மீக்காத்தை இரண்டாகப் பிரிக்கலாம் .

1 – காலம் சார்ந்த மீக்காத் .
2 – இடம் சார்ந்த மீக்காத் .

காலம் சார்ந்த மீக்காத் எனும் போது ஹஜ்ஜுடைய மாதங்களாகிய ஷவ்வால்,துல்க.:.தா, துல்ஹஜ் ஆகிய மாதங்களில் அவர் ஹஜ் செய்வதற்காக நிய்யத் வைக்க வேண்டும் . ( அதற்கு முன்போ பின்போ நிய்யத் வைக்க முடியாது ) அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿الْحَجُّ أَشْهُرٌ مَعْلُومَاتٌ﴾ [سورة البقرة، الآية: 197]

ஹஜ் என்பது அறியப்பட்ட மாதங்களிலேயேயாகும் .
( பகரா 197 ம் வசனம் .)

இடம் சார்ந்த மீக்காத் எனும் போது நான்கு திசைகளிலும் இருந்து வரும் ஹாஜி மார்கள் குறிப்பிட்ட ஒரு இடத்தைக் கடக்கும் போது ஹஜ் செய்வதை நிய்யத் வைப்பதைக் குறிக்கும். இவ்விடத்தை நிய்யத் வைக்காது கடந்து மக்காவுக்குச் செல்வது கூடாது .
மீக்காத்துகள் மொத்தம் ஐந்து இருக்கின்றன...

முதலாவது .. துல்ஹுலைபா.:. . இப்போது இவ்விடத்திற்கு ஆபார் அலி என்று சொல்லப்படும் . இது மதீனா வாசிகளுக்கும் அதன் வழியாக ஹஜ்ஜுக்கு வருபவோருக்குமுரிய எல்லையாகும் . இது மக்காவிலிருந்து 336 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது .

இரண்டாவது .. ஜுஹ்பா.:. . இது செங்கடலிலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது . மக்காவிற்கும் இதற்குமிடையில் 180 கிலோ மீட்டர் தூரம் உள்ளது . இது எகிப்து, சிரியா, மொரோக்கோ நாட்டவர்களுக்கும் , இந்த நாடுகளுக்கு அப்பாலுள்ள நாடுகளான ஸ்ப்பைன், ரோம் ( இத்தாலி) , தக்றூர் போன்ற நாட்டவருக்குமுரிய எல்லையாகும் . இப்போது இந்நாட்டவர்கள் “அல்றாபிக்” எனும் இடத்தில் இஹ்ராம் கட்டுகின்றனர். ஏனெனில் இது அந்த இடத்திற்கு நேராகவே இருக்கின்றது .

மூன்றாவது ... யலம்லம் . இது இப்போது ஸ.:.திய்யா என்று அழைக்கப்படுகின்றது . இது திஹாமா மலைப்பகுதியில் இருக்கின்றது . மக்காவிலிருந்து 72 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் இது யமன் வாசிகளுக்கும் ,அதன்வழியாக வருபவர்களான சீனா இந்தியா போன்ற நாட்டவர்களுக்குமுரிய எல்லையாகும் .

நான்காவது ... கர்னுல் மனாஸில். இதற்கு இப்போது அஸ்ஸைல் அல்கபீர் என்று அழைக்கப்படுகின்றது . மக்காவிலிருந்து 72 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் இவ்விடம் தாயிப்,நஜித் வாசிகளினதும் அதன் வழியாக வருவோருக்குமுரிய மீக்காத்தாகும் .

ஐந்தாவது ... தாத்து இர்க்..இதற்கு இப்போது “ளரீபா” எனக் கூறப்படுகின்றது. இது ஒரு சிறிய மலையாகும் .

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

மக்காவிலிருந்து 72 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் இவ்விடம் ஈரான், ஈராக் வாசிகளது மீக்காத்தாகும் .
எனவே மேற்கூறப்பட்ட இந்த மீக்காத் எல்லைகளை ஹாஜிகள் இஹ்ராமுடைய நிய்யத் இல்லாமல் கடந்து மக்கா நோக்கிச் செல்லுதல் கூடாது .
மேற்படி மீக்காத் எல்லைகளை நபி ( ஸல்) அவர்களே நிர்ணயித்துச் சென்றிருக்கின்றார்கள் . இது பற்றி இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் .....
“ நபியவர்கள் மதீனா வாசிகளுக்கு துல் ஹுலைபாவையும் , ஷாம் வாசிகளுக்கு ஜுஹ்பாவையும் , நஜித் வாசிகளுக்கு கர்னுல் மனாஸிலையும் , யமன் வாசிகளுக்கு யலம்லமையும், மீக்காத் எல்லைகளாக நிர்ணயித்துச் சென்றுள்ளார்கள் . இவ்வெல்லைகள் அவ்வூர் வாசிகளுக்கும் , வேறு பகுதியிலிருந்து அவ்வூர் வழியாக ஹஜ்ஜுக்கோ உம்ராவுக்கோ வருவோருக்குமுரிய எல்லைகளாகும் . இந்த எல்லைகளுக்கு இடைப்பட்ட ஊர்வாசிகள் தமது இடத்திலிருந்தவாறே இஹ்ராம் செய்து கொள்ள முடியும் . எனவே மக்கா வாசிகள் மக்காவிலிருந்து கொண்டே இஹ்ராம் செய்து கொள்ள வேண்டும் . ( புகாரி – முஸ்லிம் .)

ஜாபிர் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் ..
“ ஈராக் வாசிகள் தாது இர்க் எனும் இடத்திலிருந்து இஹ்ராம் கட்ட வேண்டும்” . ( முஸ்லிம் )
இந்த மீக்காத்கள் வழியல்லாத வேறு வழியூடாக வருபவர்கள் இந்த மீக்காத்களுக்கு நேராக இருக்கும் இடம் எதுவென அறிந்து அவ்விடத்தில் வைத்து இஹ்ராம் செய்து கொள்ளலாம் . இதுபோன்றே விமானத்தில் பயணம் செய்யும் ஹாஜிகள் இம்மீக்காத்களுக்கு நேர்படும் ஆகாய எல்லையை அடைந்ததும் அவ்விடத்தில் இஹ்ராம் செய்து கொள்ள வேண்டும் . சில ஹாஜிகள் செய்வது போன்று ஜித்தாவிமான நிலையத்தை வந்தடைந்ததும் அங்கு வைத்து இஹ்ராம் செய்வது கூடாது .

ஏனெனில் ஜித்தாவானது ஜித்தாவாசிகளல்லாதவர்களுக்கு ஒருமீக்காத்தாகக் கணிக்கப்பட மாட்டாது . எனவே இவ்வீடத்தில் வைத்து இஹ்ராம் கட்டுபவர் ஹஜ்ஜினுடைய வாஜிப்களில் ஒன்றை வீட்டு வீட்டார் . அதற்காக அவர் “பித்யா” தண்டகுற்றமாக ஒரு ஆடு கொடுக்க வேண்டும் .
இதே போன்றுதான் இஹ்ராம் நிய்யத் செய்யாமல் மேற்படி மீக்காத்களைக் கடந்து சென்றவர்களும் மீண்டும் குறிப்பீட்ட மீக்காத்களுக்குத் திரும்பிச் சென்று இஹ்ராம் செய்ய வேண்டும் . இது முடியாத பட்சத்தில் அவர் பித்யாவாக ஒரு ஆட்டையோ அல்லது ஏழு பேர் சேர்ந்து ஒரு ஒட்டகத்தையோ அறுத்து அதன் இறைச்சிகளை மக்கா ஹரத்திலுள்ள ஏழைகளுக்குப் பங்கிட வேண்டும் . அதிலிருந்து எதனையும் அவர் சாப்பிடக் கூடாது.

## இஹ்ராம் செய்யும் முறை .

இஹ்ராமுக்கு நிய்யத் செய்வதற்கு முன்னராக குளித்து உடலைச் சுத்தப்படுத்தி நகம் மற்றும் , அகற்ற வேண்டிய அங்க உரோமங்களை அகற்றி மணம் பூசிக்கொள்வது உகந்ததாகும் . பின்னர் ஆண்கள் தைக்கப்பட்ட ஆடைகளைக் களைந்து சுத்தமான இரு வெள்ளை ஆடைகளை எடுத்து ஒன்றை லுங்கியாகவும் ,மற்றையதை தோள் மீதும் அணிந்து கொள்ளவேண்டும் .
இஹ்ராம் அணிந்ததற்காக விஷேடமாக எவ்விதத் தொழுகையும் கிடையாது . எனினும் இஹ்ராம் அணியும் நேரம் பர்ழுத் தொழுகையின் நேரமாக இருப்பின் அதை முடித்து வீட்டு இஹ்ராம் அணிவது நல்லது . ஏனெனில் நபியவர்கள் ( பர்ழு)

தொழுகையின் பின்னரே இஹ்ராம் அணிபவர்களாக இருந்தார்கள்.

பின்னர் ஹாஜி மூன்று வகையான ஹஜ் கிரியை முறைகளில் தான் விரும்பிய ஒரு முறையைத் தெரிவு செய்து அந்த முறைப்படி ஹஜ்ஜை நிறைவேற்றுவதாக நிய்யத் செய்து கொள்ள வேண்டும் . அந்த மூன்று வகை கிரியைகளும் வருமாறு ...

1 – அத்தமத்து:: .
2 – அல்கிரான் .
3 – அல் இப்ராத் .

<u>தமத்து::</u>என்பது ஹஜ்ஜுடைய மாதங்களில் உம்ராச் செய்வதற்கு நிய்யத் வைத்து அதனை நிறைவேற்றி முடித்ததும் அந்த வருடமே ஹஜ்ஜையும் நிறைவேற்றுவதாக நிய்யத் வைத்துக் கொள்வதைக் குறிக்கும் .

<u>அல்கிரான்</u> எனப்படுவது ஹஜ்ஜையும் உம்ராவையும் நிறைவேற்றுவதாக ஒரே நேரத்தில் நிய்யத் வைப்பதை , அல்லது உம்ராவுக்கு மாத்திரம் நிய்யத் வைத்து பின் அதன் அமல்களை ஆரம்பிப்பதற்கு முன்னராக ஹஜ்ஜையும் செய்வதாக நிய்யத் வைப்பதைக் குறிக்கும் .

<u>அல்இப்ராத்</u> எனப்படுவது மீக்காத் எல்லையில் வைத்து ஹஜ்ஜை மாத்திரம் நிறைவேற்றுவதாக நிய்யத் வைப்பதைக் குறிக்கும் . இவ்வாறு நிய்யத் வைத்தால் அப்போதிருந்து ஹஜ் கிரியைகளை நிறைவேற்றி முடிக்கும் வரை இஹ்ராம் உடையுடனேயே இருக்க வேண்டும் .
தமத்து::,கிரான் முறைப்படி ஹஜ் செய்பவர்களும் அவர்கள் மக்கா வாசிகளாக இல்லா விடில் பித்யாக் கொடுக்க வேண்டும் .

இந்த மூன்று வகை வணக்க முறைகளில் மிகச் சிறந்ததுஎது என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு நிலவிய போதிலும் மிகப் பெரும் அறிஞர்கள் சிலரின் கருத்துப்படி தமத்து:. தான் இம்மூன்றிலும் மிகச் சிறந்ததாகும் .

பின்னர் இம்மூன்று முறைகளில் ஒன்றின் படி இஹ்ராம் செய்த பின்னர் பின்வருமாறு தல்பியாக் கூற வேண்டும் .
“ லப்பைக் அல்லாஹும்ம லப்பைக் லப்பைக் லாஸரீக்க லக லப்பைக் இன்னல் ஹம்த வன்னி:.மத லக வல் முல்க் லாஸரீக்கலக் “
ஒவ்வொருவரும் அதிகமதிகமாகத் தல்பியாச் சொல்வதுடன் ஆண்கள் சத்தத்தை உயர்த்தியும் சொல்ல வேண்டும் .

## இஹ்ராம் தரித்ததன் பின் ஹராமானவைகள் .

பின்வரும் விடயங்கள் இஹ்ராம் அணிந்ததன் பின்னால் ஹாஜிகளுக்குத் தடைசெயயப்பட்ட விடயங்களாகும் .அவை மொத்தம் ஒன்பது ...

1 – சிரைப்பதன் மூலமோ கத்தரிப்பதன் மூலமோ உடலின் எப்பாகத்திலிருந்தும் முடி உரோமங்களை அகற்றுதல் .
அல்லாஹ் கூறுகின்றான்...
“ ஹத்யு – குர்பான் பிராணிகள் அறுக்கப்படும் இடத்துக்கு வரும் வரை நீங்கள் உங்கள் தலை( முடிகளை) சிரைக்காதீர்கள். . (பகரா 196 ம் வசனம் .)

உ – நகங்களை வெட்டுதல் . ஏனெனில் அது பெருமை, ஆடம்பரத்துக்கு அடையாளமாகும் . எனவே இதுவும் முடியை வெட்டுவதைப் போன்றுதான் . ஆனால் இக்கட்டான

நிலமைகள் ஏற்படும் போது செய்து கொள்ளஅனுமதியுண்டு .

3 – தலையை மூடுதல் . ஏனெனில் தலைப்பாகை கட்டக் கூடாதென நபியவர்கள் ஹாஜிகளுக்குத் தடை விதித்திருக்கின்றார்கள் . மேலும் ஒட்டகம் மிதித்து இறந்த ஹாஜி ஒருவரின் விடயத்தில் " அவரது தலையை மூடாதீர்கள் ஏனெனில் அவர் மறுமையில் தல்பியாச் சொன்ன நிலையிலேயே எழுப்பப்படுவார் " என்று கூறினார்கள் .

( ஆதாரம் புகாரி முஸ்லிம் )

மேலும் இப்னு உமர் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் ...

" ஆண்கள் தலையை மறைக்கக் கூடாது பெண்கள் முகத்தை மூடக் கூடாது " . ( பைஹகி )

4 – ஆண்கள் தைக்கப்பட்ட ஆடைகளையோ கணுக்காலை மறைக்கும் பாதணிகளையோ அணிதல் .

இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் .

நபியவர்களிடம் இஹ்றாமுடன் இருப்பவர் அணிபவைகள் எவை எனக் கேட்கப்பட்டது . அதற்கு அவர்கள் " இஹ்றாம் அணிந்தவர் மேற்சட்டையையோ,தலைப் பாகையையோ, பரானிஸையோ,காற்சட்டைகளையோ, குங்குமப்பூ மற்றும் வாசனைத்திரவியங்களையோ உபயோகிக்கக் கூடாது என்று கூறினார்கள் . மேலும் கணுககாலை மறைக்கும் பாதணிகளைஅணிய வேண்டாம் என்றும் அதைத்தவிர வேறு பாதணிகள் கிடைக்காவிடில் அதன் குதிகால்ப் பகுதியை வெட்டி விட்டு அணியவும்" என்று கூறினார்கள் .

( புகாரி –முஸ்லிம் .)

5 – மணம் பூசிக் கொள்ளல் .. ஏனெனில் நபியவர்கள் மணம் பூசிக் கொண்டு வந்த மனிதரைப் பார்த்து அதனைக் கழுவி விட்டு வருமாறு கூறினார்கள் . ( புகாரி –முஸ்லிம் .)

ஒட்டகத்தால் மிதியுண்டு இறந்த நபித் தோழரைக் குளிப்பாட்டும் போது அவரது ஜனாஸாவுக்கு மணம் பூசாதீர்கள் என்று கூறினார்கள் .. ( புகாரி முஸ்லிம் .)

எனவே இஹ்ராம் தரித்ததன் பின் தன் உடையிலோ, உடலிலோ மணம் பூசுவது ஹராமாகும் .

6 – தரையிலுள்ள வேட்டைப் பிராணிகளைக் கொல்லுதல் . அல்லாஹுத்தஆலா கூறுகின்றான் ...

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لا تَقْتُلُوا الصَّيْدَ وَأَنْتُمْ حُرُمٌ﴾ [سورة المائدة، الآية:95]

" நீங்கள் இஹ்ராத்தோடு இருக்கும் நிலையில் வேட்டைப் பிராணிக்ளைக் கொல்லாதீர்கள் . ( மாயிதா 95 ம் வசனம் .)

எனவே பிராணிகளைக் கொல்வதோ காயப்படுத்துவதோ ஒரு புறமிருக்க வேட்டையாடச் செல்வதே ஹராமாகும் . ஏனெனில் அல்லாஹுத்தஆலா

﴿وَحُرِّمَ عَلَيْكُمْ صَيْدُ الْبَرِّ مَا دُمْتُمْ حُرُماً﴾ [سورة المائدة، الآية:96] " தரையின் பிராணிகளை வேட்டையாடல் நீங்கள் இஹ்ராத்துடன் இருக்கும் நிலையில் உங்களுக்கு ஹராமாகும் .

( மாயிதா 96 ம் வசனம் )

7 – திருமண ஒப்பந்தம் செய்தல் . இஹ்ராத்துடன் இருப்பவர் தான் தீருமணம் செய்து கொள்வதோ பிறரது திருமணத்திற்கு வலிகாரனாகவோ, வகீலாகவோ இருப்பதும் ஹராமாகும் . நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ...

" இஹ்ராத்துடன் ஈருப்பவர் திருமணம் செய்து கொள்ளவோ திருமணம் செய்து கொடுப்பதோ, மணம் பேசுவதோ கூடாது ."

( அறிவிப்பவர் உத்மான்(றழி) ஆதாரம் முஸ்லிம் .)

8 – உடலுறவில் ஈடுபடுதல் . அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿فَمَنْ فَرَضَ فِيهِنَّ الْحَجَّ فَلا رَفَثَ﴾ [سورة البقرة، الآية:197]

"எவர் தன் மீது ஹஜ்ஜைக் கடமையாக்கிக் கொண்டாரோ அவர் தாம்பத்திய உறவில் ஈடுபடுதல் கூடாது.

(பகரா 197 ம்வசனம் .)

இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் மேற்படி வசனத்தின் "றபத்" எனும் பதத்திற்கு உடலுறவு என்று விளக்கமளிக்கின்றார்கள் . ஏனெனில் அல்லாஹ் இப்படிக் கூறுகின்றான் ...

﴿أُحِلَّ لَكُمْ لَيْلَةَ الصِّيَامِ الرَّفَثُ إِلَى نِسَائِكُمْ﴾ [سورة البقرة، الآية:187]

" (றமழான்) நோன்பு காலத்தின் இரவில் நீங்கள் உங்கள் மனைவியரிடத்தில் உடலுறவு கொள்ளுதல் உங்களுக்கு ஹலாலாக்கப்பட்டுள்ளது .

( பகரா 187 ம் வசனம் )

9 – உடலுறவு அல்லாத ஏனைய முத்தமிடல்,இச்சையுடன் அணைத்தல்,பார்த்தல் போன்ற சரசங்களில் ஈடுபடுதல் ஏனெனில் இவைகளும் உடலுறவின் பால் இட்டுச் செல்லக் கூடிய விடயங்களாகும் . எனவேஅவைகளும் ஹராமாக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கும் இந்த விடயங்கள் பொதுவானதாகும் எனினும் சில விடயங்களில் அவர்கள் ஆண்களை விட்டும் வேறுபடுகின்றனர்.

பெண்கள் முகத்தை மறைக்கக் கூடாது . எனவே அவர்கள் முகமூடி நிகாப் , புர்க் போன்றவற்றைஅணியக் கூடாது .அவ்வாறே குப்பாஸைன் அணிவதும் அவர்களுக்குக் கூடாது .நபியவர்கள் கூறியுள்ளதாக இப்னு உமர் அறிவிக்கின்றார்கள் ..."பெண்கள் கையுறைகள் நிகாப் போன்றவற்றை அணியக் கூடாது. "

( ஆதாரம் புகாரி )

இப்னு உமர் அவர்கள் மேலும் கூறுகின்றார்கள் ...

"பெண்கள் முகத்தை மறைக்கக் கூடாது .

( ஆதாரம் பைஹகிய் .)

அன்னை ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ...

"ஹஜ்ஜின் போதுநாங்கள் நபியவர்களுடன் இருக்கையில் பிரயாணிகள் வாகனத்தில் ஏறிக் கொண்டு எங்களுக்

கருகாமையில் செல்வார்கள் .அப்போது நாங்கள் எங்களது முக மூடியை எடுத்துதலைமீது விட்டு முகத்தை மூடிக் கொள்வோம் .அவர்கள் எங்களைக் கடந்து சென்றதும் மீண்டும் நாங்கள் அதை நீக்கி முகத்தைத் திறந்து வைத்திருப்போம் .

( அபூ தாவூத் இப்னு மாஜா.ஃ.)

அவ்வாறே முடிகளை நீக்கல், நகம் வெட்டுதல், வேட்டையாடல் போன்றன ஆண்களுக்கு ஹராமாயிருப்பது போன்றே பெண்களுக்கும் ஹராமாகும் . ஆனால் தைக்கப்பட்ட ஆடைகளை அணிதல், குதிகாலை மறைக்கும் பாதணி அணிதல், தலையை மூடுதல் போன்றன பெண்களுக்கு மாத்திரம் ஆகுமாக்கப்பட்டிருக்கின்றன .

ஹஜ்ஜின் இரண்டாவது றுக்ன் .
அரபாவில் தங்கியிருத்தல் .
நபியவர்கள் கூறியுள்ளார்கள் ...
“ ஹஜ் என்பது அரபாதான் .” ( ஆதாரம் அஹ்மத் )
மூன்றாவது றுக்ன் .
தவாபுல் இபாளா செய்தல் .
அல்லாஹ் கூறுகின்றான்...
“பைத்துல் அதீக் ஆகிய கஃபாவை நீங்கள் தவாபு செய்து கொள்ளுங்கள் .” ( ஸூறாஅல் ஹஜ் ௨9ம் வசனம் .)
நான்காவது றுக்ன் ..
ஸயீ செய்தல்
நபியவர்கள் கூறியுள்ளார்ள் ...
“ நீங்கள் ஸயீ செய்து கொள்ளுங்கள் ஏனெனில் அல்லாஹ் உங்களுக்கு ஸயீ செய்வதைக் கடமையாக்கியிருக்கின்றான்.

( அஹ்மத் –பைஹகி )

## ஹஜ்ஜின் வாஜிப்கள் .

ஹஜ்ஜின் வாஜிபான கடமைகள் மொத்தம் ஏழு இருக்கின்றன . அவைகளாவன....

1 – மீக்காத்தில் வைத்து இஹ்ராம் அணிதல் .
2 – அரபாவுக்கு பகற்பொளுதில் சென்றவர்கள் சூரியன் மறையும் வரை அங்கு தரித்திருத்தல் .
3 – முஸ்தலிபாவில் தரித்திருத்தல் .
4 – மினாவில் அய்யாமுத் தஸ்ரீக்குடைய நாட்களில் தரித்திருத்தல்.
5 – ஜம்ராத்துக்களுக்கு கல்லெறிதல் .
6 – முடியை முழுமையாகச் சிரைத்தல் .அல்லது குறைத்துக் கொள்ளுதல் .
7 – தவாபுல் விதா.: எனும் பிரயாணத் தவாபு செய்து கொள்ளுதல் .

## ஹஜ்ஜூச் செய்யும் முறை .

ஒருவர் ஹஜ்ஜூச் செய்ய ஆயத்தமானவுடன் ஜனாபத்தின் கடமையான குளிப்புக் குளிப்பது போன்று நன்றாகக் குளிக்க வேண்டும் . பின்னர் தனது தலை,தாடி போன்ற உடலின் பாகங்களில் மணம் பூசிக் கொண்டு இரண்டு வெள்ளாடைகளை எடுத்து ஒன்றை உடுத்திக் கொண்டு மற்றையதைத் தோளில்

போட்டுக் கொள்ள வேண்டும் . பெண்களைப் பொறுத்த வரை அவர்கள் ஆடம்பரமாகவே, உடலின் அழகை வெளிக்காட்டும் உடைகளையோ தவிர்த்து ஏனைய தாம் விரும்பிய எந்த அடைகளையும் அணிந்து கொள்ளலாம்.

பின்னர் தமக்குக் குறிப்பிடப்பட்ட மீக்காத் எல்லைக்கு வந்ததும் அந்நேரம் பர்ழுத் தொழுகையின் நேரமாக இருப்பின் அத்தொழுகையை நிறைவேற்றி விட்டு அல்லது வுழுவுடைய ஸுன்னத் என்ற நிய்யத்தில் இரண்டு ரக்அத்துக்கள் தொழுது கொள்ள வேண்டும் . இஹ்ராமுடைய ஸுன்னத் என்ற எண்ணத்தில் தொழக் கூடாது . ஏனெனில் எங்கள் ஆத்மீக குருநாதர் நபி ( ஸல்) அவர்கள் அவ்வாறான ஓர் தொழுகையை எங்களுக்குச் சொல்லித்தர வில்லை .

தொழுது முடிந்ததும் ஹஜ் கிரியைகளை ஆரம்பிப்பதாக நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும் . தமத்து: முறைப்படி ஹஜ் செய்பவராயின் லப்பைக அல்லாஹூம்ம உம்ரதன் ( அல்லாஹ்வே உம்ராச் செய்வதற்காக உனது அழைப்புக்கு பதிலளித்து விட்டேன் ) என்று கூற வேண்டும் . இப்ராத் முறைப்படி ஹஜ் செய்பவராயின் லப்பைக்க அல்லாஹூம்ம ஹஜ்ஜன் என்றும் கிரான் முறைப்படி செய்பவர் லப்பைக்க ஹஜ்ஜன் பீ உம்ரதின் என்றும் நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும் . இந்த நிய்யத்தை ஆண் சப்தமிட்டுச் சொல்லவும் முடியும் பெண்கள் சத்தமிடாது சொல்லிக் கொள்ள வேண்டும் . மேலும் இதிலிருந்து அதிகமதிகம் தல்பியாச் சொல்வதும் ஸுன்னத்தாகும் .

பின்னர் மக்காவைச் சென்றடைந்ததும் முதல் வேலையாக தவாப் செய்ய வேண்டும் . ஹஜருல் அஸ்வத் கல் இருக்குமிடத்திலிருந்து க:பா தனது இடதுகைப் பக்கமாக இருக்குமாறு வைத்து தவாபை ஆரம்பிக்க வேண்டும்.அவ்வேளை ஹஜருல் அஸ்வத் கல்லருகில் சென்று அதனை முத்தமிட்டுக் கொள்ள அல்லது வலது கையினால் தடவிக் கொள்ள வேண்டும் .

அதுவும் முடியாவிட்டால் அதன்பக்கமாக கையினால் சமிக்கை செய்து விட்டு தக்பீர் கூறி விட்டுத் தவாபை ஆரம்பிக்க வேண்டும். அவ்விடத்தில் " அல்லாஹும்ம ஈமானன் பிக வதஸ்தீக்கன் பிகிதாபிக , வவபாஅன் பிஅஹ்திக, வத்திபாஅன் பி ஸூன்னதி நபிய்யிக " என்று கூறிக் கொண்டு ஆரம்பிப்பது ஸூன்னத்தாகும் .இதன் கருத்தாவது ...( யா அல்லாஹ் உன்னைநம்பிக்கை கொண்டதினாலும் , உனது பேச்சாகிய அல்குர்ஆனை உன்மைப்படுத்தியதற்காகவும், உனக்கு நான் அளித்த வாக்குறதியை நிறைவேற்றுசதற்காகவும், உனது நபியின் வழிமுறையைப் பின்பற்றியதற்காகவும் இந்த இபாதத்தைச் செய்கின்றேன் .)
தவாப் என்பது க.:.பாவை ஏழு தடவைகள் சுற்றி வருவதாகும் . றுக்னுல் யமானியின் பக்கமாக வரும் போது அதனை முத்தமிட்டுக் கொள்ள அல்லது கையினால் தடவிக் கொள்ள வேண்டும் .

தவாபின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஸூன்னத்துக்களில் " றமல் " உம் ஒன்றாகும் . அதாவது முதல் மூன்று சுற்றுக்களிலும் பாதச்சுவடுகளை நெருக்கமாக வைப்பதுடன் கொஞ்சம் அவசரமாக தவாப் செய்தல் . முதல்த் தடவையாகச் செய்யும் தவாபின் போதே இவ்வாறு செய்ய வேண்டும் . ஏனெனில் நபியவர்கள் தவாபின் போது முதல் மூன்று சுற்றுக்களையும் அவசரமாகவும் ஏனைய சுற்றுக்களை சாதாரணமாக நடந்தும் செய்துள்ளார்கள் . ( புகாரி முஸ்லிம் )

மேலும் இள்திபா.:. –மேலங்கியின் ஒரு புறத்தை வலது கைக் கமக்கட்டினுாடாக எடுத்து அங்கியின் இரு ஓரங்களையும் இடது தோள்ப் புயங்களுக்கு மேலாகப் போட்டுக் கொள்ளுதலும் ஸூன்னத்தாகும் . ஏனெனில் நபியவர்கள் இவ்வாறு செய்ததாக ஆதாரப் பூர்வமான ஹதீத்களில் காணப்படுகின்றது . இம்முறை

தவாபின் ஏழு சுற்றுக்களின் போது மாத்திரமே ஸுன்னத்தாகும் இதற்கு முன்போ இதற்குப் பின்னரோ இது ஸுன்னத்தல்ல .

தவாபின் போது தான் விரும்பிய பிரார்த்தனைகளை உள்ளச்சத்துடனும் பணிவுடனும் கூறிப் பிரார்த்திக்க வேண்டும் . றுக்னுல் யமானிக்கும் ஹஜருல் அஸ்வத்திற்கும் மத்தியில் வைத்து

﴿رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ﴾

[سورة البقرة، الآية:201]

" றப்பனா ஆதினா பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகிரதி ஹஸனதன் வகினா அதாபன்னார் .

( பகரா ௨01ம் வசனம் )

என்ற துஆவை ஓதிக் கொள்ள வேண்டும் .

இதன் பொருளாவது " யா அல்லாஹ் எனக்கு உலகில் நல்லதையே தருவாயாக மறுமையிலேயும் நல்லதையே தருவாயாக . நரகின் வேதனையை விட்டும் என்னைப் பாதுகாப்பாயாக ." என்பதாகும் . ஒரு சிலர் செய்வது போல் ஒவ்வொரு சுற்றுக்கும் தனிப்பட்ட துஆக்களைக் கூறிப் பிரார்த்திப்பதற்கு நபிவழியில் எவ்வித ஆதாரமும் இல்லை . இது ஒரு பித்அத் – நூதன அனுஷ்டானமாகும் .

தவாப் மூன்று வகைப்படும் . அவைகளாவன....

1 – தவாபுல் இபாளா .
2 – தவாபுல் குதூம் . ( மக்காவை அடைந்ததும் முதன்மறையாக செய்யும் தவாபு .
3 – தவாபுல் வதா.ஃ. – பிரயாணத் தவாபு .

இதில் தவாபுல் இபாளா றுக்ன் –கட்டாயக் கடமையாகும் . தவாபுல் ஸுன்னத்தாகும் . தவாபுல் வதா.ஃ. சரியான கருத்தின் படி வாஜிப் கடமையாகும் .

தவாப் செய்து முடிந்ததும் மகாமு இப்றாஹீம் என்ற இடத்திற்குப் பின்னால் சென்று இரண்டு ரக்ஆத்துக்கள் தொழ வேண்டும் . அதன் முதலாவது ரக்அத்தில் குல்யா அய்யுஹல் காபிரூன்ஸூராவையும் இரண்டாவதில் குல்ஹுவல்லாஹு அஹத் ஸூராவையும் ஓத வேண்டும் .இத்தொழுகையை சுருக்கமாக முடித்துக் கொள்வது ஸுன்னத்தாகும்.

பின்னர் ஸபா – மர்வாவுக்குச் சென்று அங்கு ஏழு தடவைகள் தவாபு ( தொங்கோட்டம் ஓட வேண்டும் .) ஸபாவிலிருந்து ஆரம்பித்து மர்வாவில் சென்று முடிக்க வேண்டும் .ஸயீ செய்வதற்காக ஸபா மலையை நோக்கி வரும்போது பின்வரும் வசனத்தை ஓதுவது ஸுன்னத்தாகும் .

﴿إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللَّهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْراً فَإِنَّ اللَّهَ شَاكِرٌ عَلِيمٌ﴾

[سورة البقرة، الآية:158]

“ நிச்சயமாக ஸபாவும் மர்வாவும் அல்லாஹ்வின் மார்க்க அனுஷ்ட்டானங்களில் உள்ளவையாகும் . ஆகவேயார் க.்.பா எனும் அவ்வீட்டை ஹஜ் அல்லது உம்ராச் செய்தாரோ அவ்விரண்டுக்கிடையில் ஸயீ செய்வது அவர் மீது குற்றமில்லை . எவர் தாமாக உபரியாக நன்மைகள் செய்கின்றாரோ நிச்சயமாக அல்லாஹ் நன்றி பாராட்டுபவன் .(அவர்களின் செயல்களை ) நன்கறிந்தவன் . ( பகரா 158 ம்வசனம் )

பின்னர் ஸபா மலையின் மேல் ஏறி கிப்லாவை முன்னோக்கி இரு கைகளையும் உயர்த்தி அல்லாஹ்வைப் புகழ்ந்து தக்பீர் சொல்ல வேண்டும் . பின்வரும் தக்பீரைக் கூறுவது உகந்தது .

“ அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஸரீக்கலஹு லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர் . லாயிலாஹ இல்லல்லாலாஹு வஹ்தஹு அன்ஜஸ வ.்.தஹு வநஸர அப்தஹு வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹு “

இந்த துஆவினை மூன்று தடவைகள் ஓத வேண்டும் .பின்னர் தான் விரும்பியவாறு உலக –மறுமை சம்பந்தப்பட்ட அனைத்து தேவைகளையும் அல்லாஹ்விடம் கேட்டுக் கொள்ள வேண்டும் .

அதன் பின்னர் மர்வா மலையை நோக்கி வர வேண்டும் . வரும் போது வசதியேற்பட்டால் பச்சை நிறத்தினால் அடையாளமிடப்பட்ட இரு இடங்களுக்கும் மத்தியில் சற்று வேகமாக ஸயீ செய்ய வேண்டும் . மர்வா மலையை அடைந்ததும் அதன் மீது ஏறி க.:.பாவை முன்னோக்கி ஸபாமலையில் வைத்துக் கூறிய தக்பீர் திக்ருகளையும் துஆக்களையும் கேட்க வேண்டும் . ஸ.:.யின் போது “ றப்பி.:.பிர்லீ வர்ஹம் இன்னக அன்த அஅஸ்ஸூல் அக்ரம் “ என்று கூறிக் கொள்வதிலும் தவறில்லை . ஏனெனில் இவ்வாறு இப்னுஉமர், இப்னு மஸ்ஊத் போன்ற ஸஹாபாக்கள் கூறியிருக்கின்றார்கள் .
ஸயீ செய்யும் போது உளூ செய்து சுத்தமாக இருப்பது நல்லது . உளுவின்றி ஸயீ செய்தாலும் கூடும் . மாதவிலக்கு ஏற்பட்ட பெண் கூட ஸயீ செய்ய முடியும் . ஏனெனில் இதற்கு உளுவுடன் இருப்பது நிபந்தனையில்லை.
ஸயீ செய்து முடிந்ததும் தமத்து .:. முறைப்படி ஹஜ்செய்பவராயின் தலைமுடியை தலையின் அனைத்துப் பகுதியிலுமாகக் குறைத்துக் கொள்ள வேண்டும் .இதக் பின் இஹ்ராம் உடையைக் களைய முடியும் . பெண் தனது முடியினை விரல் நுணியளவுக்குக் குறைத்துக் கொள்ள வேண்டும் . கிரான், இப்ராத் முறைப்படி ஹஜ் செய்பவர்கள் பெருநாளன்று ஜம்ராத்துக்கு கல்லெறியும் வரை இஹ்ராம் உடையினை விடுத்து வேறு உடை அணிய முடியாது .

பின்னர் துல்ஹஜ் மாதத்தின் எட்டாவது நாள்(யவ்முத் தர்வியா.:.) முற்பகல் நேரம் வந்ததும் தமத்து.:. முறைப்படி உள்ளவர்களும்,மக்கா வாசிகளும் மீண்டும் அந்த இடத்திலிருந்தே ஹஜ்ஜூக்காக இஹ்ராம் அணிந்து கொண்டு

ஹஜ்ஜுக்குத் தயாராக வேண்டும் . இஹ்ராம் அணியும் போது முன்னர் கூறப்பட்ட குளித்தல், சுத்தமாகுதல் போன்ற ஒழுங்குகளைப் பேணி செய்ய வேண்டும் . இஹ்ராம் கட்டுவதற்காக மஸ்ஜிதுல் ஹராத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் கிடையாது . ஏனெனில் நபியவர்களோ ஸஹாபாக்களோ அவ்வாறு செய்யவோ சொல்லவோஇல்லை .

நபியவர்கள் கூறினார்கள் ...

“தர்வியாவுடைய ( எட்டாவது ) நாள் வந்ததும் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் செய்து கொள்ளுங்கள் .

( அறிவிப்பு ஜாபிர் (றழி) புகாரி முஸ்லிம் )

நபியவர்கள் நாங்கள் இஹ்ராம் செய்யும் போது மினாவுக்கு செல்கையில் (இஹ்லால் ) இஹ்ராமை நிய்யத் செய்யுமாறு கூறினார்கள் . எனவே நாங்கள் அப்தஹ் எனும் இடத்தில் வைத்து இஹ்ராமுக்கு நிய்யத் செய்து கொண்டோம் .

( முஸ்லிம் .)

அவ்வேளை “லப்பைக்க ஹஜ்ஜன் “ ஹஜ் செய்வதற்காக அல்லாஹ்வின் அழைப்புக்கு பதிலலளித்து விட்டேன் என்று கூற வேண்டும் .

மினாவுக்குச் சென்று அங்கு ளுஹர்,அஸர், ம:ரிப்,இஷா ஆகிய தொழுகைகளை சேர்க்காம்ல் சுருக்கித் தொழுது கொள்வது ஸுன்னத்தாகும் . அரபா இரவன்று அங்கே இராத்தரித்து நிற்பதும் சிறந்ததாகும் . இதற்கு ஜாபிர் (றழி) அவர்களின் ஹதீது ஆதாரமாக இருக்கின்றது .

பின்னர் அரபா அன்று காலை சூரியன் உதித்தவுடன் ( துல் ஹஜ் ஒன்பதாம் நாள் ) அரபாவுக்குச் செல்ல வேண்டும் .அரபாவின் மஸ்ஜிதுன்நமிரா இருக்கும் இடத்தில் முடியுமாயின் இருப்பது சிறந்தது . இல்லாவிடில் அரபாவின் எந்தப் பகுதியிலேனும் இருந்து கொள்ளலாம் . பின்னர் சூரியன் உச்சியை விட்டும் சாய்ந்தவுடன் ளுஹர் , அஸர் ஆகிய இரு தொழுகைகளையும் இணைத்து – இவ்விரண்டு ரக்அத்துக்களாகச் சுருக்கித் தொழுது கொள்ள வேண்டும் . பின்னர் ஜபலுர்ரஹ்மா மலையருகில்

வந்து முடியுமாயின் மலைக்கும் கிப்லாவுக்கும் இடைப்பட்ட பகுதியில் நின்று கொண்டு – இல்லா வீடில் க.:பாவை முன்னோக்கிய வண்ணம் திக்ர்,துஆ,குர்ஆன் ஓதல் போன்றவற்றில் அதிகமதிகம் ஈடுபட வேண்டும் .
உஸாமா ( றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ...
“அரபாவில் வைத்து நான் வாகனத்தில் நபிகளாருக்குப் பின்னுக்கு இருந்தேன் .நபியவர்கள் தம் இரு கரங்களையும் உயர்த்திப் பிரார்த்தித்தார்கள் . – சூரியன் மறைந்து வானின் மஞ்சல் நிறம் மறையும் வரைக்கும் நபியவர்கள் பிரார்த்தித்த வண்ணமே இருந்தார்கள் .

( ஆதாரம் முஸ்லிம் .)

அரபா தினத்தன்று கேட்கப்படும் துஆவே துஆக்களில் மிகச் சிறப்பானதாகும் . நபியவர்கள் கூறியுள்ளார்கள் .....
“துஆக்களிலேயே மிகச் சிறப்பானது அரபா தினத்தன்று கேட்கப்படும் துஆவாகும் .நானும் எனக்கு முன்வாழ்ந்த நபிமார்களும் சொன்ன வார்த்தைகளில் மிகச் சிறந்தது லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஸரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஸையின் கதீர் என்ற வார்த்தையேயாகும் . ( முஸ்லிம் )
எனவே அரபாவில் வைத்து ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் முன்னிலையில் அழுது பிரலாபித்து தனது தேவைகளை வெளிப்படுத்தி கெஞ்சி மன்றாடி துஆப் பிரார்த்தனை புரிய வேண்டும் . இந்த அரிய சந்தர்ப்பத்தை வீணாகத் தவற விடக் கூடாது . நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ...
“அல்லாஹ் அரபா நாளைத் தவிர வேறு எந்தத்தினத்திலும் மிக அதிகமான அடியார்களை நரகிலிருந்து விடுதலை செய்வதில்லை. அன்றைய தினத்தில் அல்லாஹ் மிக நெருங்கி வந்து மலக்குகளிடம் மனிதர்களைக் கண்டு பெருமைபாராட்டிப் பேசுகின்றான் . இவர்களது தேவைகள் என்ன ? ( அவற்றை நிறைவேற்றக் காத்திருக்கின்றேன் ) என்று கூறுகின்றான் .

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

( ஆதாரம் முஸ்லிம் )

அரபாவில் கொஞ்ச நேரமாவது தரித்தருத்தல் றுக்ன் – கட்டாயக் கடமையாகும் . சூரியன் மறையும் வரை தரித்திருத்தல் பர்ழு – கடமையாகும் .

எனவே ஹாஜிமார்கள் தாம் அரபாவின் எல்லைக்குள் இருக்கின்றோமா என உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் . ஏனெனில் அனேக ஹாஜிகள் இவ்வீடயத்தில் பொடுபோக்காக இருந்து அரபாவின் எல்லைக்கு அப்பால் தங்குகின்றனர் . இவர்களது ஹஜ் இதன் காரணமாக செல்லுபடியற்றதாக ஆகி வீடும் .

பின்னர் அரபா தினத்தின் சூரியன் மறைந்ததன் பின்னர் முஸ்தலிபாவை நோக்கி அமைதியாகவும் பணிவுடனும் நடந்து செல்ல வேண்டும் . ஏனெனில் நபியவர்கள் " மக்களே அமைதி அமைதி " எனக்கூறி அமைதியைக் கடைப்பிடிக்குமாறு போதித்தி ருக்கின்றார்கள். ( ஆதாரம் முஸ்லிம் .)

முஸ்தலிபாவைச் சென்றடைந்ததும் அங்கு மஃரிபை மூன்று ரக்அத்துக்களாக பிற்படுத்தியும் இஷாவை இரண்டு ரக்அத்துக்களாக சுருக்கியும் தொழுது கொள்ள வேண்டும் .இந்த வீடயத்தில் நபியவர்கள்காட்டித்தந்த வாறே நடந்து கொள்வது ஒவ்வொரு ஹாஜிகளுக்கும் அவசியமாகும் . இஷாவுடைய நேரம் தப்பி வீடுமோ என்று அஞ்சினால் மாத்திரம் தான் இருக்கும் அதே இடத்திலேயே மஃரிப்,இஷா இரண்டையும் தொழுது கொள்ள அனுமதியுண்டு .

முஸ்தலிபாவில் அதிகம் வீழித்து இபாதத்களில் ஈடுபடாமல் நேர காலத்தோடு தூங்கிவீட வேண்டும் . ஏனெனில் நபியவர்கள் அன்றைய இரவுஅவ்வாறு அமல் இபாதத்கள் ஏதும் செய்ய வில்லை .

ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ...

"நபியவர்கள் முஸ்தலிபாவுக்கு வந்ததும் மஃரிபையும் இஷாவையும் ஒரு அதானும் இரு இகாமத்களும் கூறித் தொழுது

முடித்தார்கள் . அவ்விருதொழுகைகளுக்கு மத்தியில் கூட தஸ்பீஹ் செய்ய வில்லை . பின்னர் ஒருக்கனித்த வண்ணம் பஜ்ர் வரை தூங்கி விட்டார்கள் .

(ஆதாரம் முஸ்லிம் .)

நோயாளிகள், வயோதிபர்கள் போன்றோர் நள்ளிரவின் பின்னர் முஸ்தலிபாவை விட்டு மினாவுக்குக் கல்லெறியச் செல்வதற்கு அனுமதியுண்டு.மேற்படி தகுந்த காரணங்கள் ஏதுமில்லாதவர்கள் பஜ்ர் வரை முஸ்தலிபாவில் இருந்தே ஆக வேண்டும் . அனேக ஹாஜிகள் செய்வது போன்று தமது வசதிக்காக கல்லெறியவென நேரகாலத்தோடு முஸ்தலிபாவை விட்டு மினாவுக்குச் செல்லுதல் நபிவழிக்கு மாற்றமானதாகும் .

முஸ்தலிபாவில் சுபஹ் தொழுகையை முடித்தன் பின்னர் மஸ்அருல் ஹராமுக்கு அருகாமையில் நின்று கிப்லாவை முன்னோக்கிய வண்ணம் பொழுது வெளிக்கும் வரை அதிக நேரம் இரு கைகளையும் உயர்த்திய வண்ணம் துஆவில் ஈடுபட வேண்டும் . இதனை முஸ்தலிபா எல்லைக்குள் நின்று கொண்டு செய்தாலே போதுமானது . ஏனெனில் நபியவர்கள் ...
" இவ்விடத்தில் நான் தரித்து நிற்கின்றேன் . (ஜமஉ) முஸ்தலிபா அனைத்துமே தரித்து நிற்கும் இடமே" என்று கூறியிருக்கின் றார்கள் . (ஆதாரம் முஸ்லிம் .)

இதன் பின்னர் ஹாஜிகள் – யவ்முன்னஹ்ர் – தினமாகிய அன்று மினாவை நோக்கிச் சென்று மக்காவை அடுத்திருக்கும் பெரிய ஜம்ராவாகிய ஜம்ரதுல் அகபாவுக்கு ஏழு தடவை கல்லடிக்க வேண்டும் . ஒவ்வொரு கற்களும் கடலையை விடக் கொஞ்சம் பெரியதான அளவில் இருக்க வேண்டும் . ஜம்ராவுக்கு எந்தப் பக்கத்தில் நின்று கல்லெறிந்தாலும் கூடும் என்பது அறிஞர்களின் ஏகோபித்த முடிவு . கஃபாவை தனது இடப் பக்கத்திற்கும் மினாவை வலப்பக்கத்தற்கும் ஆக்கிக் கொண்டு கல்லெறிவதே

மிகச் சிறந்ததாகும் .

இப்னு மஸ்ஊத் ( றழி) அவர்கள் ஜம்ரத்துல் அகபாவுக்கு வந்து சேர்ந்ததும் க.ஃபாவை தனது இடப்பக்கத்திற்கும் மினாவை வலப்பக்கமும் ஆக்கிக் கொண்டு ஏழு தடவைகள் கல்லெறிந்தார்கள் . பின்னர் இப்படித்தான் ஸூரத்துல் பகரா அருளப்பட்டவரான நபியவர்கள் செய்யக் கண்டேன் என்று கூறினார்கள் . ( ஆதாரம் புகாரி முஸ்லிம் .)

பெரிய கற்களாலோ,செருப்பு,காலணிகளாலோ எறிவது கூடாது .ஜம்ரத்துல் அகபாவுக்கு கல்லெறிவதுடன் ஹாஜிகள் தல்பியாச் சொல்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும் .

ஹாஜி முதலில் கல்லெறிந்து விட்டு அப்பால் குர்பானியை அறுத்து விட்டு பின்னர் தலை முடியை முற்றாகச் சிரைத்து அல்லது குறைத்துக் கொள்வதே நபிவழியாகும் . முடியை முற்றாகச் சிரைத்துக் கொள்வதே மிகச் சிறந்தது .ஏனெனில் நபியவர்கள் முற்றாகச் சிரைத்துக் கொள்பவர்களுக்கு மூன்று தடவைகளும் குறைத்துக் கொள்பவர்களுக்கு ஒரு தடவையும் துஆச் செய்துள்ளார்கள் .( ஆதாரம் புகாரி முஸ்லிம் .)

இதன் பின்னர் ஹாஜி தவாபுல் இபாளா செய்வதற்காக மக்காவுக்குச் செல்ல வேண்டும் .

இந்த நான்கு காரியங்களையும் இந்த முறைப்படி செய்வதே நபிவழியாகும் .

ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ...

“நபியவர்கள் ஜம்ரத்துல் அகபா அருகில் வந்து ஏழு தடவைகள் ஒவ்வொரு தடவைகளும் தக்பீர் கூறியவர்களாக சிறிய கற்களயாள் எறிந்தார்கள் . பின்னர் அறுக்குமிடத்திற்குச் சென்று தமது குர்பானியை அறுத்தார்கள் .பின்னர் வாகனத்தில் ஏறி மக்காவுக்குச் சென்று தவாபுல் இபாளா செய்து விட்டு அங்கேயே ளுஹரைத் தொழுதார்கள் . ( முஸ்லிம் )

இந்த நான்கு காரியங்களையும் முன்பின்னாக்கிச் செய்தாலும் குற்றமில்லை .

“ ஹஜ்ஜின் போது நபியவர்களிடம் மக்கள் வந்து பத்வாக் கேட்டார்கள் . அன்றைய தினம் முற்படுத்தி – பிற்படுத்தி செய்யப்பட்ட எல்லா அமல்களுக்கும் நபியவர்கள் “ பரவாயில்லை செய்து கொள்ளலாம் “ என்றுதான் பதிலளித்தார்கள் .

( புகாரி – முஸ்லிம் )

க.:.பாவுக்குச் சென்று தபாபுல் இபாளாவை முடித்ததும் தமத்து.:. முறைப்படி ஹஜ் செய்தவராயின் தபாபுக்குப் பின் ஸயீ.:. செய்து கொள்ள வேண்டும் . ஏனெனில் அவர் முன்னர் செய்த ஸயீ.:. அவரது உம்ராவுக்குரியது . இப்ராத் அல்லது கிரான் முறைப்படி ஹஜ் செய்தவராயின் அவர் முதலில் ஸயீ.:. செய்திருப்பின் மீண்டும் அவர் ஸயீ.:. செய்ய வேண்டியதில்லை .

ஜாபிர் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் ...

“நபியவர்களோ அவர்களது தோழர்களோ தாம் செய்த முதலாவது ஸயீயைத்தவிர இரண்டாம் தடவை ஸபா –மர்வாவுக்கிடையில் ஸயீ.:. செய்ய வில்லை . ( ஆதாரம் முஸ்லிம் .)

அய்யாமுத் தஸ்ரீக் நாட்களான பதினொன்று பன்னிரெண்டு பதின் மூன்றாம் நாட்கள் கல்லெறியும் நாட்களாகும் . அவசரமாகச் செல்லவிருப்பவர்கள் பதினோராம் பனிரெண்டாம் நாட்கள் கல்லெறிந்த பின் செல்ல முடியும் .

அல்லாஹ் கூறுகின்றான் ....

﴿وَاذْكُرُوا اللَّهَ فِي أَيَّامٍ مَعْدُودَاتٍ فَمَنْ تَعَجَّلَ فِي يَوْمَيْنِ فَلا إِثْمَ عَلَيْهِ وَمَنْ تَأَخَّرَ فَلا إِثْمَ عَلَيْهِ لِمَنِ اتَّقَى﴾ [سورة البقرة، الآية:203]

“( மினாவில் தங்கியிருந்து ) எண்ணிவிடப்பட்ட (மூன்று) நாட்களில் அல்லாஹ்வை நினைவு கூர்ந்திருங்கள் . எவர் இரண்டு நாட்களில் அவசரப்பட்டுப் (புறப்பட்டு விட்டால் ) அவர் மீது குற்றமில்லை . எவர் மூன்றாம் நாளும் பிற்படுத்தி ( தங்கி)யிருக்கின்றாரோ அவர்மீதும் குற்றமில்லை . (இது ) அல்லாஹ்வைப் பயந்து நடப்பவர்களுக்காயிருக்கும் .

(பகரா 203 ம் வசனம் .)

ஏனைய மினாவுடைய நாட்களில் அல் கைப் பள்ளிக்கு அருகாமையில் இருக்கும் ஜம்ரத்துஸ் ஸூக்ராவிலிருந்து கல்லெறிய ஆரம்பித்து பின் ஜம்ரத்துல் வுஸ்தாவுக்கும் அப்பால் ஜம்ரத்துல் அகபாவுக்கும் ஏழேழு கற்கள் வீதம் கல்லெறிய வேண்டும் . ஒவ்வொரு கல்லெறியின் போதும் தக்பீர் சொல்ல வேண்டும் . ஜம்ரத்துல் ஸூக்ராவுக்கருகில் நிற்கையில் கிப்லாவை முன்னோக்கி ஜம்ராத்தை இடப்பக்கமாக ஆக்கி நீண்ட நேரம் பிரார்த்தனையில் ஈடுபடுவது ஸூன்னத்தாகும் . இரண்டாவது ஜம்ராவுக்கருகில் வரும் போது கிப்லாவை முன்னோக்கி ஜம்ராவை தனது வலது பக்கமாக ஆக்கிய வண்ணம் நீண்ட நேரம் துஆவில் ஈடுபடுவது நபிவழியாகும் . ஜம்ரத்துல் அகபாவுக்குக் கல்லெறிந்த பின்னர் அங்கே தரித்து நிற்காது சென்று விட வேண்டும் .

சூரியன் உச்சியை விட்டும் சாய்ந்தன் பின்னரே கல்லெறியும் நேரம் ஆரம்பிக்கின்றது .
இப்னு உமர் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் ...
" நாங்கள் சூரியன் உச்சை விட்டும் சாயும் நேரத்தை எதிர்பார்த்த வண்ணம் காத்திருப்போம் . அந்த நேரம் வந்ததும் கல்லெறிய ஆரம்பிப்போம் . ( ஆதாரம் புகாரி)

அறிஞர்களின் ஏகோபித்த கருத்தின் படி கல்லெறிவதற்கான கடைசி நேரம் அய்யாமுத் தஸ்ரீக் பதின்மூன்றாம் நாள் சூரிய அஸ்த்தமனத்துடன் முடிவடைகின்றது . இதுவரைக்கும் கல்லெறியாமல்ப் பிற்படுத்தியவர்கள் இதன் பின் கல்லெறிய முடியாது . மாறாக தண்ட குற்றமாக குர்பானிதான் கொடுக்க வேண்டும் .
பதினோராம் ,பனிரண்டாம் இரவுகளில் ஒவ்வொருவரும் மினாவில் தங்கியிக்க வேண்டும் .பதிமூன்றாம் இரவு சூரியன் மறையும் வரை அங்கு இருந்தால் அன்றிரவும் அங்கேயே தரித்திருக்க வேண்டும் .

பின் அடுத்த நாட்காலை கல்லெறிந்து வீட்டே மினாவை வீட்டு வெளியேற முடியும் .
ஹாஜியானவர் மக்காவை வீட்டும் வெளியேற விரும்பினால் தவாபுல் வதா:–பயணத் தவாபு செய்து முடித்த பின்னரே வெளியேற வேண்டும் . ஏனெனில் இது ஹஜ்ஜின் வாஜிப்களில் ஒன்றாகும் . எனினும் மாத விலக்கு ஏற்பட்ட பெண்களுக்கு இது செய்ய வேண்டிய கடமையில்லை.
நபியவர்கள் கூறியிருக்கின்றார்கள் ...
“ எவரும் இறுதியாக க:பாவை தவாபு செய்யாமல் மக்காவை வீட்டு வீட்டுச் செல்ல வேண்டாம் .”
மேலும் ஹதீதில் வருவதாவது ...
“ மாதவிலக்கு ஏற்பட்ட பெண்களுக்கு இந்த விடயத்தில் நபியவர்கள் விதிவிலக்களித்தார்கள் .
( ஆதாரம் மாலிக் முஸ்லிம் )
அதிகமான அறிஞர்களின் கருத்துப்படி தவாபுல் இபாளாவை பிரயாணமாகும் வரைபிற்படுத்திச் செய்பவர் தனியாக பயண தவாப் செய்ய வேண்டியதில்லை .இரண்டுக்கும் சேர்த்து ஒரே தவாபே போதுமானதாகும் .
ஹஜ்ஜிலிருந்து திரும்பி வந்தவர்கள் பின்வரும் துஆவை ஓதுவது விரும்பத்தக்கது .
இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ...
“நபியவர்கள் யுத்தம் ,அல்லது ஹஜ் உம்ராவிலிருந்து திரும்பி வந்தால் ஒரு உயரமான இடத்திலிருந்து தக்பீர் சொல்வார்கள் . பின்னர் பின்வருமாறு கூறுவார்கள் ...
“ லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஸரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஸையின் கதீர் . ஆயிபூன தாயிபூன ஆபிதூன லிறப்பினா ஹாமிதூன் . ஸதகல்லாஹு வ:தா: வநஸர அப்தஹு வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹு “

**இஸ்லாமும் அதன் அடிப்படையும்**

**வஸ்ஸலாம் .**

பொருளடக்கம் . பக்கம்

1 – அறிவியல் ஆய்வு மைய அதிபர் அவர்கள் வழங்கிய முன்னுரையின் பெயர்ப்பு .................. 01

2 – இஸ்லாத்தின் அடிப்படை (சுருக்கம் ) ............ 03

3 – .இஸ்லாத்தின் முதல் அடிப்படை அம்சம் .........04

4 – லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதன் அர்த்தம் என்ன? .................................................................04

5 – சாட்சி சொல்வதற்கான நிபந்தனைகள் .............07

6 – தவ்ஹீதின் மூன்று வகைகள் ..........................10

7 – முஹ்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராகும் என்று சாட்சி சொல்வதன் அர்த்தம் .....................13

8 – இரு கலிமாக்களின் அகமியங்கள் ....................17

9 – தொழுகை என்றால் என்ன ?...........................18

10 – தொழுகையின் முக்கியத்துவம் ........................20

## இஸ்லாமும் அதன் அடிப்படையும்

11 – தொழுகை யார் மீது கடமையாகின்றது ............25

12 – தொழுகையை விட்டவனின் நிலை ............26

13 – தொழுகையின் நிபந்தனைகள் .......................26

14 – தொழுகைக்கான நேரங்கள் ...........................27

15 – தொழுகையின் ரக்அத்துக்களின் எண்ணிக்கை......28

16 – தொழுகையின் பர்ழுகள் (கட்டாயக் கடமைகள் .).30

17 – தொழுகையிக் வாஜிப்கள் (கடமைகள் )................30.

18 – கூட்டுத் தொழுகை வர்ணனை...............................31

19 – தொழுகையை முறிக்கும் காரணிகள் ..................32

20 – தொழக் கூடாத நேரங்கள் ..........................34

21 – தொழும் முறை ..........................................35

22 – இஸ்லாத்தின் மூன்றாவது அடிப்படை அம்சம் . ஸக்காத் .................................................38

23 – ஸக்காத் என்றால் என்ன? ..............................39

24 – இஸ்லாத்தின் பார்வையில் ஸக்காத் ..................41

25 – ஸக்காத் கடமையாவதற்கான நிபந்தனைகள் ....43.

26 – ஸக்காத் கடமையாகும் பொருட்கள் ...................44

௨7 – ஸக்காத்தை யாருக்குக் கொடுக்க வேண்டும்.?.46.

௨8 – ஸக்காத்துல் பித்ர் – அது கடமையாக்கப்பட்ட
– தன் நோக்கம் ....................................58

௨9 – ஸக்காத்துல் பித்ரின் சட்டம் ,அதன் அளவு, அதை எப்போது கொடுக்க வேண்டும் ,?யாருக்குக் கொடுக்க வேண்டும் .?....................................................59

இஸ்லாத்தின் நான்காவது கடமை நோன்பு.

30 – நோன்பின் சட்டங்கள் ..................................60

3௨ – நோன்பின் அகமியங்கள் ..............................61

33 – நோன்பின் ஸுன்னத்துக்களும் நோன்பாளி கடைப்பிக்க
. வேண்டிய ஒழுங்குகளும் ..............................64.

34 – நோன்பை முறிக்கக் கூடியவைகள் ....................66.

35 – நோன்பின் பொதுவான சட்டங்கள் ...................68

இஸ்லாத்தின் ஐந்தாவது கடமை

36 – ஹஜ் என்றால் என்ன ? ...................................7௨

37 – இஸ்லாத்தின் பார்வையில் ஹஜ்......................73.

38 – ஹஜ்ஜின் சிறப்பும் அகமியங்களும் ........................74

39 – ஹஜ் கடமையாவதற்கான நிபந்தனைகள் .............75

40 – ஹஜ் சம்பந்தப் பட்ட சில சட்டங்கள் ................77

41 – ஹஜ்ஜின் றுக்ன்கள் ( கட்டாயக் கடமைகள் .)........79

42 – மூன்று வகையான ஹஜ்ஜின் வணக்க முறைகள் ....83
தமத்து:., கிரான் , இப்ராத் .

43 – இஹ்ராம் தரித்ததன் பின் தடுக்கப்பட்ட
. வீடயங்கள்....................................................84

44 – ஹஜ்ஜின் வாஜிப்கள் ( கடமைகள் .)..............88.

45 – ஹஜ்ஜுச் செய்யும் முறை ( வீபரம் ) ..............89

46 – ஹஜ்ஜின் ஒழுக்க விதிகள் ...........................95.

– – – – – – – – – – – – – – – – – – – – – – – – – –

## أركان الإسلام بالتاميلية